விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 11 ஞாயிற்றுக்கிழமை (27.07.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 220

# அரசியல் தீர்வைப் பெறுவதற்கு சர்வதேச விசாரணை முதல் நகர்வு

## பிரி.தொழிற்கட்சி தலைவர் தெரிவிப்பு



*(லண்டன்)*

***இலங்கை இனப்பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு சர்வதேச விசாரணை முதல் நகர்வாக அமையும் என பிரித்தானிய தொழிற் கட்சித் தலைவர் எட் மிலிபான்ட் தெரிவித்தார்.***

இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட 1983 கறுப்பு ஜூலையை நினைவு கூர்ந்து பிரித்தானிய தொழிற்கட்சியின் தலைவர் எட் மிலிபான்ட் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கவலைக்குரிய இந்த வன்முறைகளால் தமிழர்களான ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் உயிரிழந்ததையும், இடம் பெயர்ந்ததையும், புலம்பெயர்ந்ததையும் நினைவு கூரும் வகையில் இந்த மாதம் கறுப்பு ஜூலையாக நினைவுகூரப்படுகிறது.

இந்த வன்முறைகளின் போது எவ்வளவு பேர் கொல்லப்பட்டனர் என்ற எண்ணிக்கை சரியாகத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், இந்த வன்முறைகளின் நினைவுகள் இன்னமும் உயிர்வாழ்கின்றன. அதை நாம் ஒரு போதும் மறந்துவிடக் கூடாது என்பது முக்கியம்.

கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக

23ஆம் பக்கம் பார்க்க....

## பொது வேட்பாளராக ஷிராணியை களமிறக்குவதற்குத் திட்டம்!

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை களமிறக்க திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிடுமாறு ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மாதுலுவே சோபித தேரர் தலைமையில் அண்மையில் கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றின்போது இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பொது வேட்பாளராக போட்டியிடக் கூடிய அடிப்படைத் தகைமைகளை ஷிராணி பண்டாரநாயக்க கொண்டிருப்பதாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எந்தவொரு அரசியல் கட்சியுடனும் தொடர்பு பேணாத பக்கச்சார்பற்ற ஓர் பொது வேட்பாளராக ஷிராணி

23ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸ் விடுதியில் குண்டு வெடிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொலிஸ் நிலைய விடுதியில், இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பொலிஸ் விடுதிக் கட்டடம் சேதமடைந்துள்ளது. பொலிஸ் வாகனம் ஒன்றும் சேதத்திற்குள்ளானது என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த வெடிப்புச் சம்பவம் நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. எனினும இதன்போது எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்று முல்லைத்

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் மயமாகும் ஐக்கிய நாடுகள் சபை!

### அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐ.நா. சபை அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது. அதன் அணுகுமுறை குறித்து அனைத்துலக சமூகம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

பலஸ்தீன - இஸ்ரேல் போரை நிறுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு ஆதரவளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்றில் நேற்று

24ஆம் பக்கம் பார்க்க....

## கடமைகளை சரிவரச் செய்யுங்கள் அமைச்சர்களுக்கு எச்சரிக்கை!

### விடுத்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டி வரும் என ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார். அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல்களுக்கு முன்னதாக விருப்பமின்றி பாராளுமன்றத் தேர்தல்களை நடத்த நேரிடும். எதிர்வரும் 2015-ம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல்களை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எனினும் சில அமைச்சர்கள் பிரதி அமைச்சர்களின் நடவடிக்கைகள் காரணமாக பாராளுமன்றத் தேர்தல்களை முன்னதாக நடத்த நேரிடலாம் என ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சுப் பதவிக்கான கடமைகளை செய்யாது சிலர் அரசாங்கத்தை விமர்சனம் செய்வதில் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டுவது தொடர்பில் தமக்கு எவ்வித பிரச்சினையும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுக்கு தாம் ஆற்றி வரும் சேவைகள் குறித்து மக்களுக்கு தெளிவிருப்பதாகவும் இதனால் தேர்தல்

24ஆம் பக்கம் பார்க்க....

## புலிகள் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறினேனா?

### சர்வதேச சட்ட நிபுணர் நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது விடுதலைப் புலிகளே போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என்று தான் உரையாற்றியதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றில் வெளியான செய்தியை சர்வதேச சட்ட நிபுணர் சேர் டெஸ்மன் டி சில்வா நிராகரித்துள்ளார்.

காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுக்கு ஆலோசனைகளை வழங்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட சர்வதேச நிபுணர் குழுவின் தலைவராக டெஸ்மன் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

2011ஆம் ஆண்டு படையினரால் நடத்தப்பட்ட போர் அனுபவக் கருத்தரங்கில் சேர் டெஸ்மன டி சில்வா உரையாற்றிய போது, இறுதிக்கட்டப் போரில் பெருமளவு மககள் கொஈல்லப்பட்டமைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்றும், அவர்கள் பாரிய போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாகவும் கூறியதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றின் கட்டுரை ஒன்றில் கூறப்

23ஆம் பக்கம் பார்க்க....

SISIL WORLD
கோடைகாலத்தை குளிர்மையானதாக்க உலகத்தரம்வாய்ந்த
SISIL, WELLING, KDK, ROWENTA, SYMPHONY
எயார்கூலர் மற்றும் மின்விசிறிகள்
120 நாள் வட்டி இன்றிய கொடுப்பனவு
விசேட விலைக் கழிவுகள்
3வருட நீடித்த உத்திரவாதம்
இல-106, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் 021-2219291
இல-125, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் 021-2242335
இல-17/3, கண்டி வீதி, கிளிநொச்சி 021-2283755
(C-7991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல்

பான் ஏஷியா வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வரும் ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல் எதிர்வரும் 29.07.2014 காலை 9.30 மணியளவில் யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

**இக்கடனின் சிறப்பம்சங்களாவன**

- ரூபா 500,000/- வரையான கடன் தொகை
- மிக இலகுவான செயற்படுத்தல்
- பிணைகள், பொறுப்புக்கள் தேவையற்றது.
- 70 வயது வரையான கடன் மீளச் செலுத்தும் வசதி

**நிபந்தனைகள்**

- ரூபா 10,000/- இற்கு அதிகமான ஓய்வூதியம் பெறுபவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- கடன் பாதுகாப்புத் திட்டம் ஒழுங்கு செய்யப்படும்.

(ஒழுங்குகள் அனைத்தும் வங்கியினால் செய்யப்படும்)

எமது வங்கியில் ஏற்கெனவே கடன் பெற்றவர்களும் மேலதிகக் கடன் தொகையைப் பெறும் வாய்ப்புகள் உண்டு.

இவை பற்றிய மேலதிக விபரங்களை கலந்துரையாடலில் பங்குபற்றி அறிந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்

| | |
|---|---|
| கலந்துரையாடல் நடைபெறும் இடம் | யாழ்.இந்துக் கல்லூரி |
| காலம் | 29.07.2014 காலை 9.30 மணி |
| மேலதிக விபரங்களுக்கு | பான் ஏஷியா வங்கி<br>570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.<br>0214925118,0214925119,0214976777 |

(C-7999)

பான் ஏஷியா பேங்கிங் கோபரேஷன் பி.எல்.சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படும் ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும்.
Fitch Rating "BBB (lka)"

பான் ஏஷியா வங்கி


## 11-ம் ஆண்டு நினைவஞ்சலி

### தியோடர் கோமஸ் கிளரன்ஸ் கோமஸ்
(ராஜா)

பிறப்பு 14.09.1974

இறப்பு 27.07.2003



ஆண்டுகள் பதினொன்று கடந்தாலும்
ஆழ் மனதில் நீ எமை விட்டுப் போன
ஆறாத்துயர் இன்னும் மாறவில்லையே!
அனைவரையும் அன்போடு அரவணைத்து
அன்பினால் அத்தனையும் செய்யச் சொல்லிய
அந்த கருணையுள்ளம் இன்னும்
மாறவில்லையே
தித்திப்பாய் பேசிக் கொண்டே
தினம்தோறும் எமை வழிப்படுத்தி
திடீரென எமைவிட்டு சென்றாயே!
காலங்கள் கடுகதியாய் ஓடிச் சென்றாலும்
காட்டிய அன்பு இன்னும் மாறவில்லையே
கடவுளை கையெடுத்து கும்பிடுகிறோம்
கருணையுள்ளம் படைத்த உன் ஆன்மா
கடவுள் சந்நிதியில் பாதமலர்
காணிக்கையாக்கிடவே!

(சி-8052)

தியோடர் கோமஸ்
ஆரோக்கிய சீலி
தாய், தந்தை
திருச்சி

தாசன் மாமா
மொறாயஸ் மூக்குக் கண்ணாடியகம்
105, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.


## நடிகர் திலகத்தின் 13-ம் ஆண்டு நினைவு தினம் 21.07.2014
### வெள்ளிவிழா நாயகன்

**யாழ்.நகரில் 3 வெள்ளி விழா படங்கள்**

| | | |
|---|---|---|
| வசந்தமாளிகை | உத்தமன் | பைலட் பிறேம்நாத் |
| ஒரு வருடம், | 192 நாட்கள் | 296 நாட்கள் |
| வெலிங்டன், லிடோ | ராணி திரையரங்கு | வின்சர் |



யாழ்.நகரில் வேறு எந்தப்படமும் வெள்ளிவிழா ஓடியதாக வரலாறு இல்லை.
தமிழ்நாட்டில் 2-வது வெளியீட்டில் 162 நாட்கள் ஓடிய ஒரே திரைப்படம் வசூல் மன்னன் சிவாஜியின் கர்ணன்.



## கடை இடமாற்றம்

1972 இல் திரையிடப்பட்டு ஒரு வருடம் ஓடி மக்கள் பார்த்த தொகையிலும் சரி வசூலிலும் சரி இன்றுவரை முறியடிக்க முடியாத பல சாதனைகளை ஏற்படுத்திய வசந்த மாளிகை புகழ் வெலிங்டன் திரையரங்கு முன்பாக 1962 ஆம் ஆண்டு முதல் இயங்கி பின் இல. 546, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த மொறாயஸ் மூக்குக் கண்ணாடியகம் தற்போது O.P.D. முன்பாக இல. 516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தங்கள் சேவையினை மேற்கொண்டு வருகின்றோம் என்பதனை எங்கள் வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

முகாமையாளர். தொ.பே.இல : 0212227893


# மரண அறிவித்தல்கள்



## திருமதி கனகசிங்கம் நகுலேஸ்வரி

முல்லைத்தீவை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் நகுலேஸ்வரி நேற்று (26.07.2014) அதிகாலை இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்ற சண்முகமுதலியார் - அழகம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கனகசிங்கம் (ஓய்வுபெற்ற நீர்பாசனப் பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா புனிதவதி மற்றும் வைத்திய கலாநிதி செல்வி புஸ்பம் சண்முகம் (ஓய்வுபெற்ற யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர்) இன் சகோதரியும், பாஸ்கரதேவன் (பொறியியலாளர்- அமெரிக்கா), அமரதேவன் (கணக்காளர் - கொழும்பு), கலாவதி, வசந்தகுமார் (யாழ். மாநகர சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசாந்தினி (அமெரிக்கா), தேவகுமாரி (கொழும்பு), மோகனசுந்தரம் (யாழ்.மாநகரசபை), நந்தினி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற Dr.யோகரத்தினம் அவர்களின் மைத்துனியும், சஞ்சீவ் (அமெரிக்கா), சிவானி (அமெரிக்கா), ஞானகி (அமெரிக்கா), பிரணவன் (கொழும்பு), பவ்ஹரினி, திவ்யபாரதி, ஷந்தனா, ஹம்சானந்த் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று 10 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

465/24, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(7122)

தகவல் :
குடும்பத்தினர்

## திருமதி கணேசலிங்கம் கலாதேவி



யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி D.08, ஆனந்தன் பண்ணை உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் கலாதேவி அவர்கள் 24-07-2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சாம்பசிவம் (உருத்திரபுரம்), இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், கந்தையா (உருத்திரபுரம்) பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், கணேசலிங்கம் (S.M.O) அவர்களின அன்பு மனைவியும், யதார்த்திகா, பிராத்தன், காலஞ்சென்ற கவியார்த்திகா, நிதார்த்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குணராஜன்(ருஞ்சன்- கனடா) அவர்களின் பாசமிகு சகோதரியும், பிரியசாந்தா, காலஞ்சென்ற புவனேந்திரராஜா(சிவா), விக்கினேஸ்வரன்(கிருபா- கனடா), மகேஸ்வரன்(கமல்- பிரான்ஸ்), குககுமாரராஜா(குகா- M.P.C.S- கிளிநொச்சி), பிரபாகரன்(பிரபா- உருத்திரபுரம்), தட்சனேஸ்வரி(செல்வி- கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், தர்மநாயகம், கோணேஸ் (இந்தியா), பவானி (கனடா), பவா (பிரான்ஸ்), வித்தியா, கவிதா ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரியும், கஜானி, யாழினி, பிரணவன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (27-07-2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் உருத்திரபுரம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
கணேசலிங்கம் (0773414373),
குகா (0779157633),
பிரபா (0774303426,
சாந்தா (0778244962),
ரஞ்சன் (0776183951)

D-08 ஆனந்தன் பண்ணை,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.
(7129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆட்கடத்தல்காரர்களின் பொய்களுக்கு ஏமாந்து
நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை வீணாக்க வேண்டாம்.

- வீசா இல்லாமல் படகில் ஏறும் நீங்கள் அவுஸ்திரேலியாவைச் சென்றடைய மாட்டீர்கள்.
- குடும்பத்தினர், சிறுவர்கள், ஆதரவற்ற பிள்ளைகள், கல்வித்தகைமை கொண்டவர்கள் அல்லது விசேட தகுதிகளையுடையோர் அனைவருக்குமே இச்சட்டம் பொருந்தும்.
- நீங்கள் யாராக இருந்தாலும், எங்கிருந்து வந்தாலும் அவுஸ்திரேலியாவில் குடியமர முடியாது.

விசா இல்லாது படகு மூலம்

Australian Government

அவுஸ்திரேலிய அரசாங்கம் விடுக்கும் மேலதிக விபரங்களுக்கு www.australia.gov.au/novisa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றத்தில் உதவக் கோரி சம்பூர் மக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

(கொழும்பு)

**திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேற அனுமதி மறுக்கப்பட்டுள்ள குடும்பங்கள் தமது மீள்குடியேற்றத்திற்கு உதவுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் பொருளாதார முதலீட்டு வலயத்திற்கு என அடையாளம் காணப்பட்ட காணிகள் தவிர ஏனைய காணிகளில் மீள்குடியேற்றத்திற்கு உதவுமாறு சம்பூர் மக்கள் வலியுறுத்தி கேட்டுள்ளனர்.**

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ரஞ்சித் டி சில்வா ஊடாக ஜனாதிபதிக்கு இந்த மனு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எட்டு வருடங்களுக்கு மேலாக தீர்வு இன்றி தொடரும் தங்களது மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகாண ஜனாதிபதி உதவ வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு போர் காரணமாக தமது பிரதேசத்திலிருந்து வெளியேறிய சம்பூர் பிரதேச மக்கள் போர் முடிவடைந்த பின்னரும் மீள்குடியேற்றம் மறுக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாம்கள் உட்பட தற்காலிக குடியிருப்புகளிலே தங்கியுள்ளார்கள்.

சொந்த மண்ணில் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்ட காலந்தொட்டே இவர்கள் போராட்டங்களை நடத்தியுள்ள போதிலும் சாதகமான பதில்கள் இதுவரை கிடைக்கவில்லை.

சம்பூர் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயம் என்றும் பொருளாதார முதலீட்டு வலயம் என்றும் வர்த்தமானி பிரகடனம் மூலமாக அரசாங்கத்தினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# மசாஜ் நிலையம் சோதனை; நான்கு பெண்கள் கைது!

(கொழும்பு,)

கொழும்பு, தெஹிவளையில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் நடத்தி வந்த விபச்சார விடுதியில், குற்றப்புலனாய்வு பிரிவினர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திடீர் சோதனை ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது சோதனையிடப்பட்ட விடுதியில் பாலியல் தொழிலில் ஈடுபட்டிருந்த மூன்று பெண்களும் விடுதி உரிமையாளரும் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக கொஹுவலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நேற்று சனிக்கிழமை கங்கொடவில நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (6)

# வரலாற்று பொக்கிஷ பெட்டகம் எஸ்.பி.திஸாநாயக்கவின் வீட்டில்

(கொழும்பு)

கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த இராஜசிங்க மன்னனுக்கு சொந்தமான கருவூலப் பெட்டகம் ஒன்று ஹிங்குரான்கெத்தவில் உள்ள உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு சொந்த மான வீடு அமைந்திருக்கும் பகுதி யில் புதைக்கப்பட்டுள்ளதாக அகழ் வாராய்ச்சி திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி செனரத் திஸநாயக்க தகவல் வெளியிட்டுள்ளார்.



இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், இலங்கையின் வரலாற்றை எழுதிய றொபேர்ட் நொக்ஸின் நூலிலேயே இந்தத் தகவல் கிடைத்தது எனக் கூறிய அவர், முன்னர் அகழ்வாராய்ச்சித் திணைக்களத்தின் தலைவராக இருந்த ஈ.ஏ.பி. தெரணியகல இங்கு ஆராய்ச்சி செய்ய முற்பட்டபோதும் அதற்கு அமைச்சர் திஸநாயக்க அனுமதிக்கவில்லை என்று கூறினார்.

மேலும் திஸநாயக்கவின் வீடு இருக்கும் இடம் முன்னர் இராஜசிங்க மன்னனின் கருவூல அதிகாரியின் வாசஸ்தலமாக இருந்தது என்றும் றொபேர்ட் நொக்ஸின் குறிப்பின்படி அந்த இடத்தில் இராஜசிங்க மன்னன் பயன்படுத்திய ஆயுதங்கள், உடைகள், ஆபரணங்கள் மற்றும் வேறு பொருட்கள் இருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இப்போது மீண்டும் அந்த இடத்தை ஆராய்ச்சி செய்ய அமைச்சர் திஸநாயக்காவிடம் அனுமதி கோரியுள்ளதாகவும் கிடைக்கும் பட்சத்தில் நாட்டுக்கு சொந்தமான பெரும் வரலாற்றுப் பொக்கிஷம் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். இராஜசிங்க மன்னன் கி.பி. 1635 தொடக்கம் 1687 வரை கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)


**யாழ் மண்ணில் லண்டன் கருவள மருத்துவ நிபுணர்**

யாழ் மண்ணில் பிறந்து உயர்கல்வி மற்றும் பயிற்சியும் பெற்று ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மருத்துவ நிபுணராய் பணியாற்றிய **வைத்திய கலாநிதி எம். சதானந்தன் 35 வருடங்கள்** மருத்துவ சேவை அனுபவத்துடன் இப்போது தாய்நாட்டுக்கு சேவையாற்ற இலங்கை திரும்பியுள்ளார். அவர் **கருவளம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், கருப்பை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், மலட்டுத்தன்மை மற்றும் ஹார்மோன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் மாதவிடாய் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு** சிகிச்சைகளை வழங்குவதில் விசேட நிபுணத்துவம் பெற்றவராவார். இவருடைய மருத்துவ ஆலோசனைகளை **யாழ்ப்பாணத்தில் - நொதேர்ண் சென்ரல் வைத்தியசாலையில்** பெற்றுக் கொள்ளலாம்.

**முன்பதிவுகளுக்கு: 077-3439988 (ராணி)**


# ஊர் அறியப் பேர் அறிய!

**புதுக்கையூர் ஜெயம் ஜெகன்**

## மானிப்பாய்

இவ்வூருக்கு மானிப்பாய் எனப் பெயர் வரக்காரணமான கதை மிகவும் சுவாரஸ்யமானது. வனவாசம் செய்து கொண்டிருந்த இராமன் சீதையின் அருகில் அழகிய மான் ஒன்று உல்வக் கண்டு மானின் மீது விருப்பம் கொண்ட சீதை அதை பிடித்துத் தரும்படி இராமனிடம் வேண்டினாள்.

தன் மனைவி மீது கொண்ட அளவு கடந்த காதலின் நிமிர்த்தம் சீதை சொன்ன மானைத் துரத்திச் சென்றார். அந்த மாயமானும் இராமனுக்குப் போக்குக் காட்டி ஏமாற்றிக் கொண்டே ஓடியது.

இராமன் கையில் சிக்காதவாறு ஓடிக் களைப்படைந்த இராமன் கெஞ்சும் குரலில் மானிடம் வேண்டுகோள் விடுக்கின்றார். ***மானே நிற்பாய்*** என்பதுதான் அந்த வேண்டுகோள். அன்று மானே நிற்பாய் என்ற இராமன் சொன்ன அந்த இடம் தான் மானிப்பாய் என்றானது.

## கோப்பாய்

கோ= அரசன், பாய்= இருக்கை. அரசர்களின் இருப்பிடமாகக் கோப்பாய் ஊர் இருந்தது. இதன் பிரகாரம் இவ்வூருக்கு கோப்பாய் என்று நாமம் சூட்டினர்.

இப்பெயருக்கு வலுச்சேர்க்கும் வகையில் இவ்வூரில் இராசவீதி செல்கிறது. படைகளும் அரச சுற்றத்தினரும் மன்னன் புடை சூழவும் வலம் வரும் வீதி இராசவீதி என வழங்கலாயிற்று.

அடுத்த ஞாயிறு வரும்

# இன்றைய இராசி பலன்

**27.07.2014**
**(ஆடி 11 ,ஞாயிற்றுக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு**
**பிரதமை முழுவதும்**
**பூசம் மாளைல 6.56 மணிவரை**
**இராகுகாலம் 4.32- 6.02 மணிவரை**
**சுபநேரம் 9.02-10.32 மணிவரை**

வளவன்

**மீனம்:** ரோக பயமுண்டு, மனச்சஞ்சலங்கள் கூடும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**மேடம்:** மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க பிரியப்படுவீர்கள், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் காண்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** மாமன் மைத்துனர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய நட்புகள் அறிமுகமாகும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கலாம்.

**கும்பம்:** உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்து கொள்ளும் நாள், முயற்சிகள் எளிதில் கைகூடும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**கடகம்:** பயணங்களால் பலனுண்டு, நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கற்பனைகள் குடி கொள்ளும்.

**மகரம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், தொழிலின் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், இடமாற்றம், ஊர் மாற்றம் என்பன இடம் பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**தனுசு:** ஆதவனை வழிபட்டு அமைதி காண வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, திட்டமிட்ட பணிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த சுபகாரியமொன்று இன்று காலையிலேயே நடைபெற்று மகிழ்ச்சியைக் கொடுக்கும், இழுபறியாக இருந்த பிரச்சினைகளில் முன்னேற்றமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மற்றவர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு. மனதிற்கினிய தகவல்கள் வந்துசேரலாம்.

**கன்னி:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், தொலைபேசி வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இனிய பாரதி இப்படி கேட்கிறார்

# மகிந்தவுடன் சம்பந்தன் ஏன் இணையக் கூடாது

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தன், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க குழுவுடன் இணையலாம் என்றால், ஏன்? ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து தமிழ் மக்களின் அபிலாஷைகளை தீர்க்கக் கூடாது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கு.இனியபாரதி கேள்வியெழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பேரினவாதி என வர்ணிக்கும் இவர்கள் ரணிலை என்னவென்று சொல்லப்போகின்றார்கள் என்றும் அவர் வினவியுள்ளார்.

பொத்துவில் குண்டுமடு மகளிர் அமைப்பின் தலைவி எ.பிரதீபா ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொத்துவில் குண்டுமடு பிரதேச வரலாற்றில் தேர்தல் காலங்களில் அவ்வப்போது காளான்களாக முளைக்கும் அரசியல்வாதிகள் வாய்ப்பேச்சில் வீரர்களாக வார்த்தைகளை கூறி வாக்குகளை பெற்ற பின்னர் மறைந்து விடுகின்றனர். இந்த நிலையில் பிரதேச சபையோ, பிரதேச செயலகமோ தங்களது பிரதேசத்தை அபிவிருத்தி விடயத்தில் புறந்தள்ளி பார்க்கின்றனர். இதற்கு பொறுப்புக் கூறுவது யார்? போன்ற கேள்விகள் இங்கு வாழும் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டன.

அதற்கு பதிலளித்து உரையாற்றிய இனியபாரதி, யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுக்கு எதிராக செயற்படுவதே கூட்டமைப்பின் கொள்கை. அதனால் மாத்திரதே தமிழர்களது வாக்கை பெற்று தங்களது இருப்பை தக்கவைத்துக் கொள்ளலாம் என்பதே இவர்களது நம்பிக்கையாகும்.

இவர்களது நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க புத்திஜீவிகளும் பொதுமக்களும் சற்று சிந்தித்து செயலாற்ற வேண்டிய தருணமிது. அவ்வாறு முன்கூட்டி சிந்தித்திருந்தால் இவ்வாறான கேள்விகள் என்னிடம் கேட்க வேண்டிய தேவை இருந்திருக்காது என்றார்.

தன்மானமும் தனித்துவமும் உள்ளதாக கூறிக்கொள்ளும் கூட்டமைப்பு இன்று ரணிலுடன் கூட்டிணையும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். அப்படியானால் அவர்களின் தன்மானமும் தனித்துவமும் எங்கே போனது. ஆகவே தங்களது இருப்பிற்காக தமிழர்களை பலிக்கடாவாக மாற்றும் இவர்களது அரசியல் கொள்கைக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என்றார். (6)

# துப்பாக்கிகளை இளைஞர்கள் மீண்டும் கையிலெடுக்க நேரிடும்

## எச்சரிக்கின்றார் அமைச்சர் ராஜித



(கொழும்பு)

அரசில்வாதிகளில் சிலர் பத்திரிகைகள் மூலமாக தமது அரசியல் பலத்தை அதிகரித்து கொள்ள முயற்சித்து வருவதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொது நூலகத்தில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் அவ்வாறான முயற்சியில் ஈடுபட்டாலும் இணையத்தளங்கள் மூலம் அரசியல்வாதிகள் வெளியிடும் கருத்துக்கள் அடங்கிய செய்திகள் அதிகளவில் வெளிவருகின்றன.

இந்தச் செய்திகள் மக்களின் மனங்களுக்கு செல்கின்றன. எனது மகன் தினமும் இணையத்தளங்களில் வெளியாகும் செய்திகளை படிப்பது வழக்கம்.

அந்த செய்திகள் குறித்து அவர் எனக்கு தெளிவுப்படுத்துவார். செயதி இணையத்தளங்கள் நாட்டிற்குள் பெரும் புரட்சியை ஏற்படுத்தி வருவதாக தெரிகிறது.

உண்மையான செய்திகளை இணையத்தளங்களில் மாத்திரமே இன்று படிக்க முடிகிறது.

இன்றைய இளைய தலை முறையினர் புதிய அரசியல் கருத்து பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ளனர். இது இணையத்தள செய்திகள் மூலம் தெளிவாகியுள்ளது.

இந்த நிலைமை எங்கு சென்று எந்த இடத்தில் வெடித்து சிதறுமோ என்று தெரியாது.

எந்த தலைவருக்கும் நாளைய தினம் பற்றி சிந்திக்க முடியாது. அந்தளவுக்கு இளைய தலை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

நாம் எமது இளமை காலத்தில் இடதுசாரி கொள்கையுடன் இருந்து வந்தோம். ஒரு காலத்தில் இது இல்லாமல் போனது.

தற்போது அது எழுச்சி பெற்று முன்னோக்கி வந்து கொண்டிருக்கின்றது. நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் அதனை தவிர்க்க முடியாது.

இலங்கையில் 1988-89 ஆம் ஆண்டு புரட்சிகளுக்கு முன்னர் இளைஞர்களின் கைகளில் சித்திர கதை பத்திரிகைகளே இருந்தன. புரட்சி நடைபெற்ற போது அவர்களின் கைகளில் துப்பாக்கிகள் இருந்தன.

அதன் பின்னர் அவர்களின்கைகளில் துப்பாக்கிகள் இருக்கவில்லை. அது சிறந்தது. கைவிட்ட துப்பாக்கியை மீண்டும் இளைஞர்கள் கையில் எடுக்கக் கூடும்.

இளைஞர்கள் அந்த இடத்திற்கு செல்லும் முன்னர் அதனை தவிர்க்க வேண்டியது இன்றைய ஆட்சியாளர்களுக்கு இருக்கும் பொறுப்பு என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (6)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(7871)


# 41 மீனவர்களும் சொந்த இடத்திற்கு

இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, கடந்த வியாழக்கிழமை விடுவிக்கப்பட்ட 41 இலங்கை மீனவர்களையும் அவர்களின் சொந்த இடங்களுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை அனுப்பி வைத்துள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பிரதிப் பணிப்பாளர் நடராசா கணேசமூர்த்தி தெரிவித்தார்.

மாத்தறை, நீர்கொழும்பு மற்றும் திருகோணமலையினைச் சேர்ந்த மேற்படி மீனவர்களையும் அவர்களின் 8 படகுகளுடன் எரிபொருளினை வழங்கி அனுப்பி வைத்ததாகப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்தியக் கடற்படையினர் மேற்படி மீனவர்களை காங்கேசன்துறை கடற்படையினரிடம் கடந்த வியாழக்கிழமை இரவு கையளித்தனர்.

தொடர்ந்து, காங்கேசன்துறைக் கடற்படையினர் மேற்படி மீனவர்களை, தங்களிடம் கையளித்ததை அடுத்து அவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைத்ததாக பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (6)


**SINGER FINANCE** இடமிருந்து மட்டுமே

பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக அதிககடன் தொகை குறைந்த வட்டி வீதத்தில்




தொடர்புகளுக்கு

| | | |
|---|---|---|
| தனு | (யாழ்ப்பாணம்) | 077 9 357 124 |
| சுஜந்தன் | (யாழ்ப்பாணம்) | 077 7 391 449 |
| தர்ஷன் | (யாழ்ப்பாணம்) | 077 7 009 666 |
| கலைதேவன் | (வவுனியா) | 077 3 675 022 |
| சுதன் | (மன்னார்) | 077 3 550 018 |

(ழி-7766)

www.singerfinance.com



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: 28 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L / அரச தொழில்<br>தொ.இ: B/3401 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 18 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L /காசாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: G/3404 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>கி.பா: 13 செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Advance Diploma in Networking, Bachelor of Business Management – Following / Managing Director<br>தொ.இ: B/3402 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: 32.75 உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BSc, M.Phil – Following / ஆராச்சி உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தககது<br>தொ.இ: G/3406 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 9.75 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L / வரவேற்பாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/3403 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 25.25 உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA<br>தொ.இ: G/3410 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 4.75 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / தனியார் வேலை<br>தொ.இ: B/3405 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 61 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSc in BIT / உதவிக் கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: G/3412 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வம்சாவளியினரின் பாதுகாவலன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸே!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இந்திய வம்வசாவளியினரின் பாதுகாவலனாக கடந்த 75 வருடங்களாக செயற்பட்டு வருகின்றது. பல்வேறு இன்னல்களை அனுபவித்து வரும் பெருந்தோட்டத்துறை மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தி, அவர்களது அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொடுத்து கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளில் அவர்களை உயர்வடைய செய்வதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என முன்னாள் பிரதி அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தனது பவள விழாவை கொழும்பிலுள்ள அதன் தலைமையகத்தில் கொண்டாடியது. இலங்கை தொழிலாளர் காங்கிஸின் உப-தலைவர் பி.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதுடன் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானது திருவுருவ படத்திற்கு மலர் மாலை செலுத்தி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவினால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடந்த 1939 ஆம் ஆண்டு தொழிற் சங்கமாக ஸ்தாபிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை பெருந்தோட்டத்துறை மக்களுக்காக, இந்திய வம்சாவளி மக்களுக்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட்டு வருகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று தனது 75 ஆவது வருடத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது. இந்த 75 வருட காலத்தில் இ.தொ.கா.வானது பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டிருந்தது என்பதை ஒருவரும் மறுத்துவிட முடியாது. அத்தனை இன்னல்களையும் தகர்த்தெறிந்து அது இன்று தனது வெற்றிப்பாதையில் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

இலங்கையில் உள்ள பலம் பெறும் கட்சி என்றால் அது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்தான். இன்று நாட்டில் இருக்கும் இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவை ஸ்தாபிப்பதற்கு முன்பே இக்கட்சி ஸ்தாபிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (6)

2011 ஏப்ரலுக்கு பின்பு

# இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் எவரும் உயிரிழக்கவில்லையாம் - ஜெட்லி

இலங்கைக் கடல் பகுதியில் 2011 ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் இந்திய மீனவர்கள் யாரும் உயிரிழந்த சம்பவங்கள் ஏதும் நடக்கவில்லை என்று இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அருண் ஜெட்லி கூறியுள்ளார். நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு இலங்கைக் கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதைக் கண்டறிந்தால், அவர்களிடம் அந்நாட்டுக் கடற்படையினர் மனிதத் தன்மையுடன் நடந்து கொள்வதை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இரு நாடுகளைப் பிரிக்கும் கடல் எல்லையைக் கிடக்கும் இந்திய, இலங்கை மீனவர்களைப் பரஸ்பரம் நேர்மையுடன் கையாளுவதற்கு இரு நாடுகளும நடைமுறை ஏற்பாடுகளைச் செயதுள்ளன.

அதன் ஒரு பகுதியாக இந்திய மீன்பிடிப் படகுகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்துவதில்லை என்றும் இலங்கையின கடற்பகுதியின் பதற்றமான பகுதிகளில் இந்திய மீன்பிடிப் படகுகள் நுழையாமல பார்த்துக் கொள்ளப்படும் என்றும் உடன்பாடு எட்ப்பட்டது. மத்திய அரசின் தொடர் முயற்சிகளின் விளைவாக, கடந்த 2013 ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 676 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதே போன்று, இந்த ஆண்டில் ஜூலை 18 ஆம் திகதி வரை கைதான 541 மீனவர்களில் 536 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இரு தரப்பு மீனவர்களின் பிரச்சினை தொடர்பாகத் தீர்வுகாண இந்திய, இலங்கை மீனவரகளின் சங்கங்கள் இடையேயான பேசசு சென்னையிலும், கொழும்பிலும நடைபெற்றுள்ளது. இந்திய கடலோரக் காவல் படையினர் இந்திய மீனவர்களுக்கு, கடலில் தேவையான உதவிகளை அளித்து வருகின்றனர். வழக்கமான ரோந்துப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்" என்று கூறியுள்ளார். (6)

# ஆசிரிய பயிலுநரிடையே மோதல்; 7 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் இரண்டு ஆசிரிய பயிலுநர் குழுக்களுக்கு இடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த 7 பேர் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் உணவகத்தினுள் வாய்த் தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த 7 ஆசிரிய பயிலுநர்களும் கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதோடு இவர்களில் எவருக் கும் ஆபத்து இல்லை என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக் விசாரணைகளை திம்புள்ள-பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 60 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 450 | 400 | 500 |
| தக்காளி | 120 | 150 | 110 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 80 |
| கோவா | 60 | 140 | 130 | 140 |
| கரட் | 200 | 160 | 150 | 200 |
| பூசணி | 40 | 50 | 50 | 80 |
| புடோல் | 40 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 300 | 200 | 210 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 150 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 70 | 100 |
| பயற்றங்காய் | 200 | 250 | 240 | 160 |
| லீக்ஸ் | 60 | 100 | 90 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 100 | 120 |
| கறிமிளகாய் | 400 | 250 | 210 | 200 |
| முருங்கைக்காய் | 20 | 60 | 80 | 80 |
| போஞ்சி | 120 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 30-40 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 87

துஷி துஷி

அன்பு காட்ட அம்மா உண்டு,
அறிவுரை சொல்ல அப்பா உண்டு,
உரிமை கொள்ள உடன் பிறந்தவர்கள் உண்டு,
தோள் கொடுக்க தோழன் உண்டு,
உதவி செய்ய சொந்தங்கள் உண்டு...
இத்தனை அன்புகள் இருக்கும் போதும்
வாழ்கிறேன் தனியாக அயல்நாட்டில்....
**பணம்** என்னும் காகிதம் இல்லாததால்...

சர்மி சர்மிலன்



றிச்சாட் ஜெயபாலன்

பாஸ்! 4 பேஸ்புக் லைக், 2 பேஸ்புக் Share, 3 பேஸ்புக் கொமன்ஸ் குடுங்க!!!





விபுலானந்தன் விபூசன்

ஆயிரம்,ரெண்டாயிரம் செலவு பண்ணி ஊட்டி, கொடைக்கானல்னு ஊர் சுத்தினா "டூர்"ங்கிறாங்க...



பத்து பைசா செலவு பண்ணாம நம்ம ஊரச்சுத்துனா தண்டச் சோறுங்குறாங்க... என்னய்யா நியாயம் இது...?

சர்மி சர்மிலன்



சுயான் மகேந்திரன்

தூங்கி எந்திரிச்சா காபி.
எந்திரிக்கவே இல்லைன்னா பால்.
இது தாங்க வாழ்க்கை...



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி


(கரணவாய்)

கரணவாய் தெற்கு விபுலானந்தர் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கரணவாய் விபுலானந்தர் பாலர் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை தவிசாளர் பொ.வியாகேசு கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி பண்ணிப்பாளர் க.பொன்னையா சிறப்பு விருந்தினராக கரணவாய் தெற்கு ஜே/348 கிராம சேவையாளர் திருமதி லக்ஷ்மன் தனுஜா, கரணவாய் தெற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.கல்பனா, கரணவாய் தெற்கு சிவில் பாதுகாப்பு குழுத்தலைவர் க.சற்குணம், நெல்லியடி மத்திய கல்லூரி பகுதித்தலைவர் திருமதி ரஞ்சினி சிவராசா, கரணவாய் தெற்கு சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி சி.சிவமனோகரி, கரணவாய் பொது சுகாதார பரிசோதகர் வீ.துவாரகன், கரவெட்டி முன்பள்ளி இணைப்பாளர் திருமதி பா.கலைவாணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விபுலானந்தர் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (6-60)




# தொடரும் உட்கட்சி முரண்பாடுகளால் நகராட்சிமன்ற செயற்பாடுகள் முடக்கம்

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தலைவர் கவலை

தமிழ்தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட ஊராட்சி மன்றங்களில் ஏற்பட்டுள்ள உட்கட்சி முரண்பாடுகளை தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறியுள்ள யாழ்.வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் தலைவர் என்.அனந்தராஜ், கடந்த மூன்று வருடங்களாக எத்தனையோ இடர்கள், சில உறுப்பினர்களின் தொடர்ச்சியான தடைகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வல்வெட்டித் துறையின் அபிவிருத்தியிலும், மக்களின் நலன் சார்ந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர்மேலும் தெரிவிக்கையில்,

2011 ஆம் ஆண்டு நகரசபையின் தலைவர் பதவியைத் தமக்குத் தராவிட்டால் நகரசபையை முடக்கப் போவதாக 11 பேர் கொண்ட சிறு குழுவினரால் அச்சுறுத்தப் பட்டு இன்றுவரை எமது புனிதம் நிறைந்த மண் அவர்களால் அவமானப்படுத்தப்பட்டு வருகின்றது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவான கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற உறுப்பினர்களுக்கான மாதாந்த கூட்டத்தின் பொழுது, வல்வெட்டித்துறை நகரத்தை முடக்கி, பொது மக்களுக்கும் நகரசபை நிர்வாகத்திற்கும் இடையில் மோதலையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தி எமது நகரத்தைச் சீரழிய வைக்கும் நோக்கில் உபதலைவர் உட்பட ஆளும் கட்சியின் சில உறுப்பினர்கள் எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துச் செலவீனங்களுக்கு மான கொடுப்பனவுகளை மேற் கொள்ளக் கூடாது என்று தடைவிதித்துள்ளதால் ஒரு ரூபாவைக்கூட நகரசபையினால் செலவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் வல்வெட்டித்துறையின் திண்மக் கழிவகற்றல், குடிநீர் விநியோகம், வீதிகளின் துப்புரவு, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டும், ஆரம்பிக்கப்படவுமுள்ள அபிவிருத்தி வேலைகள், நகரசபை அலுவலர்கள், ஊழியர்களின் சம்பளங்கள், அலுவலக எழுது கருவிகள் கொள்வனவு என்பவற்றிற்கான நிதி அனைத்தும் முடக்கப்பட்டதால், மேற்படி சேவைகள் எதனையும் மேற்கொள்ள முடியாதபடி இவர்கள் முடக்கி வைத்துள்ளனர்.

பதவிகளைக் குறி வைத்து மக்களின் சேவைகளை முடக்கவேண்டாம் என்று அவர்களிடம் பணிவாகக் கேட்டுக் கொண்டபோதும்கூட திருமதி.இ.கைலாஜினி, பொ.தெய்வேந்திரன் இருவரும் மக்களின் சேவைகள் பாதிக்கப்படாது இருப்பதற்காக தாம் இதற்கான அங்கீகாரத்தை வழங்குவதாக கூறிய போதும் ஆளும் கட்சியைச் சேர்நத உறுப்பினர்கள் தடைவிதித்ததால், நகரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற கழிவகற்றல் (குப்பைகளை அகற்றுதல்) மற்றும் குடிநீர் விநியோகம் ஆகிய அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதற்காக நாங்கள் மிகவும் மன வருத்தத்துடன் இந்தத் தற்காலிக துன்பத்தைச் சிலநாட்களுக்குப் பொறுத்து நகராட்சி மன்றத்துடன் ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அதுவரை உங்கள் வீடுகளில் சேரும் கழிவுகளை இடமுள்ளவர்கள் மண்ணினுள் வெட்டிப் புதைத்தோ அல்லது எரித்தோ அவற்றை அப்புறப்படுத்தி தொற்று நோய்களில் இருந்து எமது மக்களைக் காத்திட ஒத்துழைக்குமாறு வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தலைவர் கேட்டுள்ளார். (6-60)

## விளையாட்டு விழா

மக்கள் நலன் காக்கும் பிரிவின் பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யா/கோப்பாய் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் மக்கள் நலன்காக்கும் பிரிவு நிறுவனத் தலைவர் கோ.சிவ சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் மகா வித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கியின் கோப்பாய் கிளை முகாமையாளர் எஸ்.சிவகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (6)

## விசேட கலந்துரையாடல்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவத்தின் ஏற்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. (6)






அளவெட்டி மக்கள் சங்கத்தின் (லண்டன்) நிதிஅனுசரணையில் கிராமத்திலுள்ள வறுமை கோட்டிற்குட்பட்ட 3 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டபோது... (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

# அறிவுறுத்தல் கூட்டத்தில் தவறாது பங்குபெறுங்கள்

க.பொ.த. (உ/த), தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைகளில் கடமையாற்றும் இணைப்பு நிலைய அலுவலர்கள், உதவி இணைப்பு நிலைய அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார்.

மேலும் இதில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்.வலயம்,தீவகவலயம், தென்மராட்சி வலயம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் அனைவரும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டால் மாத்திரமே பரீட்சைக் கடமைகளில் கடமையாற்ற முடியும் என்பதனால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (6)

# ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதால் உண்மைகளை உறங்கவைக்க முடியாது

## வடமாகாண அமைச்சர் ஐங்கரநேசன் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தும் வகையிலும், அவமானப்படுத்தும் வகையிலும் எத்தகைய இழிசெயல்களை எவர் மேற்கொண்டாலும் உண்மைகளை ஒருபோதும் உறங்கவைக்க முடியாது என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்திருக்கிறார்.

ஓமந்தையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தமிழ் ஊடகவியலாளர்கள் சிலரைக் கஞ்சா கடத்தியதாகக் கூறி வழக்கில் சிக்க வைப்பதற்குப் படையினர் முயன்றது தொடர்பாக ஊடகங்களுக்கு அமைச்சர் விடுத்திருக்கும் கண்டனச் செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில்,

தமிழ் மக்களின் தேசியவிடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை, தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்டுவரும் இனரீதியான ஒடுக்குமுறைகளை, ஈவிரக்கமற்ற இராணுவ நடவடிக்கைகளை, நில அபகரிப்பை உடனுக்குடன் சர்வதேசமெங்கும் அறியச் செய்வதால் இலங்கை அரசாங்கம் அஞ்சி நடுங்கும் பேராயுதமாக இன்று இருப்பது ஊடகங்களும் நெஞ்சுரம் மிக்க ஊடகவியலாளர்களும் தான். தமிழ் மக்களது இன்றைய பெரும் பலமும் இவர்கள்தான்.

இதனால்தான் ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். ஊடகங்கள்மீதும், ஊடகவியலாளர்கள்மீதும் தாக்குதல் மேற்கொள்வதும் சேறு பூசுகின்ற நிகழ்ச்சிகளும் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டுவருகின்றன.

இதன் ஒரு கட்டமாகவே, ஊடகவியலாளர்களின் ஆன்மாவைப் படுகொலை செய்யும் நோக்கில் போதைப் பொருள் வழக்கிலும் அவர்களைச் சிக்கவைக்கும் நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தும் வகையிலும் சமூகத்தில் அவர்களது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தி அவமானப்படுத்தும் வகையிலும் எத்தகைய இழிசெயல்களை எவர் மேற்கொண்டாலும் உண்மைகளை ஒருபோதும் உறங்கவைக்க முடியாது. முள்ளிவாய்க்காலில் இராணுவத்தரப்பால் எடுக்கப்பட்ட புகைப்படங்களே இன்று அவர்களுக்கு எதிரான போர்க்குற்ற ஆதாரங்களாக, தமிழினப் படுகொலையின் சாட்சியங்களாக ஒவ்வொன்றாக வெளிவந்துகொண்டிருப்பது உண்மைகளை அசுரப்பலம் கொண்டும்கூட மூடிமறைக்க முடியாது என்பதற்கு ஒரு வலுவான உதாரணம் ஆகும்.

ஊடகங்கள்மீதும் ஊடகவியலாளர்கள்மீதும் மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, ஜனநாயக ஊடகக் குரலை ஒடுக்க முற்படுவோர்களுக்கு எதிராக இன, மொழி பேதங்களைக் கடந்து அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவின மக்களையும் ஒன்றாய் வாழவிடு; வவுனியாவில் கையெழுத்து வேட்டை




(குருமன்காடு)

சிங்கள- தமிழ்- முஸ்லிம் மக்களை ஒன்றாய் வாழ விடு எனும் தொனிப் பொருளில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா நகர்ப்பகுதியில் கையெழுத்து வேட்டை இடம் பெற்றுள்ளது.

சோசலிச இளைஞர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந் நிகழ்வில் அனைத்து இனவாதங்களையும் தோற்கடிப்போம், இனவாத, மதவாத வன்முறைகளுககு எதிராக சட்டத்தை அமுல்படுத்து, அமைதி மற்றும் ஒற்றுமைக்காக சோசலிசம் எனும் வாசகங்கள் பொறிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இதேவேளை நகர்ப்பகுதியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த பதாகையொன்றில் பொதுமக்கள் கையெழுத்து இடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பொதுமக்கள் ஆர்வத்துடன் கையெழுத்திட்டிருந்தனர். இதன்போது ஆட்சியாளர்களினால் இனவாதம் தூண்டப்படுவதாகவும் ஏற்பாட்டாளர்களினால் குற்றம் சுமத்தப்பட்டன. (6-250)

# வவுனியா சாரண மாணவன் ஜப்பான் பயணம்



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய சாரண துருப்பைச் சேர்ந்த சாரணன் கணேசலிங்கம் யதுகனேஷ் இலங்கை சாரண சங்கத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் பெற்று Inspire japan - 2014 எனும் நிகழ்வில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் மூவர் கொண்ட குழாமில் இம மாணவனும் பயணமாகவுள்ளார்.

இந் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இவ் இலங்கை குழாமில் குருநாகல் சென்.அனீஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.கே.வி. ரொசான் விசமித்தும் இவர்களுக்கு பொறுப்பான சாரண தலைவராக கோமாகம சாரண மாவட்டத்தைச் சேர்ந்த உதவி மாவட்ட ஆணையாளர் லசந்த சஞ்சீவ வ்மலசிறியும் பயணமாகவுள்ளனர்.

இதன் ஆரம்ப நிகழ்வான அறிமுக விழாவும், இலங்கை தேசிய கொடியினை கையளிக்கும் நிகழ்வும் நேற்று கொழும்பு மாவட்ட சார்ண தலைமை காரியாலயத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுடன் கொரிய சாரண சங்கத்தின் 4 ஆவது சர்வதேச அணி ஜம்பொறியில் கலந்து கொள்ளும் சாரணர்களின் நிகழ்வும் நடைபெற்றது.

இதன்சிறப்பு விருந்தினர்களாக ஜப்பான் மற்றும் கொரியா நர்டுகளின் இலங்கைக்கான தூதுவராலயங்களின் செயலாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6-250)

## குடிநீர்க்குழாய்கள் அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மீள்எழுச்சி பிரதி திட்டப்பணிப்பாளர் அ.விஜய கிருஷ்ணன் ஏற்பாட்டில் இம்மாவட்டத்தின் குடிநீர் தேவைக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பொருளாதார அபி. அமைச்சின் மீள்எழுச்சித்திட்டப் பணிப்பாளர் எந்திரி.எஸ்.கே. லியனகே குழுவினர் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களுக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டனர்.

இதன்பயனாக உருத்திரபுரம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் ஒரு குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து சிவநகர் முதியோர் சங்க காணியிலும் உருத்திரபுரம் மேற்கு கிராமத்திலும் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான முன்னேற்பாட்டுஒழுங்குகள்செய்யப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-254)




# ஓமந்தையில் தடுக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் 6 மணித்தியாலங்களின் பின் விடுவிக்கப்பட்டனர்

(குருமன்காடு)

கொழும்பில், இடம்பெறும் இரு நாள் ஊடக பயிற்சிக்காக யாழிலிருந்து வந்த ஊடகவியலாளர்கள், ஓமந்தை பொலிஸாரால் 6 மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏ-9 வீதியை மறித்து, ஊடகவியலாளர்கள் நடத்திய ஆர்ப்பாடடத்தை அடுத்தே அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். எனினும், அவர்கள் பயணித்த வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் வாகனமும் தடுத்து வைககப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஊடகவியலாளர்களுக்கான் பயிற்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள் சிலர், இரு வாகனங்களில் நேற்றிரவு கொழும்பை நோக்கி பயணித்துள்ளனர்.

முதலாவது வாகனம் வவுனியாவை கடந்து சென்ற நிலையில், இரண்டாவதாக வந்த வாகனம் மாங்குளம் பகுதியில் பாதுகாப்பு தரப்பினரால் வழிமறிக்கப்பட்டு இராணுவ பொலிஸாரினாலும் சிவில் உடையில் இருந்தவர்களினாலும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து பயணத்தை தொடர்வதற்கு அந்த வாகனத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் ஓமந்தை சோதனைச்சாவடியில் இரவு 9.30 மணியளவில் வாகன பதிவுகளை மேற்கொளவதற்காக சாரதி, வாகனத்தை பதியும் இடத்திற்கு சென்றுள்ளார்.

அச்சந்தர்ப்பத்தில், அங்கு வந்த இராணுவத்தினர் அறுவர், சாரதியின் ஆசனத்திற்கு கீழ் சிறிய சிகரெட் பெட்டியில் கஞ்சா இருப்பதாக தெரிவித்து ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து அவ்விடத்திற்கு வருகை தந்த ஓமந்தை பொலிஸார் மூவர், சாரதியையும் அதில் பயணித்த ஊடகவியலாளர்களையும் தகாத வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்தி இழுத்து சென்று ஓமந்தை சோதனைச்சாவடியில் உள்ள பொலிஸ காவலரனில் தடுத்து வைத்துள்ளனர். அதன் பின்னர் ஓமந்தை பொலிஸ நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதனையடுத்து ஊடகவியலாளர்கள், இராணுவத்தினரே கஞ்சாவை எமது வாகனத்தில் வைத்ததாகவும் பொலிஸார் மிக கீழ்த்தரமாக தம்மை நடத்தியதாகவும் இது தொடர்பில் தமது முறைப்பாட்டை பதிவு செய்யுமாறும் பொலிஸாருடன் வாக்குவாதப்பட்டனர்.

இதனையடுத்து ஊடகவியலாளர்கள் அனைவரது பெயர்களும் பணியாற்றும் ஊடக நிறுவனங்களின் பெயர்களும் பதியப்பட்டதன் பின்னர் ஊடகவியலாளர்களை விடுவிப்பதாகவும் சாரதியை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த போவதாகவும் பொலிஸார் தெரிவிததுள்ளனர்.

இதேவேளை தமது முறைப்பாட்டை பதிவு செய்யுமாறு கோரிக்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியபோதிலும் இன்று அதிகாலை 2 மணியாகியும் முறைப்பாடு பதிவு செய்யப்படாமையினால் ஏ-9 வீதியை மறித்து ஊடகவியலாளர்கள் கோசங்களை எழுப்பியவாறு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அவ்விடத்திற்கு வருகைதந்த ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முறைப்பாட்டை பதிவு செய்வதாகவும் ஆர்ப்பாட்டத்தை கைவிடுமாறும் கோரியிருந்தார்.

அதன்பின்னர் ஆர்ப்பாட்டத்தை கைவிட்ட ஊடகவியலாளர்கள் தமது தரப்பு முறைப்பாட்டை பதிவு செய்திருந்த நிலையில் மீண்டும் பயிற்சிக்காக புறப்பட்டு சென்றனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சாரதியை வவுனியா நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (6-250)

# சிவநகரில் வாராந்த சந்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் சிவநகர் கிராம மீள்எழுச்சித் திட்டத்தினரால் சிவநகர் கிராம சந்தையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வாராந்தச் சந்தை நடத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இவ் வாராந்தச் சந்தை முதலாவது சந்தையாக ஆரம்பிக்கப்பட்டது.

இச் சந்தையை சிவநகர் முதியோர் சங்கத்தினர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

இதில் விவசாய உற்பத்திப் பொருட்கள் மற்றும் கைப்பணிப் பொருட்கள் என்பன விற்பனை செய்யப்பட்டன.

அத்துடன் இச் சந்தை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம், உற்பத்தி வியாபாரிகள் தமது உற்பத்தி பொருட்களை தாமாகவே நேரடியாக இச் சந்தையில் விற்பனை செய்து தமது வாழ்வாதாரத்தை உயர்வடையச் செய்யும் முகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதே போல் வாரத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இவ் வாராந்தச் சந்தை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச் சந்தையில் மக்கள் மிகுந்த பயனைப் பெற முடியும் என ஏற்பாட்டாளர்கள் நம்புகின்றனர். (6-254)

# வவுனியா மாவட்டத்தில் சிறுவர் கழகம் உருவாக்கம்

வவுனியா மாவட்டத்தில் சிறுவர்களின் ஆளுமையை கட்டியெழுப்பும் நோக்குடன் சர்வோதய நிறுவனத்தினால் சிறுவர் கழகமொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது.

பிள்ளைகளுக்கு பாதுகாப்பான கற்றல் நிலையமும் பிள்ளைகளின் பாதுகாப்புக்காக சமூகத்தினரை ஈடுபடுத்தலும் எனும் செயற்றிட்டத்தின் கீழ் கற்றல் இடர்பாடுகளுடன் காணப்படும் சிறுவர்களை வளப்படுத்தும் நோக்குடன் இந்த சிறுவர் கழகம் உருவாக்கப்பட்டு வருவதாக சர்வோதயத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் எஸ். உதயகுமாரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தின் கள்ளிக் குளம், கருப்பனிச்சான்குளம், மகாறம்பைக்குளம், ஸ்ரீராமபுரம், மதுரா நகர் ஆகிய கிராமங்களிலேயே இக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கிராமங்களில் சிறுவர்களுக்கான ஆக்கத்திறன் செயற்பாடுகள் நடைமுறைப்படுத் தப்பட்டு வருவதுடன் சிறுவர்களின் தலைமைத்துவ பண்பை மேம்படுத்தல் செயற்பாடும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை ஸ்ரீராமபுரம் கிராமத்தில் சிறுவர் கழகம் உருவாக்கல் செயற்பாடு நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு வளவாளராக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர ஜெ.ஜெயக்கெனடி கலந்து, சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தெளிவூட்டல் வளப்பகிர்வை வழங்கினார்.

அத்துடன், சிறுவர்கள் தம்மை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்ற விளங்கங்களை இத்திட்டத்தின் மாகாண இணைப்பாளர் எஸ்.சுவேநதன் வழங்கியிருந்ததுடன் திட்டத்தின் பயிற்சி இணைப்பாளர் கோ.ரூபகாந மற்றும் திட்ட இணைப்பாளர் எஸ்.நந்தினி ஆகியோர் இணைந்து சிறுவர் கழகத்துககான நிர்வாகத்தை தெரிவு செய்திருந்தனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சிய இளைஞர்களே! இதற்கு அது முடிவல்ல!

"போயும் போயும் ஒரு பெட்டைக்காக உயிரைத்துறந்தாயே சுதாகரா?" எனும் சோகம், ஆதங்கம், ஆத்திரம் போன்ற பல்வேறு உணர்ச்சிகள் நிறைந்த ஒரு இணையச் செய்தியைப் பார்த்த பொழுது, பேராசிரியர் மா. சின்னத்தம்பியின் "புதிதாகச் சிந்திபபோம்- சமுதாயத்திற்கான கல்வி" எனும் நூலில் வாசித்த, "பெற்றோர்களே உங்கள்பிள்ளைகளுக்காக நீங்கள் என்ன செய் கிறீர்கள்?" எனும் முதலாவது அத்தியாயத்தில் வாசித்தது ஞாபகத்திற்கு வந்தது.

"தற்கொலை, நோய்கள், அறியாமை, முரண்பாடுகள், சூழற்தடைகள், பிறரில் தங்கியிருத்தல மற்றும் தொடர்பாடலற்று வாழுதல் என்பவற்றிலிருந்து பெற்றோர்கள தமது பிள்ளைகளை வெளியே எடுத்துவிட வேண்டும்" என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஏழைக்குடும்பத்தில் பிறந்தவன் சுதாகரன். தனது பிள்ளை பல்கலைக்கழகம் தெரிவாகிவிட்டான்அவனதும் தமதும் வாழ்வு வளம்பெறும் எனப் பெற்றோர் கண்ட கனவு ஒருநொடியில் கலைந்து போனது.

இவ்வாறு ஏழைக்குடும்பங்களில் பிறக்கும் இளைஞர்கள், பல்கலைக்கழகம் தெரிவாகிச் செல்லும்போதோ, கொழும்பு போன்ற நாகரிக வளர்ச்சியடைந்த நகரப் பகுதிகளுக்கோ வெளிநாடுகளுக்கோ கற்கவோ தொழிலநிமித்தமோ செல்லும் போதோ ஒருவகை பொருளாதார சமூக கலாசார அதிர்ச்சிதனை (socio economic and cultural shock) எதிர்கொள்ள நேரிடுகின்றது.

பணக்கார மற்றும் நாகரிக சகபாடிகளின் நடத்தைக் கோலங்கள் இவர்களிடம் ஒருவகை தாழ்வு மனப்பான்மையைத் தோற்றுவிக்க முயலலாம். சிலர் இதனை ஒரு சவாலாக எடுத்து ஒரு இலட்சியத்தினை அமைத்து தமது முன்னேற்றித்திற்கான உந்துசக்தியாகப் அதனைப் பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றனர்.

இன்னும் சிலரோ தமது சக்திக்குமீறி தமது குடும்ப நிலையை மறந்து அவர்களுக்கு ஒப்பாக வாழ முயலுகின்றனர். தோல்விகளைச் சந்திக்கும்போது வேறு வழிதெரியாது வாழ்க்கையே முடிந்துவிட்டதாக எண்ணித் தங்களை மாய்த்துக் கொள்கின்றனர்.

இவ்வாறு எமது மண்ணிலே தற்கொலைகள் அதிகரித்துச் செல்வது அவதானிக்கக்கூடியதாக உள்ளது. குறிப்பாக இளம் சமுதாய வளத்தை எமது இனம் இழந்து வருகிறதோ என அஞ்சத் தோன்றுகிறது.

இன்றைய சினிமா மூலம் காதல் என்பதைத் தப்பாக அர்த்தப்படுத்தி, முகப்புத்தகம், தொலைபேசிகள் மற்றும் வேறுவகைகளால் வளர்த்துக்கொண்டு, அந்த மாயை உடைந்து நிஜம் தெரிகின்ற பொழுது தாங்க முடியாது தம்மைத்தாமே அழித்துக் கொள் கின்றமை, அதிகரித்துச் செல்கின் றமை எம்மையெல்லாம் எச்சரிக்கின்ற ஒரு குறிகாட்டியாகும்.

தற்கொலைக்குப் பல்வேறு காரணங் கள் காணப்படுகின்றபோதும் பின்வரும் காரணங்களே பொதுவானவை

**மன அழுத்தம் (Depression)** - இதுவே தற்கொலைக்கான பொதுவான காரணமாகும். மருத்துவ ரீதியாகப் பல்வேறு காரணங்கள் இருந்தபோதிலும், ஏற்கனவே நடந்த துன்பத்தை மீண்டும் மீண்டும் ஆழமாக எண்ணி வருந்துவதால் மனவழுத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது.

நல்ல நண்பர்களுடன் தமது துயரைப் பகிர்ந்து கொள்ளுதல் (மனம்விட்டுப் பேசுதல்), மனத்திற்குப் புத்துணர்ச்சி தரும் பொழுதுபோக்குகளில் ஈடுபடுதல் (இதம் தரும் இசை, இயற்கையை இரசித்தல், மனதிற்குப் புத்துணர்வு தரும் நூல்களை வாசித்தல், விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சி) ஆன மீகத்தில் அதிக நாட்டம் கொள்ளுதல் (கடவுளிடம் மனப்பாரத்தை இறக்கிவைத்தல், தியானம்) முடியாத பட்சத்தில் உளவளத்துணை ஆலோசனையினைப் பெறுதல் என்பவற்றை நாட முடியாத பட்சத்தில், வேதனை தாங்க முடியாதளவு அதிகரிக்கின்ற பொழுது, தம்மீதான, தமது எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையீனமும் பிரச்சினைகளிலிருந்து தப்புவதற்கான இறுதியும் சுலபமானதுமான முடிவாகத் தற்கொலையைத் தெரிவு செய்கின்றனர்.

"என்னால்தான் எல்லாப் பிரச்சினைகளும்.எனது இறப்பு மற்றவர்களைச் சந்தோசமாக வைத்திருக்கும்" என்ற எண்ணம் இவர்கள் மனதில் அடிக்கடி மேலோங்கும்.

இப்படிப்பட்டவர்கள் மிக அமைதியாக, நன்கு திட்டமிட்டு, யாருமறியா வண்ணம் தற்கொலைமுயற்சியில் ஈடுபடுவர்.

**உளவியற் பாதிப்புக்குள்ளானவர்கள (Psychotics):** இவர்கள், நம்பமுடியாத காரணங்களுக்காக தம்மை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று தம்முள் எழும் உட்குரலிற்குச் செவிசாய்த்து தற்கொலைமுயற்சியில் ஈடுபடுகின்றனர். அக்குரலுடன் அடிக்கடி உரையாடுவார்கள். சிகிச்சையளிக்கப் படக் கூடியவர்கள். சிகிச்சையளிக்கப் படாத விடத்து அக்குரலின் கட்டளைக்கு அடிபணிந்து தற்கொலை செய்து கொள்வர்.

**உணர்ச்சிவசப்பட்ட அல்லது அவசரமான நிலை (impulsive state)**- பொதுவாக மது மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களில் ஏற்படுவது. போதையிலிருக்கும்போது தற்கொலை யெண்ணம் பீறிடும். போதையிலிருந்து மீளுகின்ற பொழுது தம்மையெண்ணித் தாமே கழிவிரக்கமும் வெட்கமும் கொள் வர். மீண்டும் தற்கொலைமுயற்சி யில் ஈடுபடுவாரா என்பது எதிர்வு கூற முடியாததே.

**உதவிக்காக கதறுபவர்கள (crying out for help)**- இவரகள் உண்மையிலே சாக நினைப்பவர்கள் அல்லர். மிகப்பெரிய அநியாயம் நடப்பதாக, தம்மைச்சூழ உள்ளவர்களை எச்சரிப்பதற்கான முயற்சியாக இதனைப் பார்க்கின்றனர். துரதிர்ஷ்டவசமாக தம்மையே இம்முயற்சி கொன்றுவிடும் என அறியாது முயல்கின்றனர்.

உறவிற்காக, அன்பிற்காக ஏங்கும் போதும், தாய்தந்தையரை வெருட்டுவதற்காகவும் இளைஞர் யுவதிகளிடையே பொதுவாக இம் முயற்சி மேற்கொள்ளப்படும். பொதுவாக அதிக "பனடோல்" குடிப்பதனை உதாரணமாகக் கொள்ளலாம்.



**தற்கொலைகளைத் தவிர்க்க யாது செய்யலாம**

நம் ஒவ்வொருவரையும் இறைவன் படைத்தது இப்பூவுலகில் குறித்ததோர் கடமையை நிறைவேற்றவே. **அக் கடமை நிறைவேறும் வரை தமது உடலை அழிக்கும் உரிமை யாருக்குமே கிடையாது.**

சுதாகரன் போன்ற அப்பாவிகள் காதலிக்கத் தொடங்குமுன் "தன்னைத் தான் காதலனாகவேண்டும் (சுய நலம் என்று அர்த்தமல்ல)".

கூன்,குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறந்திருக்கிறோம் நல்ல பெற்றோர் குரு வாய்த்ததன் விளைவால் நல்ல கல்விப்பேறு கிடைத்திருக்கிறது.

கணநேரமுடிவால்இவற்றையெல்லாம் உதறித்தள்ளலாமா?

நொடிப்பொழுதில் கூட்டைவிட்டு ஆவிபோய்விடும். ஆனால், நம்மை நம்பியிருந்தவர் மனம் ஆறுமா?

***இளைஞர்களே சற்று சிந்திப்போம்!***

**எம்மீது உண்மையான அக்கறை கொண்ட பெற்றோா, ஆசிரியர், உறவினர் மற்றும் நண்பர்களிடம் மனந்திறந்து பேசுவோம**

காலவோட்டத்துடன் தவிர்க்க முடியாத காரணங்களால் மாறிவிட்ட எமது இன்றைய வாழ்க்கை முறைமையே தற்கொலைக்கான பிரதான காரணங்களாகக்கருதலாம்.

பொருளாதார வளத்தைத் தேடுவதே பிரதான நோக்காகக் கொண்டும் சிலபல காரணங்களாலும் எமது கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறைமையிலிருந்து தனிக்குடித்தன முறைமைக்கு மாறிவிட்டோம்.

பெற்றோருடனான தலை முறை இடைவெளி மிகக்குறுகியதாக இருபபதாலும் பெற்றோருக்கு நேரமில்லாதிருப்பதாலும் வீட்டிலுள்ள அனுபவமிக்க பாட்டன், பாட்டியுடன் தமது உள்ளக்கிடக்கைகளைப் பிள்ளைகள் வெளிப்படுத்துவர். ஆனால் தற்காலத்தில் அப்படியானவர்கள் வீட்டிலில்லாத குறையை ஏதோவொரு வகையில் பெற்றோர் போக்கியே ஆகவேண்டும்.

தாயும் தந்தையும் வேலைக்கு ஓடுகின்றனர். புள்ளிகளால் மட்டுமே பிள்ளைகளைப் பார்க்கின்றனர். அவர்களுக்கென்றொரு மனமிருப்பதை மறந்துவிடுகின்றனர். மேலும், பிள்ளைகள் தமது நன்மை தீமைகளை, ஆதங்கங்களைப் பகிர்ந்துகொள்ளும் நல்ல நண்பர்களாகப் பெற்றோர் விளங்காமையே அவர்களை இவ்வாறான நிலைமைக்கு இட்டுச் செல்கின்றமை தவிர்க்க முடியாத உண்மையாகும்.

மேலும், நண்பர்களோ, ஆசிரியர்களோ, உறவினர்களோ, எம்மீது உண்மையான அக்கறை கொண்டவர்களிடம் எமது மனக் குறைகளை மனந்திறந்து பேசினாலே முக்கால்வாசி பிரச்சினை தீர்ந்த மாதிரித்தான்.

**இலட்சிய இளைஞர்களாவோம்**

பெரும்பாலான சிறுவர்களுக்கு ஐஸ்கிறீம்தான் இலட்சியமாக இருக்கும். மிகச்சிறந்த புத்தகம் வேண்டுமா அல்லது ஐஸ்கிறீம் வேண்டுமா என்று கேட்டால் ஐஸ்கிறீம் தான் வேண்டும் என்பார்கள். அந்த வயதிற்குரிய இலட்சியம் அது.

அதேபோல், கட்டிளம் காளைப் பருவத்தில் காதலே பெரிதாகத் தெரிதல் தவிர்க்க முடியாததே.

அன்றொருநாள்தனியார்வானொலி நிகழ்ச்சி ஒன்றிலே "*தவறான முடிவெடுத்த சந்தர்ப்பங்கள*" பற்றி நேயர்களிடம் கேட்கப்பட்டது. கிட்டத்தட்ட 70- 80 வீதமானவர்கள் தாங்கள் காதலிப்பதற்காக எடுத்த முடிவே தவறானது என்றனர். இத்தகவலை வைத்துக்கொண்டு விஞ்ஞான ரீதியான எந்தவொரு முடிவிற்கும் வரமுடியாது என்ற போதிலும் ஏதோவொரு தகவல் பொதிந்துள்ளதை மறுக்கமுடி யாதே.

உண்மையான காதலைத் தவறென்று கூறவில்லை.

மனிதனைப் பல்மடங்கு ஆற்றல் மிக்கவனாக்குவது உண்மையான காதல்.

காதல்வயப்பட்டவன், வானம், பூமி, தாவரங்கள் அனைத்து உயிரினங்களிலும் அன்பு பொங்கி வழிவதைக் காண்பான்.

பருவவயதில்தோன்றுவது காதல் மயக்கமே.

முதலிலே எம்மை வாழ்க்கையில் ஸ்திரப்படுத்திக் கொள்வோம். வாழ்க்கையிலே ஓர் இலட்சியத்தையமைத்து அதை நோக்கி நகருவோம்.

**சினிமாவை வித்தியாசமாகப் பார்ப்போம்**

சினிமா எமது வாழ்வில் தவிர்க்கமுடியாத ஒரு அங்கமாகப் பின்னிப் பிணைந்துவிட்டது. எமது எதிர்பார்ப்புகள் யாவற்றையும் கதாநாயகன் அல்லது கதாநாயகியின் பாத்திரத்திலே பொருத்தி மனத்திருப்தி அடைந்து கொள்கிறோம்.

சினிமாவில் வரும் பாணையில் சண்டையிட்டால்தான் அல்லது உந்துருளியில் இலாவகமாக ஓடித்திரிந்தால் தான் கதாநாயகத்தனம் என்பதை விடுத்து சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்போமே.

***ஆண்களாயின் கதாநாயகியும் பெண்கள்ாயின் கதாநாயகனும் எமது இலட்சியங்கள.***

வில்லனும் அவனது அடியாட்களும் எமது இலட்சியத்தை அடையவிடாது தடுத்திடும் பல்வேறு தடைகள் கவனக் கலைப்பான்கள் மிகவும் வலிமையானவை.

கதாநாயகன்எவ்வாறு இறுதி வரை போராடி வெற்றி பெறுகிறானோ அவ்வாறே நாமும் எமது இலட்சியத்தை அடைவோம்.

சினிமாவையும் எமக்கு உந்து சக்தியாகப் பாவிப்போம்.

**ஆன்மீகத்தில் அதிக நாட்டம் செலுத்துவோம்**

எம்மவரிடையே ஆன்மீக நாட்டம் குறைந்து செல்வதும் மேற்படி தற்கொலை முயற்சிகளுக்குக் காரணம் எனலாம்.

சிறுவயதிலிருந்தே அறநெறிப்பாடசாலைகள் மூலம் ஆன்மீக உணர்வு ஊட்டப்பட்டால் மனிதன் மனிதனாக வாழ முயல்வான்.

இந்த சந்தர்ப்பத்திலே வடமாகாண அமைச்சிடம் பணிவான ஒருவேண்டுகோளை முன்வைக்கிறேன்.

அனைத்து தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் ஆசிரியர்களின் ஒத்துழைபபுடன் ***ஞாயிற்றுக் கிழமைகளில் அனைத்து தனியார் வகுப்புகளையும் நிறுத்தி அறநெறிப் பாடசாலைக்குச் செல்வதை ஏதோ ஒரு வகையில் கட்டாயமாக்குங்கள்.***

கிழமையில் குறைந்தது அன்றொருநாளாவது பிள்ளைகள் பெற்றார்,உற்றார் உறவினருடன் கலந்து பாசத்தை உள் வாங்கிக் கொள்ளட்டும்.

எவ்வளவுதான் பட்டம் பதவி பெற்றிடினும் "அறம்போலும் கூர்மையரேனும் மறம் போல்வர் மக்கட்பண்பில்லாதவர்".

மக்கட் பண்புள்ள புத்திஜீவிகளே எமக்குத் தேவை.

ஆன்மீகமும் அன்புமே மக்கட்பண்புடையோரைப் படைக்கும் ஆற்றல்பெற்றவை.

இறுதியாக, இளைஞர் களே நீங்கள் எங்களின் சொத்து. எமது சமூகத்திற்குச் சொந்த மாணவர்கள் உங்களை அழிக்கும் உரிமை உங்களுக்கில்லை. உங்களுக்கு உதவுதல் எங்களின் கடமை. வாருங்கள் நல்லதோர் சமூகம் படைப்போம்.

**Dr.எஸ்.கண்ணதாசன்**
**யாழ்.பல்கலைக்கழகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

874

## புதையலைத் தேடியவன்!



செல்வம் முழுவதற்கும் அதிபதியாக இருந்தவன் குபேரன்

குபேரனுக்கு அலுவல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருந்தன.

அதனால் தன் கீழ்பணி செய்வதற்காக விருபாகரன் என்பவனை நியமித்து பூமியில் புதைந்து கிடைக்கும் கோடிக்கணக்கான புதையல்களைக் கண்காணித்து வருமாறு கட்டளையிட்டான் குபேரன்.

விருபாகரன் தனக்கு உதவியாளனாக ஒரு கந்தர்வனை நியமனம் செய்து மதுராநகரப் பகுதியிலிருந்து பெரும் புதையலை பாதுகாத்து வருமாறு அனுப்பினான்.

இவ்வாறு இருக்கும்போது சிவனை வழிபாடு செய்யும் அந்தணன் ஒருவன் அங்கே வாழ்ந்து கொண்டிருந்தான்.

அவன் புதையல் இருக்கும் இடத்தைத் தேடி அலைந்து கொண்டிருப்பவன்.

எப்போதும் அவனுக்கு அதே வேலை. ஒருநாள் மதுரா நகர்ப் பகுதிக்கு வந்தான். இருள் சூழ்ந்திருந்த நேரம்.

மனித மாமிசத்தினால் செய்யப் பட்டிருந்த மெழுகுவர்த்திபோல சுடர்விட்டுக் கொண்டிருந்த விளக்கு ஒன்று அந்த அந்தணன் கையிலிருந்தது.

அது அணைந்து நழுவிக் கீழே விழுந்தது.

அவ்வாறு தீபம் விழுந்தால் அந்த இடத்தில் புதையல் இருப்பதற்கு அடையாளம் ஆகும்.

ஆகையால் சிலரைத் துணையாகச் சேர்த்துக் கொண்டு புதையல் இருக்கும் இடத்தைத் தோண்டலானான் அந்தணன்.

புதையலைக் காவல் புரிவதற்காக விருபாகரனால் நியமிக்கப்பட்ட கந்தர்வன், அந்தணன் முதலானவர்கள் தோண்டுவதைப் பார்த்துவிட்டு விருபாகரனிடம் ஓடிச் சென்று முறையிட்டான்.

அதைக் கேட்டதும் விருபாகரன் சினம் கொண்டு அவர்களைக் கொன்றுவிடுமாறு கந்தவர்னுக்குக் கட்டளையிட்டான்.

உடனே கந்தர்வன் அந்தணன் முதலானவர்களைக் கொன்று விட்டான்.

இந்தச்செய்தி குபேரனுக்கு எட்டியது.

விருபாகரனை அழைத்து அவர்களைக் கொல்லும்படி ஏன் கட்டளையிட்டாய்?

வாழ்க்கைக்குத் தேவையான பொருள் கிடைக்காததனால்தானே அவர்கள் அவ்வாறு செய்ய முற்பட்டார்கள்.

அவர்களைப் பயமுறுத்தி விரட்டியிருக்க வேண்டுமே தவிர அவர்களைக் கொன்றிருக்கக் கூடாது என்று சொன்னான்.

மேலும் இறந்து போன அந்தணனுக்குக் குழந்தையாக நீ பிறக்கக்கடவது என்று சபித்தான் குபேரன்.

குபேரனின் சாபத்தை அறிந்ததும் விருபாகரனின் மனைவி ஓடிச் சென்று குபேரனின் காலில் விழுந்து என் கணவனைப் பிரிந்து நான் எப்படி வாழ்வேன் என்று முறையிட்டாள்.

குபேரன் மனம் இரங்கி உன் கணவன் பிறக்கும் அந்தணன் வீட்டின் பணிப் பெண்ணின் மகளாக பிறந்து சந்தர்ப்பவசத்தினால் உங்கள் இருவருக்கும் திருமணம் நடைபெறும் என்று கூறினான்.

அவ்வாறே விருபாகரன் அந்தணன் வீட்டில் பிறந்தான்.

பணிப்பெண்ணின் வீட்டு வாசற்படியில் விருபாகரனின் மனைவி குழந்தையாகக் கிடந்தாள்.

அதைக் கண்ட பணிப்பெண் குழந்தையை எடுத்துக் கொண்டு போய் அந்தணன் வீட்டில் காண்பித்து இந்தக் குழந்தை வானத்திலிருந்து உதித்தது என்று கூறினாள்.

ஏற்கனவே பிறந்திருந்த ஆண் குழந்தையையும் வளர்த்து வந்தனர் அந்தணர் வீட்டார்.

அவர்கள் இருவருக்கும் மணம் முடித்துவிடலாம் என்று எண்ணம் கொண்டனர் அந்தணர் குடும்பத்தினர். குழந்தைகள் இரண்டும் வளர்ந்து பருவம் எய்தினர். ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி பிரியமாக இருந்தனர்.

இருவருக்கும் மணம் செய்து வைத்தனர். வெகு காலத்திற்குப் பிறகு விருபாகரன் மரணம் அடைந்தான். அவன் மனைவியும் தீக்குளித்து இறந்தாள். சாபநீக்கம் பெற்று வானுலகம் சென்றனர்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ➢1214 - பிரான்சில் இடம்பெற்ற போரில் இரண்டாம் பிலிப் இங்கிலாந்தின் ஜோனை வென்றான்.
- ➢1549 - பிரான்சிஸ் சேவியர் அடிகள் ஜப்பானை அடைந்தார்.
- ➢1627 - தெற்கு இத்தாலி நகரான சான் செவேரோவை நிலநடுக்கம் தாக்கியது.
- ➢1865 - வெல்சிய குடியேறிகள் ஆர்ஜெண்டீனாவின் சூபூட் பள்ளத்தாக்கை அடைந்தனர்.
- ➢1880 - இரண்டாவது ஆங்கில-ஆப்கானியப் போர்: மாய்வாண்ட் என்ற இடத்தில் ஆப்கானியப் படைகள் பிரித்தானியரை வென்றனர்.
- ➢1921 - பிரெட்றிக் பாண்டிங் தலைமையில் டொறொண்டோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களினால் இன்சுலீன் கண்டறியப்பட்டது.
- ➢1941 - ஜப்பானியர்கள் பிரெஞ்சு இந்தோ-சீனாவைக் கைப்பற்றினர்.
- ➢1953 - கொரியப் போர் முடிவு: ஐக்கிய அமெரிக்கா, சீனா, மற்றும் வட கொரியா ஆகியவற்றுக்கிடையில் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. தென கொரியா இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டாலும், உடன்பாட்டை மதிப்பதாக வாக்குறுதி தந்தது.
- ➢1955 - ஆஸ்திரியாவில் மே 9, 1945 முதல்நிலை கொண்டிருந்த இரண்டாம் உலகப் போரின் நட்பு நாடுகளின் படைகள் அங்கிருந்து விலகின.
- ➢1990 - பெலாரஸ் சோவியத் ஒன்றியத்திலிருந்து விடுதலையை அறிவித்தது.
- ➢1990 - திரினிடாட் டொபாகோவில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் பிரதமர் மற்றும் அமைச்சர்களை பணயக் கைதிகளாக ஆறு நாட்கள் வைத்திருந்தனர்.
- ➢1997 - அல்ஜீரியாவில் "சி செரூக்" என்ற இடத்தில் 50 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
- ➢2007 - பீனிக்ஸ், அரிசோனாவில் இரண்டு ஹெலிகப்டர்கள் வானில் மோதின.

### பிறப்புகள்

- ➢1824 - அலெக்சாண்டர் டுமாஸ், பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1895)
- ➢1853 - விளாடிமிர் கொரலென்கோ, சோவியத் எழுத்தாளர் (இ. 1921)
- ➢1879 - நாவலர் சோமசுந்தர பாரதியார், தமிழறிஞர் (இ. 1959)

### இறப்புகள்

- ➢1953 - சோமசுந்தரப் புலவர், ஈழத்துக் கவிஞர் (பி. 1878)
- ➢[illegible] (பி. 1896)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"





...தேர்வாளர்களைப் பொறுத்த வரை எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாக இவர்களைக் கருத்தில் கொண்டு அவர்களில் ஒருசிலருக்கு வாய்ப்புக் கொடுத்து ஊக்கம் தர விரும்புவார்கள். அந்த வகையில் ரஞ்சி விளையாட்டுக்களில் கண்ணுக்குத் தெரிந்து சாதனை செய்து கொண்டிருந்தவர்களில் முதலிடத்தில் இருந்தது சச்சினின் பெயர்தான். 1988 ஆம் ஆண்டு இறுதிகளில் மேற்கு இந்தியக் குழுவிற்குச் சென்று அங்கு டெஸ்ட் போட்டிகளில் விளையாட இந்தியா ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.

இந்திய அணியைத் தேர்வு செய்து அனுப்பும் பொறுப்பில் வழக்கம்போல் கிரிக்கெட் வாரியம் மூழ்கியிருந்தன. ரஞ்சிக்கோப்பை போட்டிகளில் சச்சின் சிறப்பாக விளையாடி இருந்ததால் அவர் மேற்கு இந்தியாவிற்குச் செல்லும் அணியில் கட்டாயம் இடம்பெறுவார் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், ஏனோ சச்சின் அதில் இடம்பெறவில்லை. சச்சின் திறமைமீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லாமல் இல்லை. ஆனால், அப்போது இருந்த மேற்கு இந்தியத் தீவுகள் அணி வேகப்பந்து வீச்சாளர்களால் நிறைந்து காணப்பட்டது. குறிப்பாக மால்கம் மார்ஷல், வால்ஷ், அம்புரோஸ் ஆகியோர் தங்கள் வேகப்பந்து வீச்சால் உலக முன்னணி பேட்ஸ்மென்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிக்கொண்டிருந்தனர். அனுபவம் வாய்ந்த பேட்ஸ்மென்களே திணறும்போது சச்சின் போன்ற புதுமுகங்களுக்கு இன்னும் சிரமம்

## சச்சினின் முதல் டெஸ்ட் போட்டி

தான் என்று வாரியம் நினைத்து முழுக்க முழுக்க அனுபவம் பெற்ற வீரர்களையே தேர்வு செய்து மேற்கிந்திய தீவுகளுக்கு அனுப்பி வைத்தது. சச்சின் உட்பட எந்தப் புதுமுகத்திற்கும் வாய்ப்பு வழங்கவில்லை. இத்தனைக்கும் மொத்தம் 11 இன்னிங்ஸில் சச்சின் எடுத்த ரன்களின் எண்ணிக்கை 583 (1 செஞ்சுரி, 6 அம்பதுகள்). சராசரி 65%.

பிரபல ஸ்போர்ட்ஸ் சேனல் நிருபர் டாம் ஆல்டர் மேற்கு இந்திய அணி தேர்விற்கு முன்பு சச்சினை பேட்டி கண்டார். தேர்விற்கு முன்பு சச்சின் தனக்கு வாய்ப்புக் கிடைத்தால் நிச்சயம் அதைப் பயன்படுத்திக் கொள்வேன் என்றும் வேகப்பந்து வீச்சாளர்களைக் குறிப்பாக அம்ப்ரோஸ் பௌலிங்கை விளாசித் தள்ளத் தனக்கு விருப்பமாக இருப்பதாகவும் கூறினான். ஆனால், சச்சின் தேர்வு செய்யப்படாத நிலையில் அதே பத்திரிகை நிருபர் சச்சினை மீண்டும் பேட்டி கண்டார். தேர்வு செய்யப் படாதது ஏமாற்றம் அளிக்கிறது என்றாலும் நல்ல வாய்ப்பிற்காகக் காத்துக் கிடக்க மனதளவில் தான் தயாராகிவிட்டதாகக் கூறினான் சச்சின்.

**கே.ரமேஷ்**

(தொடரும்)



**ஸ்போர்ட்ஸ் சேனல் நிருபர் டாம் ஆல்டரிடம் மேற்கு இந்தியத் தீவு அணியுடன் ஆடுவதற்கு தனக்கு வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பயன்படுத்திக் கொள்வேன் என்றும் வேகப் பந்து வீச்சாளர்களைக் குறிப்பாக அம்ப்ரோஸ் பௌலிங்கை விளாசித் தள்ளத் தனக்கு விருப்பமாக இருப்பதாகவும் கூறினான். ஆனால், தேர்வு செய்யப் படாத நிலையில் அதே பத்திரிகை நிருபர் சச்சினை மீண்டும் பேட்டி கண்டார். தேர்வு செய்யப்படாதது ஏமாற்றம் அளிக்கிறது. என்றாலும் நல்ல வாய்ப்புக் காகக் காத்துக் கிடக்க மனதளவில் தான் தயாராகிவிட்டதாகக் கூறினான்.**

# உங்கள் பிறந்த எண் 07 இல் கூட்டெண் 01 இன் பலன்கள்

**48**

தோற்றம்

கேதுவில் சூரியன் சேர்ந்து தரும் ஆதிக்க பலன். உயரமாக இருப்பார். மாநிறமாக உடல் இருக்கும். சற்று சதைப்பற்றுடன் உள்ள தோற்றம். அழகாக இருப்பார். கண்ணியமாக தூய ஆடையில் துலங்குவர். சீக்கிரம் வழுக்கை விழும். வரிசையான பற்களும் தடித்த உதடுகளும் பரந்த நெற்றியும் எடுப்பான மூக்கும் இருக்கும். தோளும் மார்பும் நிமிர்ந்திருக்கும். கண்ணாடி அணிவர்.

குணம்

பிறரை அடக்கி ஆள நினைக்கிற போக்கு உண்டு. ஆணித்தரமான பேச்சு இருக்கும். அறிவு நிறைந்தவர். பெருந்தன்மையுள்ளவர். அச்சமேயிராது. தெய்வபக்தி உள்ளவர். தம்முடைய மதம் தத்துவத்தில் பிடிப்பு உள்ளவர். வேதாந்தம் யோகம் அரசியல் பற்றும் உள்ளவராவர்.

அழுத்தமான மனிதர். ஆனால் தயக்கம் உள்ளவர். மனதிடமும் விதியின் மேல் நம்பிக்கையும் இருப்பவர். பிறந்தது முதல் கட்டுப்பாட்டுடன் வளர்ந்திருப்பார். கல்வி தடைப்படலாம். நுட்பமான உணர்விருக்குமாதலால் வரப்போவதைக் கனவுகளாகக் கண்டு முன் கூட்டியே அறிந்து விடுவர். நடு வயது 34 வரை ஒரு நிரந்தமரமான வாழ்க்கை அமையாது. மானத்தைப் பெரிதாக மதிப்பவரானபடியால் நியாயம் சட்டதிட்டங்களை மீறாமல் கட்டுப்பட்டு நடப்பார். வலிந்து சென்று பிறருக்கு உதவி செய்வார். பொதுக் கருத்தும் பொதுமக்கள் நலனில் அக்கறையும் உடையவராவர். அடக்குமுறை அநீதி நிகழக் கண்டால் ஆவேசப்படுவர்.

நகைச்சுவை உணர்விருக்கும். சகிப்புத் தன்மையுடன் இருப்பார். மனித நேயமும் பிரதிபலனும் எதிர்பாராத அன்புமிருக்கும். நல்ல தன்மையுடன் கூடியவரை அனைவரிடமுமிருந்து நல்ல பெயர் எடுப்பார். எல்லோரும் நன்றாக வாழ இறைவனைத் தொழுவர். தம் துக்கத்தை, சிரமத்தை தம்முள் மறைத்துக் கொண்டு விடுவார். வெளியில் கலகலப்பாகவே பழகுவார். சகஜமாக இருப்பார். இவரை எவரும் வெறுக்க மாட்டார்கள். சில சமயம் இவர்களை அப்பாவிகளாக ஏதும் அறியாதவர்களாக நினைக்கும்படி இருப்பார். ஆனாலும் ஆழ்ந்த உணர்வு உள்ள இவர்கள் கெட்டிக்காரர்களே!

ஆபாசம் அநீதியைத் தயங்காமல் கண்டிப்பர். திடீரென மனோபாவம் மாறி தொழில், பணம், அரசியல் ஏதாவது முக்கிய சாதனை எனத் திரும்பும். வாழ்க்கையில் பட்ட சிரமங்களும் கண்ட சோதனைகளும் இவர்களை எச்சரிக்கையுள்ளவராக மாற்றும். முகத்துதி கேட்டும் மயங்காதவராக ஆக்கும். தமக்கு சிரமம் வராதவாறு தேவையற்ற வம்புகளில் சிக்கமாலிருப்பார். அரசியலில்கூட அளவோடு ஈடுபடுவார். சிக்கலான சங்கதிகளில் நியாயம் எது எனப்புரிந்து கொள்ளுவர் மூட நம்பிக்கைகளை ஒதுக்கி விடுவர். எல்லோரும் எதை விரும்புவர் என்பதை நன்கறிவர். சுயமாக நன்கு முயன்று மூளையைப் பயன்படுத்தி முன்னுக்கு வந்துவிடுவர்.

குடும்பம்

காதலித்து மணக்கலாம். ஆனாலும் இரண்டு மனைவி அமைவர். திருமணம் நிம்மதியைத் தராது. தாமதமாகத் திருமணம் நடக்கும். வாரிசும் தாமதமாகப் பிறக்கும். பெற்றோரில் ஒருவரை இள வயதிலே இழந்திருப்பார். ஏதாவது பிரச்சனை குழப்பிக் கொண்ட இருக்கும். குறை ஏதாவது இறுதிவரை தொடரும். பொருளாதரம் பிற்பகுதி வாழ்வில் சரிப்படும். பிரபலம் புகழ்கூட அமையும். பின் வாழ்க்கை ஒளிமயமாகும்.

தொழில்

கலையார்வம் இருக்கும். கல்வி தடைப்பட்டாலும் முயன்றால் மீண்டும் தொடருவதாகும். நல்ல கல்வியாளராகலாம். அறிவுக்கு மேலான ஞானம் இவர்களுக்கு உண்டாகும். சரித்திரம், இரசாயனம், ஆன்மிகத்தில் நூல் எழுதுவர். பொருளாதாரம் சீர்படும். அரசியலிலும் பதவி கிட்டும். சொந்ததொழில், கடை, வியாபாரம் நடக்கும். மின்சாரக் கருவிகள். பத்திரிகை. தொழிற்சாலை தொடர்பாக வேலை செய்வார். பேச்சும் எழுத்தும்கூடத் தொழிலாக அமையும். படத்திற்கும் வீடு வாகனம் வாங்கவும் மீடியேட்டர்களாக, பொருளாதர



உதவி பெற்றுத் தருபவராக இருப்பர். நடுவயதிலேயே தொழிலில் ஒரு நிரந்தரம் அமையும். ஏற்றுமதி இறக்குமதித் தொழிலும் சிறப்பாக நடக்கும்.

நோய்

ஏதும் ஓர் உடல் குறை இருக்கலாம். அடிக்கடி ருமேடிக்காய்ச்சல், மூக்கு்சோளாறு பாதிக்கும். சனி, கபம், தொடர்பான நோய், உஷ்ண சம்பந்தமான நோய்கள் உண்டாகும். பி.பி இருக்கும். மூலம் 46 வய்திற்கு பின் வரும். அஜீரணம், மலச்சிக்கல், பல், ஈறு நோய் ஏற்படும். கண்ணுக்கு கண்ணாடி போடுவார். மனம் ஒருங்கிணைத்து உணருவதில் மாறாட்டமும் உண்டாகலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாசர் பதில்கள்



உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்
ஆசிரியர்
வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம்
ஒ மூங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்



ক.தங்கலீலா, கரவெட்டி

வணக்கம் அண்ணா!

**தங்கைகளுக்காக அண்ணன்கள் வாழ்வை தியாகம் செய்கிறார்கள். இதற்கு உங்களது விளக்கம் என்ன?**

ஆண்கள் தியாகிகள்.

கிரு.செந்தூரன், நிதர்சன் கிறீம்கவுஸ்

அன்பின் வியாசரே!

**அண்மையில் வெளியான கோச்சடையான் வெற்றிப்படமா?**

வெற்றி தோல்வி என்பதற்கப்பால் தமிழ் சினிமாவின் பொன் எழுத்தால் பொறிக்கப்பட வேண்டிய பெயர்தான் கோச்சடையான் . சுப்பர் ஸ்டார், தான் சுப்பர் ஸ்டார் என்பதை நிரூபித்து விட்டார்.

வியாசகி, யாழ்ப்பாணம்.

Hi வியா Sir,

**இந்த உலகத்திலே உயர்ந்த உன்னதமான மகான் யார்?**

வட்டில் வளர்க்கும் நாய் குட்டி ஈன்றதும் குட்டிகளை வீதியில் விடாதவன் எவனோ அவனே மகான்!

அ.நளினார்சினி, கோண்டாவில்

Hi, வியா Bro

**உலகின் மிகப் பெரிய அதிசயமாக நீர் எதனைக் கருதுகின்றீர்?**

இனப்பிரச்சினை விடயத்தில் ஐ.நாவையே அதட்டும் இலங்கையைப் பார்த்து கைகட்டி நிற்கும் ஐ.நா.வைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன்.

### உலகிலே எங்கே தூய தமிழ் பேசுகிறார்கள்?

### அண்மையில் வெளியான கோச் சடையான் வெற்றிப்படமா?

இ.கரன்,சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

அன்பின் வியாசரே!

**உலகிலே எங்கே தூய தமிழ் பேசுகிறார்கள்?**

சன் ரீ.வி. நிகழ்ச்சி ஒன்றில் உலகில் தூய தமிழ் பேசும் மக்கள் இலங்கை தமிழர் என நிகழ்ச்சித் தொடுப்பாளர் வணக்கம் புகழ் நிர்மலா பெரியசாமி தெரிவித்திருந்தார். பட்டிமண்டப புகழ்சாலமன்பாப்பையா, திண்டுக்கல் ஐ.லியோனி போன்றோரும் தமிழை தமிழாய் பேசுபவர்கள் யாழ்ப்பாணத் தமிழர் என்றனர். ரஜினியின் சிவாஜி படத்தில் ரஜினி திருமணம் செய்ய தமிழ் பெண் வேண்டும் என கோவில் கோவிலாக அலைந்தும் கிடைக்கவில்லை. அப்போது விவேக் சொல்லுவார். தமிழ் பெண் வேண்டுமென்றால் யாழ்ப்பாணம் தான் போக வேண்டும் என்று. இப்படி யாழ்ப்பாணத் தமிழுக்கும் தமிழனுக்கும் நிறைய மதிப்பு மரியாதை இருக்கிறது. அதை நாம் கட்டிக் காப்போமா...?

அ.அச்சுதன், கோண்டாவில்

Hi, How are you?வியா Bro

**அன்பில் ஓங்கி நிற்பவன் மகாபாரதத்தில் கர்ணனா? இல்லாவிடில் இராமாயாணத்தில் இலக்குமனனா?**

அண்ணனிற்காக கூடவே சென்ற இலக்குமனனிலும் அங்கதேசத்திற்கு அதிபதியாக்கி கர்ணன் கௌரவம் காத்த துரியோதனனுக்காய் துஸ்டன் என்று தெரிந்தும் இறுதிவரை நின்றான். இறுதி மூச்சையும் விட்டான். அவனே சிறந்தவன்.

த.மோகனரூபன்

Hi,வியா Sir

**கலாசாரத்திலே அன்று களைகட்டிய யாழ்ப்பாணம் இன்று கொலைகளிலும் களைகட்டி நிற்கிறதே. இதைப் பற்றி உங்களின் கருத்து?**

கலாசாரத்தில் கலப்பு. அதுவும் திட்டமிட்டு எம் கலாசாரத்தை தீர்த்துக் கட்டிவிட கலப்பு. அன்று கலாசாரத்தில் களைகட்டிய நாம் இன்று கொலை கட்டி நிற்கிறோம்.

# புலம்பெயர் புலிகளின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றில் த.தே.கூட்டமைப்பு

## அமைச்சர் கெஹலிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை பாராளுமன்றத்திற்குள் புலம்பெயர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாக தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர் என குற்றம்சாட்டும் அரசாங்கம் பாலஸ்தீனத்தில் கதறக் கதற பிள்ளைகளும் பொதுமக்களும் இஸ்ரேலியர்களால் கொலை செய்யப்படுகின்றனர். ஆனால் அமெரிக்காவினதும் நவிப்பிள்ளையினதும் மனிதவுரிமைக் கோஷங்கள் இதன்போது மௌனித்து விட்டன என்றும் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தை போன்று வடக்கில் தமிழ் மக்களின் காணிகள் பறிக்கப்படுகின்றன. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராஜா பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து தொடர்பாக அரசாங்கத்தரப்பு நிலைப்பாட்டை தெரிவித்த போதே அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதி தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் கூட்டமைப்பினர் அரசியல் மயமாக்குகின்றனர். இதனை தமது அரசியல் தேவைகளுக்காகவே பயன்படுத்துகின்றனர். எனவே, தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளும் போய் விடுகின்றன. முப்பது வருட கால யுத்தம் முடிவடைந்து தற்போது படிப்படியாக இயல்பு நிலை திரும்பி வருகிறது. ஒரே இரவில் இயல்பான சூழ்நிலையை கொண்டு வர முடியாது.

சிற்சில குறைபாடுகள் காணப்படுகின்றன. 30 வருட கால யுத்த வடுக்களுக்கு ஒரேயடியாக மருந்து போட்டு குணமாக்க முடியாது. ஆனால் விடுதலை புலிகள் பயங்கரவாதத்தில் தமிழ் மக்கள் சிக்கித்தவித்த காலத்தை விட இன்று அம் மக்கள் சுதந்திரமாக ஜனநாயகத்துடன் வாழ்கின்றனர், சுதந்திரமாக நடமாடுகின்றனர். வடக்கிலிருந்து தெற்கிற்கு வருகின்றனர், தெற்கிலிருந்து வடக்கிற்கு செல்கின்றனர், வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் தினம் தினம் இங்கு வந்து வட பகுதிக்கு சென்று தம் உறவுகளை சந்திக்கின்றனர். புலிகள் காலத்தில் இவ்வாறானதொரு நிலைமை காணப்பட்டதா என்பதை மனச் சாட்சியை தட்டிப்பார்த்து குற்றம் சுமத்து பவர்கள் கேட்டுப்பார்க்க வேண்டும்.

### பெண்கள், சிறுவர்கள்

பெண்களுக்கு பாதுகாப்பில்லை எனக் கூறிய மாவை சேனாதிராஜா எம்.பி. அன்று புலிகளால் பெண்களும் சிறுவர்களும் கடத்தப்பட்டு சயனைட் குப்பி கழுத்தில் அணிவிக்கப்பட்டு தற்கொலை குண்டுதாரிகளாக பயன்படுத்தப்பட்ட போது தமிழ் பெண்களினதும் சிறுவர்களினதும் பாதுகாப்பு தொடர்பாக பேசினாரா? மௌனமாக இருந்தார்.

### அரசாங்கம்

புலிகளுக்கு பயந்து மௌனிகளாக இருந்தவர்களை இந்த அரசாங்கம் தான் பேச வைத்தது என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது.

### இராணுவம்

முப்பது வருட கால யுத்தம்,



பயங்கரவாதம் தலைவிரித்தாடிய வடக்கிலிருந்து உடனடியாக இராணுவத்தை வாபஸ் பெற முடியாது என்றாலும் அரசாங்கம் தற்போது படிப்படியாக இராணுவத்தை வாபஸ் பெற்று வருவதோடு பொது மக்களின் காணிகளும் பெருமளவில் மீளக் கையளிக்கப்பட்டு வருகின்றன.

### தேசிய பாதுகாப்பு

வடக்கில் மட்டுமல்ல நாடு முழுவதும் இராணுவத்தினர் உள்ளனர். ஏனென்றால் அனைத்தையும் விட நாட்டின் தேசிய பாதுகாப்பு முதன்மையானதாகும். அதற்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

### அரசியல்

அரசியலுக்காக தேசிய பாதுகாப்பை கைகழுவி விட முடியாது. தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் கூட்டமைப்பு அரசியல் மயமாக்குவதால் உண்மையான பிரச்சினைகளும் அமுங்கிப் போய் விடுகிறது.

### புலம்பெயர் புலிகள்

விடுதலைப்புலிகள் காலத்தில் பாராளுமன்றத்தில் புலிகளை பிரதிநிதித்துவப்படுத்தி குரல் கொடுத்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் இன்று புலம்பெயர் விடுதலைப் புலிகளை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி குரல் கொடுக்கின்றனர்.

### மனிதவுரிமை

பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேலியர்கள் குண்டு மழை பொழிகின்றனர். சிறுவர்கள், பொதுமக்கள் கதறக்கதறக்கொலை செய்யப்படுகின்றனர். கொல்லப்பட்ட பிள்ளைகளின் மரண ஊர்வலத்தின் மீதும் இஸ்ரேலியர்கள் குண்டு மழை பொழிகின்றனர்.

எங்கே அமெரிக்காவினதும் நவிப்பிள்ளையினதும் மனிதவுரிமை போனது. அவர்கள் மனித உரிமைகளை தொலைத்து விட்டு ஏனைய நாடுகளில் இருட்டில் மனித உரிமைகளை தேடுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவிற்கும் சோபித தேரருக்கும் உயிராபத்து

## புலனாய்வுத்துறை அதிகாரி தகவல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் நீதியான சமூகத்திற்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் மாதுளுவாவே சோபித தேரர் ஆகியோர் உயிராபத்தை எதிர்நோக்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் இருவரும் உயிராபத்தை எதிர்நோக்கியிருப்பது குறித்து புலனாய்வு பிரிவின் அதிகாரி ஒருவர் தகவல் வழங்கியதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறுகிய அரசியல் நோக்கத்திற்காக மேற்கொள்ள போகும் பயங்கரமான விபத்தொன்று குறித்த தகவலையே தாம் இவ்வாறு அறிய தந்ததாக அந்த புலனாய்வு பிரிவின் அதிகாரி கூறியுள்ளார்.



மாதுளுவா சோபித தேரர் கடந்த 22 ஆம் திகதி வாகன விபத்தொன்றை சந்தித்தமை திடீரென நடந்த சம்பவம அல்ல எனவும் அது பயங்கரமான விபத்தை ஏற்படுத்துவதற் கான முன் பயிற்சி எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பிரதியமைச்சரான ஸ்ரீபதி சூரியாராச்சியின் மரணமும் இவ்வாறு சதித்திட்டம் போட்டு மேற்கொள்ளப்பட்ட விபத்து என தெரிய வந்துள்ளதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வீட்டை புகைப்படம் எடுத்தவர் கைது செய்யப்பட்டார்.

அவரை கொலை செய்ய முயற்சித்த நபர் கைது செய்யப்பட்டார் என்ற செய்திகள் இராணுவ புலனாய்வு பிரிவின் ஆலோசனைக்கு அமையவே முக்கியத்துவம் கொடுத்து ஊடகங்களில் வெளியிடப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இன்னும் விடுதலைப் புலிகளின இலக்கில் இருப்பதாக காட்டுவதே இதன் நோக்கம்.



முன்னாள் ஜனாதிபதிக்கு விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக கூறி, அவரை கொலை செய்து விடுதலைப் புலிகளே அதற்கு காரணம் என காட்டுவதற்காக அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவரின் ஆலோசனையின்படி சில குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

அத்துடன் எதிர்க்கட்சி அரசியல் வாதிகளான மங்கள சமரவீர மற்றும் கலாநிதி ஹர்ச டி சில்வா ஆகியோர் தொடர்பிலும் இந்த குழுக்கள் விசேட கவனத்தை செலுத்தியுள்ளன என்றும் அந்த புலனாய்வு பிரிவின் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே அரசாங்கத்திற்கு தலையிடியாக மாறியுள்ள இணையத்தளங்களை நடத்தி வரும் சில ஊடகவியலாளர்களை இந்த குழுக்கள் கண்காணித்து வருகின்றன.

லண்டனில் தஞ்சமடைந்துள்ள லங்கா ஈ நியூஸ் ஆசிரியர் சந்தருவான் சேனாதீர, தி இண்டிபெண்டன் ஆசிரியர் சுபாஸ் ஜயவர்தன ஆகியோர் இவர்களில் பிர்தான இலக்காகும்.

லண்டனில் இருந்து பதிவேற்றப்படும் இணையத்தளங்களின் தகவல்களை சேகரிப்பதற்காக இராணுவ புலனாய்வு பிரிவின் மேஜர் ஆர்.பீ.டி.பத்திரண என்ற அதிகாரியை லண்டனில் களமிறக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அந்த புலனாய்வு பிரிவின் அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (6)



கைதடி டென்மார்க் ஒன்றிய அனுசரணையில் கைதடி மக்கள் நலன் பேணும் வறுமைக் கோட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு கைதடி வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது டென்மார்க் ஒன்றிய பிரதிநிதி திருமதி குகதாஸ் விஜி மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் துவிச்சக்கரவண்டிகள் பெற்ற மாணவர்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-நல்லூர் செய்தியாளர்)

## வீரர்களுக்கு ஜனாதிபதி வாழ்த்து

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோவில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் 20ஆவது பொதுநலவாய விளையாட்டுக்களில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீரர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நீங்கள் அனைவரும் தேசிய அணியில் உள்வாங்கப்படுவதற்காக கடுமையான போட்டிகளுக்கு கடுமையான உழைப்புக்கு மத்தியில் தெரிவு செய்யப்பட்டீர்கள் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். இந்த பெறுபேறு குறித்து நீங்கள் பெருமையடைய வேண்டும்.

அத்தோடு பரவலாக கொண்டாடப்படும் நிகழ்வொன்றில் உங்கள நாட்டை பிரதிநிதித்துவப்படுத்துவதை தெளிவான சலுகையாகவும் கௌரவமாகவும் நீங்கள் கருத வேண்டும்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 156 விளையாட்டு வீரர்கள் பல்வேறு வெவ்வேறான நிகழ்வுகளில் பங்குபற்றுகின்றனர். ஜனாதிபதி தனது செய்தியில் நாட்டினுள் ஒத்திசைவை ஊக்குவிப்பதற்கு விளையாட்டு வீரர்கள் ஆற்றக்கூடிய பங்கு குறித்து தெரிவித்தார்.

இலங்கையில் விளையாட்டுக்கள் எப்போதுமே முக்கியமான மற்றும் ஒற்றுமைப்படுத்தும் பங்கினை ஆற்றியிருக்கின்றன. முக்கியமாக நாட்டில் போருக்கு பிந்தைய் சூழலில் நாட்டின் அனைத்து பகுதிகளில் இருந்தும் விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் ஒத்திசைவின் உணர்வினால் விளையாட்டு ஒன்றாக இணைக்கிறது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் விளையாட்டு வீரர்களுக்கான செய்தியில் வெற்றி பெறுவது அல்லது தோல்வியடைவது முக்கியமானது அல்ல எனவும் விளையாட்டுக்களின் போது அவர்கள் என்னவாறான விளையாட்டுணர்வில் இவ் விளையாட்டுக்களில் செயற்படுவதே முக்கியமானது என்பதை ஜனாதிபதி ராஜபக்ஷ நினைவுறுத்தினார். (6)

# இலங்கை அரசைக் கண்டித்து பிரிட்டன் பிரதமருக்கு மகஜர்

(கொழும்பு)

தமிழின் வரலாற்றில் ஆறாத ரணமாகிப் போன கறுப்பு ஜூலையின 31ஆவது வருட நினைவு நாளன்று சிங்களப் பேரினவாத அரசின் அராஜகத்தை எதிர்க்கும் வகையில் பிரித்தானியத் தமிழர் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டமானது எழுச்சியுடன் நடைபெற்றது.

இதில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் உணர்வுபூர்வமாக கலந்து கொண்டு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

மாலை 4 மணியளவில் பிரித்தானிய பிரதமரின் அலுவலகத்தின் முன்பு ஆரம்பமாகிய இந் நிகழ்வில்,

1. தமிழரின் பூர்வீக நிலங்கள் சிங்கள அரசால் அபகரிக்கப்படுதல்

2. பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பெண் யுத்த சாட்சிகளை பிரித்தானியா மீண்டும் இலங்கைக்கே நாடு கடத்துதல்.

3. தாயகத்தில் கேட்பாரற்று தொடர்ந்து இடம்பெறும் கைதுகள் மற்றும் படுகொலைகள்.

4. இலங்கை, தன் மீதான சர்வதேச விசாரணைகளைத் தடுத்தல்.

5. இலங்கையில் உண்மை நிலவரங்கள் வெளிவரா வண்ணம் பத்திரிகையாளர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தல்.

6. சிங்கள அரசு புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் மீது கொணடு வந்த தடை.

போன்ற இலங்கை அரசின் அராஜக போக்கைக் கண்டித்து பதாகைகளைத் தாங்கியும் கோசங்களை எழுப்பியும் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். அத்துடன் இவ்விடயங்கள் உள்ளடக்கப்பட்ட காட்சிப்படுத்தலும் இதன்போது இடம்பெற்றது.

உள்நாட்டுப் பிரச்சினை என்று வெளி நாடுகளைத் தலையிடாமல் வைத்து தமிழர் மீதான இன அழிப்பைத் தொடர்ந்து வந்த சிங்களதேசம் முதல் தடவையாக 83 கறுப்பு ஜூலையில்தான் சர்வதேச நாடுகள் மத்தியில் அம்பலப்பட்டுப் போனது.

உலகை உலுக்கிய கறுப்பு ஜூலை வழமை போல் இவ்வருடமும் லண்டன் மாநகரில் எழுச்சியுடன் நடைபெற்றது.

இவை தொடர்பான மனு ஒன்றும் பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது. (6)

# கொலை செய்யும் நோக்கம் உள்ளதா? அரசாங்கத்தை நோக்கி ரணில் கேள்வி

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரி யவை கொலை செய்யும் நோக்கம் எதுவுமுள்ளதா? என சபையில் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சட்டத்தரணிகள் சங்கத் தலைவரின் வாகனத்தை பின் தொடர்ந்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டியின் இலக்கங்களின் கூட்டுத் தொகை 13 என்றும் இவ்வாறான கூட்டுத் தொகையுடன் இலக்கங்கள் வழங்கப்படுவதில்லை என்ற பிரதமரின் பதிலை ஏற்றுக் கொள்ளமுடியாதெனவும் சுட்டிக் காட்டினார்.

பாராளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 23 இன் கீழ் இரண்டில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை சட்டத் தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரிய கொழும்பு ஹல்ஸ்ரொப்பில் தனது கடமைகளை முடித்துக் கொண்டு வாகனத்தில் திரும்பிக் கொண்டிருக்கையில் முகம் தெரியாத வண்ணம் ஹெல்மட்டினால் முகத்தை முழு மையாக மூடிவந்த சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்நது வந்துள்ளனர்.

இது தொடர்பாக அவர் கறுவாத் தோட்ட பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹல்ஸ்ரொப்பிலிருந்து கலதாரி ஹோட்டல் வரை இந்த மோட்டார் சைக்கிள் பின் தொடர்ந்து வந்துள்ளது.

இப்பிரதேசத்தில் ஜனாதிபதி செயலகம் காணப்படுகிறது. அத்தோடு இப்பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமாகும். இவ்வாறானதோர் நிலையிலும் உபுல் ஜயசூரிய கலதாரி ஹோட்டலில் 1 1/2 மணித்தியாலங்கள் இருந்து விட்டு வெளியே வந்த பின்னரும் அந்த மோட்டார் சைக்கிள் ஹோட்டலுக்கு வெளியே காணப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதித்தது பாரதம்!

...தனக்குக் கிடைத்த இந்த நல்ல வாய்ப்பை மோடியும் மிக நேர்த்தியாகப் பயன்படுத்திக் கொண்டார். பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி அமைத்தல், பிரிக்ஸ் பல்கலைக்கழகம் குறித்து ஆலோசனை, பயங்கரவாதத்திற்கு எதிரான கருத்துருவாக்கம்; ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் செய்ய வேண்டிய மாற்றம், சர்வதேச அளவில் நிகழும் சிக்கல்கள் எனப் பலவற்றை அவரது உரை வெளிபடுத்தியது.

"ஆப்கானிஸ்தான் முதல் ஆஸ்திரேலியா வரை உலகம் முழுவதும் தற்போது பிரச்சினைகள் சூழ்ந்துள்ளன. பயங்கரவாதம் மனித வாழ்வுக்கு எதிரானது என்பதால் அதை எந்த வடிவிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அணுவளவும் அதனைப் பொறுத்துக்கொள்ளக் கூடாது. பயங்கரவாதிகளுக்கு புகலிடமோ, ஆதரவோ அளிக்கக் கூடாது என்று, அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளை பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் ஒருங்கிணைந்து நிர்பந்திக்க வேண்டும்.

பயங்கரவாதம் போரைப் போன்றது. பயங்கரவாதத்தால் அப்பாவி மக்கள் மீது மறைமுகப் போர் தொடுக்கப்படுகிறது. அதை சர்வதேச சமூகத்தால் முழுமையாக ஒடுக்க முடியவில்லை. மனிதாபிமானத்தால் ஒன்றிணைந்து, பயங்கரவாத சக்திகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாடுகளை தனிமைப்படுத்த வேண்டும். பிரிக்ஸ் நாடுகள் எடுக்கும் முடிபு உறுதியான ஒருங்கிணைந்த நடவடிக்கையாக மாற வேண்டும். சர்வேதச பயங்கரவாதத்தை ஒடுக்குவது குறித்து விரிவான வரைவு உடன்படிக்கையை ஐ.நா.சபை விரைவில் கொண்டு வர வேண்டும்" என்றார் மோடி. அவரது கருத்து அனைவராலும் ஏற்கப்பட்டது.

பிரேசில் மாநாட்டில் மோடியின் இரண்டாம் நாள் உரை, அவரது மேதாவிலாசத்தைக் காட்டுவதாக அமைந்து, அனைவராலும் பாராட்டப்பட்டது.

**பல நாட்டுத் தலைவர்களுடன் சந்திப்பு:**

தனது பிரேசில் பயணத்தின் அங்கமாக, சீன, ரஷ்ய அதிபர்களுடன் மோடி கலந்துரையாடினார். குறிப்பாக, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும், வர்த்தகத்திற்கு போட்டியாகவும் உள்ள சீனாவின் அதிபர் ஜீ ஜின்பிங்குடன் மோடி நிகழ்த்திய பேச்சு அர்த்தமுள்ளதாக அமைந்தது.

இந்தியா வருமாறு மோடி விடுத்த அழைப்பை சீன அதிபரும் ஏற்றுள்ளார். மேலும், சீனாவின் ஷாங்காயில் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆசிய-பசிபிக் நாடுகளின் பொருளாதாரக் கூட்டமைப்பு நடத்தும் அபெக் (APEC) கூட்டத்திற்கு வருமாறு மோடிக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

இச்சந்திப்பின்போது இந்திய-சீன எல்லை பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து இருவரும் பேசினர். மேலும் இந்தியாவில் உள்கட்டமைப்புத் துறையில் முதலீடு செய்யுமாறு சீனாவை மோடி வலியுறுத்தினார். சீன அதிபர் ஜீ ஜின்பிங் பேசுகையில், இந்தியாவிலிருந்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்து வர்த்தகத்தை சமநிலைப்படுத்துவதற்கு சம்மதம் தெரிவித்தார்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினைச் சந்தித்த மோடி, இந்திய அணுமின் திட்டங்களுக்கு ரஷ்யா அளிக்கும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார். இந்தியாவின் நீண்ட நாளைய நட்புநாடு என்று ரஷ்யாவைக் குறிப்பிட்ட மோடி, ரஷ்ய உதவியுடன் அமைக்கப்பட்ட கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு வரும் டிசம்பரில் வருமாறு அழைப்பு விடுத்தார். அதனை புடின் ஏற்றுக்கொண்டார்.

பாதுகாப்பு, அணுமின் துறை, தொழில் நுட்பம் ஆகியவற்றில் ரஷ்யாவின் ஒத்துழைப்பை நாடுவதாகவும் அதிக முதலீடுகளை எதிர்பார்ப்பதாகவும் மோடி குறிப்பிட்டார். மேலும் சில அணு உலைகளை இந்தியாவில் நிறுவத் தயாராக இருப்பதாக புடின் அப்போது உறுதி அளித்தார். சிரியா, இராக், உக்ரைன், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பலநாடுகளின் பிரச்சினைகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்ததாக, இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி அக்பருதீன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புகள் தவிர, தென் அமெரிக்க நாடுகளின் தலைவர்கள் அனைவரையும் வரவழைத்து மோடியுடன் சந்திக்கச் செய்தார் அந்நாட்டு அதிபர் தில்மா ரூசெஃப். இச்சந்திப்பு, ஜுலை 17-இல் நடைபெற்றது.

பிரேசில், அர்ஜென்டினா, பொலிவயா, சிலி, கொலம்பியா, ஈகுவடார், கயானா, பராகுவே, பெரு, சுரிநாம் உருகுவே, வெனிசூலா ஆகிய 12 நாடுகளும் இணைந்து உருவாக்கியுள்ள அமைப்பு தென் அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பாகும் (UNASUR). இந்நாடுகளின் அதிபர்கள் அனைவரும், பிரேசில் அதிபர் முன்னிலையில் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்து அளவளாவினர்.

இது இந்தியாவுக்கு கிடைத்த மாபெரும் கௌரவம் ஆகும். இந்தச் சந்திப்பில் தென் அமெரிக்க நாடுகளுடனான வர்த்தகத்தில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும், இருதரப்பு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.







**தெளிவான, உறுதியான அறிக்கை:**

இம்மாநாட்டில் இந்தியாவின் நிலைப்பாட்டை திட்டவட்டமாக முன்வைத்ததில் மோடி அளப்பரிய வெற்றி பெற்றார். இம்மாநாட்டில் சர்வதேச ஆட்சிமுறை, மண்டல நெருக்கடிகள் குறித்து மோடி அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கையில் கூறியிருந்ததாவது:

மேற்காசிய நிலவரம், இந்த மண்டலத்திலும், உலக அளவிலும் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது. இதனால், வளைகுடாநாடுகளில் வசிக்கும் 70 லட்சம் இந்தியர்களின் பாதுகாப்பு கேள்விக்குறி ஆகியுள்ளது.

இராக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றி பிரிக்ஸ் மாநாடு ஆராய வேண்டும். ஆதரவற்றோருக்கு அடைக்கலம் தர மறுத்து, தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் தரும் நாடுகளுக்கு நாம் கூட்டாக எச்சரிக்கை விடுக்கவேண்டும். மேலும், தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடும் ஆப்கானிஸ்தானத்திற்கு நாம் உதவ வேண்டும்.

சிரியாவில் அமைதி ஏற்பட இந்தியா உதவும். இஸ்ரேல் பாலஸ்தீன நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள மோதல் கவலை அளிக்கிறது.

தீவிரவாதம் குறித்து பல்வேறு நாடுகள் பல்வேறு அளவுகோல்களை வைத்திருப்பதால், அதற்கு எதிராக ஆக்கப்பூர்வமான நடவடிகைகளை எடுக்கமுடியவில்லை என்று கூறியிருந்தார் மோடி.

ஜேர்மனி அதிபர் ஏஞ்சலோ மெர்கெல்லுக்கு பிரேசிலிருந்து ஜுலை 17-இல் விடுத்த பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி, மோடியின் உலகப் பார்வையைக் காட்டியது. அப்போது ஜேர்மனியின் உலகக் கோப்பை கால்பந்து வெற்றியைப் பாராட்டவும் மோடி தவறவில்லை. அப்போது இருதரப்பு உறவுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இவ்வாறாக, தனது பிரேசில் விஜயத்தை இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை தெளிவாகப் பிரகடனப்படுத்தவும், இந்திய நலன்களுக்கான முதலீடுகளை ஈர்க்கவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் மோடி.

இதன்மூலமாக, உலக அரங்கில் இந்தியாவின் முக்கியத்துவத்தை வலுப்படுத்தியும் வந்திருக்கிறார் மோடி.

சீன, ரஷ்ய, தென் அமெரிக்க நாடுகளின் தலைவர்களுடனான மோடியின் சந்திப்பு, உலகின் இந்தியத் தேவையை உணர்த்தியிருக்கிறது.

வர்த்தகம் மூலமாக நாடுகளிடையே உறவை மேம்படுத்தவும், பயங்கரவாதத்திற்கு எதிராக அனைவரையும் திரட்டவும் மோடி முயன்றிருக்கிறார்.

எதிர்காலத்தில் இம்முயற்சிகள் முழுமையாகப் பலனளிக்கும் போது, இந்தியப் பிரதமர் மோடியின் தொலைநோக்குப் பார்வை இந்திய எல்லையைத் தாண்டி உலக அளவில் சாதிக்கத் துவங்குவதைக் காண முடியும்.





*-இணையம்-* (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசிற்கு தொடர்ந்து சந்தர்ப்பம்; ஐ.நா.மனித உரிமைப் பேரவை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு பதிலளிப்பதற்கு தொடர்ந் தும் சந்தர்ப்பம் அளிக்கப்படும் என ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அறிவித்து ள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர் பிலான விசாரணைகளை நடத்த உள்ளனர.

இந்த விசாரணைகளில் பங்களிப்புச் செய்யுமாறு இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு பல்வேறு தடவைகள் அழைப்பு விடுத்திருந்தது.

எனினும், இந்த அழைப்புக்களை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில், விசார ணைகள் தொடர்பில் கருத்துக்களை வெளி யிட இலங்கைக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் பேச்சாளர் ரொபர்ட் கொல் வில்லி தெரிவித்துள்ளார்.

வாய்மொழி மூல அறிக்கை மற்றும் விசாரணைகள் இறுதி அறிக்கை ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களிலும் பதிலளிப்பதற்கு இலங்கைக்கு சந்தர்ப்பம் உண்டு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி, பாதுகாப்புச் செய லாளர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் பதிலளிப்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பார்கள் என அரசாங்கத் தரப் புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)

## இணையமாட்டோம் விமல் உறுதியளிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஊவா மாகாண சபை தேர்த லில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடப் போவதில்லை என்று அமைச்சர் விமல் வீரவன்சவின் கட்சி தெரிவித்துள்ளது.

ஏற்கனவே தமது கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஒருவருக்கு ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்ப டுமானால் தாம் பிரிந்து போட்டியிடப் போவ தாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித் துள்ளார்.

ஏற்கனவே ஆளும் கட்சி, தேசிய சுதந்திர முன்ன்ணியுடன் செய்துகொண்ட உடன்படி க்கைகளை மீறிச் செயற்படுவதாகவும் அமைச்சர் குற்றம் சுமத்தினார். (6)

# தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழ அகதிகள்; மனிதவுரிமைகள் ஆணைக்குழு கரிசனை

(கொழும்பு)

கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக் கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாள ர்களின், குறிப்பாக தாய்மார் மற்றும் பிள்ளைகளின், நலன்கள் பற்றி தீவிர கரிசனை கொண்டுள்ளதாக அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவி த்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் கட்டாயமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடம் கோரும் பிள்ளைகள் பற்றிய தேசிய மட்ட விசாரணை யின் ஒரு கட்டமாக ஆணைக்குழுவின் தலைவி கில்லியன் ட்ரிக்ஸ் கடந்த வாரம் கிறிஸ்மஸ் தீவிற்கு விஜயம் செய்தார்.

தாம் நான்கு மாதத்திற்கு முன்னர் சென்ற போது இருந்த நிலைமை இன்று மிகவும் மோசமானதாக மாறியிருக்கிறதென பேராசிரியர் ட்ரிக்ஸ் அம்மையார் தெரி வித்தார்.

கிறிஸ்மஸ்தீவு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை உள்ளிட்ட நாடுகளின் புகலிடக் கோரிக்கையாளர்களின் பிள்ளைகளில் பெரும்பாலும் அனைவரும் நோய்வாய்ப்பட்டவர்களாக மற்றும் மன அழுத்தம் உள்ளவர்களாக காணப்படுகிறா ர்கள். அவர்களில் பலர் படுக்கையை நனைக்கிறார்கள். சிலருக்கு பேச்சாற்றல் பாதிக்கப்பட்டுள்ளதென அவர் கூறினார்.

கிறிஸ்மஸ்தீவில், 174 பிள்ளைகள் அடங்கலாக ஆயிரத்து 102 புகலிடக் கோரி க்கையாளர்கள் உள்ளனர். தமது கடந்த மூன்று நாட்களில் நூற்றுக்கணக்கானவர்களை பேட்டி கண்டதாக மனிதவுரிமைகள் ஆணை க்குழுவின் தலைவி தெரிவித்தார். (6)

## தீயிட்டு தற்கொலை!

கொழும்பு வெள்ளவத்தையில் ஒருவர் தீயிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் பிறபகல் நடந்துள்ளது. குடும்பப் பிரச்சினை கார ணமாக அவர் தற்கொலை செய்து கொண்டு ள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரி வித்துள்ளனர். 46 வயதான இந்த நபர் தனது மனைவியின் அலுவலகத்திற்கு எதிரில், உட லில் மண்ணெண்ணெயை ஊற்றி தீயிட்டு கொண் டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கடும் தீக்காயங்களுக்கு உள்ளான அவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழ ந்துள்ளார். (6)

# சுவிஸில் கறுப்பு ஜூலை எழுச்சியாக நினைவுகூரல்




(கொழும்பு)

இலங்கை அரசின் இனப்படுகொலையின் ஓர் அங்கமான கறுப்பு ஜூலையின் 31 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வானது, பேர்ண் பாராளுமன்றம் அருகில் நினைவு கூரப்ப ட்டது.

இந் நிகழ்வில் சுவிஸ் வாழ் தமிழ் மக்கள் கனத்த நினைவுகளுடனும், மாறா வடுக்க ளுடனும் கலந்து கொண்டிருந்தனர்.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவி னரின் ஏற்பாட்டில் தமிழ்ப் பெண்கள் அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட இக்கவ னயீர்ப்புப் போராட்டமானது பொதுச் சுடரேற்ற லுடன் ஈகைச்சுடர் ஏற்றி வைக்கப்பட்ட தனைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட் டது.

சமகால அரசியல் தொடர்பான உரையு டன், கறுப்பு ஜூலை விட்டுச் சென்ற வடுக்க ளும் மீண்டுமொருமுறை நினைவுகூரப்ப ட்டது. இளையோர்களால் வேற்றின மக்க ளும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் ஜேர்மன் மொழியில் பேச்சுக்கள் இடம் பெற்றிருந்ததுடன் இன அழிப்பு சார்ந்த துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்ப ட்டன.

கவனயீர்ப்பு நிகழ்வின் ஓர் அங்கமாக, இலங்கை அரசின் திட்டமிட்ட இன அழிப்பு சார்ந்த பதாதைகளுடன், புகைப்படங்களும் வைக்கப்பட்டு நடன அசைவுகள் மூலம் அக்கினிப் பறவைகள் இளையோர்களுடன் தமிழ் இன உணர்வாளர்களும் இணைந்து பேர்ண் நகரத்தில் மக்கள் செறிந்து வாழும் முக்கியத்துவம் வாய்ந்த ஐந்து இடங்களில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வானது வேற்றின மக்கள் பல[illegible] ந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# வாரம் ஒரு தகவல்

## முதலும் முடிவும்

“சேர் உங்களிடம் ஒரு யோசனை கேட்க வேண்டும்.”

“என்னிடம் யோசனை கேட்க என்ன காரணம் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?”

“உங்களுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிவிட்டது அதனால்தான்!”

“சரி, கேளுங்க”

நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமா, வேண்டாமா சேர்?”

“எப்படி இருந்தாலும் கல்யாணம் செய்துகொள்! நல்ல மனைவி வாய்த்தால் சந்தோசமாக இருப்பாய்! மோசமான மனைவி கிடைத்தால் நீ ஞானியாவாய்!”

“அப்படியா சேர்?”

“ஆமாம். இது நான் சொல்லவில்லை. சோக்கிரட்டீஸ் தான் இப்படி சொல்லியிருக்கிறார்.”

“நான் ஞானியாக வேண்டும் என்று ஆசைப்படவில்லை சேர்?”

“அப்படியானால் மனைவியை நேசிக்கக் கற்றுக் கொள்”

“அது எப்படி”

“ஒருவனுக்குத் தன் மனைவியின் பழக்கவழக்கங்களில் ஏதேனும் ஒன்று பிடிக்கவில்லையெனில் அதற்காக அவளை அவன் வெறுத்த லாகாது. அவற்றுள் அவனுக்குப் பிடித்த ஒன்றை நினைத்து அவன் அவளை நேசிக்கட்டும் என்கிறார் நபிகள் நாயகம் (ஸல்).”

சான்றோர்களின் சிந்தனைகளைக் கூறியதற்கு நன்றி சேர். இது சம்பந்தமாக உங்களுடைய சொந்த சிந்தனையை தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

“என்னைப் பொறுத்தவரை குடும்பத்தில் கணவன் – மனைவிக்குள் சண்டையே வரக்கூடாது. அதுதான் நல்ல குடும்பம்”

“உங்கள் குடும்பத்தில் சண்டையே வந்ததில்லையா?”

“எனக்கு கல்யாணமாகி 20 வருடத்தில் இதுவரைக்கும் ஒரு தடவைதான் சண்டை வந்திருக்கு. அதுவும் கல்யாணம் ஆன புதிதில்!”

“அதற்குப்பின் வரவேயில்லையா?”

“வருவதற்கு சான்சே இல்லை!”

“ஏன்?”

“அந்த முதல் சண்டையே இன்னும் முடியவில்லையே!”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொகுசு கார் வாங்கினார் அஞ்சலி!

சித்தி பாரதிதேவியுடனான பிரச்சினைகள் ஓய்ந்து தற்போது தெலுங்கு, கன்னடம், தமிழ் படங்களில் பிசியாக நடித்துக் கொண்டிருக்கிறார் அஞ்சலி. சித்தியுடன் இருந்தபோது பழைய மாடல் ஓடன் கார் ஒன்றை வைத்திருந்தார்.



சித்தியிடமிருந்து பிரிந்த பிறகு அவருக்கு சொந்தமாக கார் எதுவும் இல்லை. கம்பனிகள் ஏற்பாடு செய்யும் கார்களையே பயன்படுத்தி வந்தார். இந்த நிலையில் அஞ்சலி பி.எம்.டபிள்யூ எனப்படும் விலை உயர்ந்த சொகுசு கார் ஒன்றை வாங்கி உள்ளார்


## திரை விமர்சனம்

## வேலையில்லா பட்டதாரி

தனுஷ் இன்ஜினீயரிங் படித்துவிட்டு வேலையில்லாமல் ஊர் சுற்றி வருகிறார். படிப்புக்கேற்ற வேலையில் சேரும் விருப்பத்துடன் இருக்கும் அவர், படிப்புக்கு சம்பந்தம் இல்லாத பல வேலை வாய்ப்புகளை தட்டிக் கழிக்கிறார். தனுஷ் இப்படி பொறுப்பில்லாமல் இருப்பதால் அவரது தந்தை சமுத்திரகனி இவரை அடிக்கடி திட்டித்தீர்க்கிறார். தாய் சரண்யாவோ, தனுஷ் மீது பாசம் காட்டி வருகிறார். தனுஷின் தம்பி அதிக சம்பளத்துக்கு வேலை செய்து வருகிறார். அதையும் காரணம் காட்டி தனுஷை மேலும் திட்டித் தீர்க்கிறார் சமுத்திரகனி.



இந்நிலையில் தனுஷ் குடியிருக்கும் வீட்டிற்கு பக்கத்துக்கு வீட்டில் நாயகி அமலாபால் குடியேறுகிறார். இவர்களின் முதல் சந்திப்பே மோதலில் ஆரம்பிக்கிறது. இருவரும் காதலிக்க ஆரம்பிக்கிறார்கள். ஒருநாள் சரண்யாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் போகிறது. சமுத்திரகனியும், தனுஷின் தம்பியும் ஊருக்கு செல்ல நேரிடுகிறது. ஆதலால் அம்மாவை பார்த்துக் கொள்ளும்படி தனுஷிடம் சொல்கிறார். சமுத்திரக்கனி. தனுஷ், அமலாபாலுடன் வெளியில் சென்றுவிடுகிறார். சரண்யாவின் உடல் நிலை மோசமடைந்து இறந்து விடுகிறார். காதலிக்க ஆரம்பிக்கிறார்கள். தனுஷ் தனக்கு கொடுத்த அரசு ஒப்பந்தப்பணியை செய்வதற்காக ஒரு பகுதிக்கு செல்லும் போது மற்றொரு ஒப்பந்ததாரரான வில்லன் அமிதேஷ் பிரச்சினை செய்கிறார். இதனால் இருவருக்கும் பகை ஏற்படுகிறது. தனுசை அந்த இடத்தில் வீடு கட்டவிடாமல் தடுக்கிறார் அமிதேஷ். இறுதியில் தனுஷ் வில்லனின் எதிர்ப்பை மீறி பில்டிங் கட்டினாரா? இல்லையா? என்பதே மீதிக்கதை. மிகவும் இயல்பான நடிப்பு. அசால்ட்டான டயலாக் டெலிவரி, அதிரடி பஞ்ச் வசனம், அப்பா திட்டும்போது காதில் போட்டுக் கொள்ளாமல் இருக்கும் காட்சிகள் என தனுஷ் நடிப்பில் வெளுத்து வாங்கியிருக்கிறார். அதற்கு அனிருத்தின் பலமாக இருக்கிறது. கதாநாயகி அமலா பாலுக்கு நடிக்க வாய்ப்பு குறைவு. பாடல், காதல், என்று வந்து போனாலும் நினைவில் நிற்கிறார். தனுஷ் மீது காதலாக மாறும் உணர்வை முகத்தில் மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளார். அப்பாவாக நடித்திருக்கும் சமுத்திரக்கனி இயல்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். சரண்யா வழக்கம் போல் பாசமிகு அம்மாவாக வந்து, தனுஷை கண்டிக்கிறார். அனிருத்தின் அம்மா பாடல் கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது. ஒளிப்பதிவாளர் வேல்ராஜ் இப்படத்தை இயக்கியிருப்பதால் மிகவும் ரசித்து செய்திருக்கிறார். தனுஷை நீண்ட நாட்களுக்குப் பிறகு ஜாலியாக காண்பித்த வேல்ராஜை பாராட்டலாம்.



## தயாரிப்பாளரை வாடா போடா என்று அழைத்து கலாட்டா செய்த பூஜா!

செலிப்ஸ் அண்ட் ரெட்கார்பட் நிறுவனம் தயாரித்துள்ள படம், கடவுள் பாதி மிருகம் பாதி. ராஜ்-சுரேஷ்குமார் இணைந்து இயக்கியுள்ள இப்படத்தில் அபிஷேக், ஸ்வேதா விஜய் மற்றும் நான் கடவுள் பூஜா ஆகி யோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இப்படத்தில் ஆடி-யோ வெளியீட்டு விழா நேற்று காலை சென்னையிலுள்ள சத்யம் திரையரங்கில் காலை 10.30 மணி அளவில் நடைபெற்றது. இந்த விழாவில் படத்தின் இசையமைப்பாளர் கிஷோர் மணி, பாடகர்கள் உன்னி கிருஷ்ணன், விஜய் ஜேசுதாஸ் உட்பட சிலர் கலந்து கொண்டனர். விழாவில் நடிகை பூஜா பேசும்போது, இந்த படத்தின் தயாரிப்பாளர் ராஜும், நானும் பெங்களூரில் படித்தோம். அப்போது எனக்கு 16 வயது. ஒரு கல்சுரல் நிகழ்ச்சியில்தான் நாங்கள் முதன்முதலாக சந்தித்துக்கொண்டோம். அப்போது எங்களுக்கிடையே ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டது. ஆனால் அது காதல் இல்லை. நட்புதான். முறை என்னை சந்தித்தபோது நீ அழகா இருக்கே என்றான். நான் போடா என்று திட்டி விட்டேன். ஆனால் அதன்பிறகும் எங்களுக்-கிடையே நட்பு இருந்தது. என் தந்தை படிக்கிற காலத்தில் காதல் கீதல் என்று சுற்றக்கூடாது என்று கண்டிசனாக சொல்லியிருந்ததால் நானும் ரொம்ப கவனமாக இருந்தேன். யாருடனும் காதலில் விழவில்லை. அதனால் ராஜுவுடன் எனக்கு நட்பு மட்டுமே இருந்து வருகிறது. இந்த நேரத்தில் தான், ஒருநாள் எனக்கு போன் போட்டு தான் ஒரு படத்தைஇயக்கி, தயாரிக்கப்போவதாக ராஜ் சொன்னான். ஆனால் நான் நம்பவில்லை. பின்னர் ஒருநாள் படப்பிடிப்பு தொடங்கி விட்டோம். நீ ஒரு கேரக்டரில் நடிக்க வேண்டும் என்று சொன்னான்.



அதன்பிறகுதான் அவன் சொன்னது உண்மை என்பதை அறிந்தேன். ஆனால், என்னிடம் பணம் இல்லை அதனால் நட்புக்காக காசு வாங்காமல் நடித்துக்கொடு என்றான். அதனால் நண்பனுக்காக எதையும் எதிர்பார்க்காமல் இந்த படத்தில் நடித்தேன். இப்படி பேசிய பூஜா, தான் பேசி முடிப்பதற்குள் தயாரிப்பாளர், இயக்குனர் ராஜை வாடா போடா என்று கிட்டத்தட்ட நூறு தடவையாவது சொல்லி கலகலப்பு மூட்டினார்.

## ஜோதிகா விலகல்: சூர்யாவுக்கு ஜோடியாகிறார் பிந்து மாதவி

பாண்டிராஜ் இயக்கத்தில் சூர்யா தயாரித்து வரும் படத்தில் ஜோதிகாவிற்கு பதிலாக பிந்து மாதவி நடித்து வருகிறார். சிம்பு, நயன்தாரா நடிக்கும் "இது நம்ம ஆளு" படத்தை இயக்கி வருகிறார் இயக்குநர் பாண்டிராஜ். இப்படத்தின் இறுதி கட்டப் படப்பிடிப்பு விரைவில் ஆரம்பிக்க இருக்கிறது. சூர்யா தொடங்கியிருக்கும் 2டி நிறுவனம் தயாரிக்க இருக்கும் படத்தை இயக்க ஒப்பந்தமானார்.

முழுக்க குழந்தைகளைப் பின்னணியாக கொண்ட கதைக்களமாகும். இப்படத்தில் குழந்தைகளுக்கு அப்பாவாக சூர்யா - ஜோதிகா இருவரும் நடிக்க இருக்கிறார்கள் என்று செய்திகள் வெளியாகின. தற்போது ஜோதிகா இப்படத்தில் நடிக்கவில்லை. அவருக்கு பதிலாக பிந்து மாதவி, சூர்யாவிற்கு ஜோடியாக நடித்து வருகிறார்.





## அந்த நாள் ஞாபகம்...



கல்லூரி நாட்களில் சூர்யாவுடன் விஜய்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மானிப்பாய், சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் ஆலயத்துக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட 30 அடி உயரமான சித்திரத்தேர் உற்சவம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சுவாமி சித்திரத்தேருக்கு எடுத்துச் செல்லப்படுவதையும் புதிதாக உருவாக்கப்பட்ட தேரையும் படங்களில் காணலாம். (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)





செலான் வங்கி மானிப்பாய் கிளை புனரமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்ட போது... (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)





யாழ். மயிலணி சைவ மகா வித்தியாலய் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் முதற்தர காப்புறுதி நிறுவனமாக திகழும் (AIA) காப்புறுதி நிறுவனத்தின் 5ஆவது கிளையானது வடமாகாணத்தில் கொடிகாமம் பிரதேசத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நாடாவெட்டி திறந்து வைக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.









அல்வாய் மனோகரா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிராம உத்தியோகத்தர் வ.தயானந்தா வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்குவதையும் மாணவர்களின் இடைவேளை உடற்பயிற்சியினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 மணிநேர போர் நிறுத்தம் இஸ்ரேல்-ஹமாஸ் சம்மதம்



ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் கோரிக்கையை ஏற்று 12 மணிநேர போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இயக்கம் ஒப்புதல் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல் படையினருக்கும், ஹமாஸ் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான மோதல் கடந்த 3 வாரங்களாக நீடித்து வருகின்ற நிலையில் போரை நிறுத்துமாறு இரு தரப்பினரையும் உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

அந்நாட்டு நேரப்படி காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை போர் நிறுத்தத்திற்கு ஒப்புதல் அளிப்பதாகவும் ஆனால் இதனை மீறி ஹமாஸ் தரப்பினர் தாக்குதல் நடத்தினால், அதற்கு பதிலடி தர நாங்கள் தயார் நிலையில் இருப்போம் என இஸ்ரேல் படையினர் தெரிவிக்கின்றனர்.

அதே போல, ஹமாஸ் செய்தி தொடர்பாளர் சமி அபு சூரி, ஐ.நா. வின் கோரிக்கையை ஏற்று காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை போர் நிறுத்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

காஸாவில் கடந்த 8 ஆம் திகதி முதல் நடந்துவரும் தாக்குதல்களில் பலியானோர் எண்ணிக்கை 875 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# அமெரிக்காவை உலுக்கும் தொடர் நில அதிர்வுகள்

அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தில், கடந்த 12 மணித்தியாலங்களுக்குள் வெவ்வேறு இடங்களில் 4 பூமியதிர்வுகள் உணரப்பட்டதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அலாஸ்கா மாநிலத்தின் நேற்று முன்தினம் 5.9 ரிக்டர் அளவில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளதுடன் கிழக்கு பிராந்தியத்தில் சுமார் 100 மைல்கள் வரை பாரியளவில் நிலம் அதிர்ந்ததாக உணரப்பட்டுள்ளது.

உறக்கத்தில் இருந்த போது நிலஅதிர்வு ஏற்பட்டதை அடுத்து மக்கள் பீதியடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏனைய பல பிரதேசங்களிலும் சிறு அளவிலான நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளதுடன் சேத விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

எனினும் இவ் அதிர்வுகள் பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை எனவும் ஏற்கனவே இப்பிரதேசங்களில் 5.9 மற்றும் 5.3 ரிக்டர்கள் அளவிலான நில அதிர்வுகள் பதிவாகியுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (6)

# பாம்பு கடிக்கு மருந்து இல்லாததால்

## பொதுமக்கள் பாதிப்பு; காங்கிரஸ் குற்றச்சாட்டு

புதுவையில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பாம்பு கடி மருந்து முழுமையாக இல்லாத காரணத்தால் பொதுமக்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.

விஷ பாம்பு கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயிர் காக்கும் பொருட்டு உடனடியாக (ஆன்ட்டி ஸ்நேக் இன்ஜெக்ஷன்) என்கிற பாம்பு கடி ஊசி மருந்தை செலுத்த வேண்டும். உயிர்காக்கும் மருந்துகளை அரசு மருத்துவமனைகளில் பற்றாக்குறை இன்றி இருப்பு வைத்து இருக்க வேண்டியது அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத கடமையாகும். புதுவை அரசு அதை செய்ய தவறி விட்டது.

இதற்கு அரசு தரப்பில் சொல்லப்படுகிற காரணம் மருந்து தட்டுப்பாடு உற்பத்தி குறைவு என்பதாகும். ஆனால் இது அப்பட்டமான பொய் ஆகும். உண்மை நிலை என்னவென்றால் மும்பை, சென்னை உள்ளிட்ட இடங்களிலிருந்து இந்த ஊசி மருந்து சப்ளை செய்த கம்கம்பனிகளுக்கு பணம் கொடுக்காமல் மீதி வைத்து இருப்பதுதான் காரணமாகும். இதற்கு நிதி நெருக்கடி என்று கூறுகிறார்கள்.

ஒரு புறம் அரசு மருத்துவமனையை நம்பி இருக்கும் பொதுமக்களின் உயிர் காக்கும் பாம்பு கடி மருந்து வாங்குவதற்கு நிதி நெருக்கடியை காரணம் காட்டும் அரசு மறுபுறம் பல கோடி ரூபாய் கொள்முதல் செய்து வாங்கப்பட்ட பஸ்களை இயக்காமல் நிறுத்தி வைத்துள்ளது. (6)

# குற்றவாளிகளை விடுவிக்கும் மாநில அரசு

## உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்

இந்தியாவில் மாநில அரசுகள் தானாக முன்வந்து குற்றவாளிகளை விடுவிக்கும் முயற்சியை தடுக்கும் சட்ட உட்பிரிவினை நீக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பில், மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ வழங்கியுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதியாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவை இந்திய உச்சநீதிமன்றம் இன்று விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

அந்த மனுவில் அவரது விடுதலைக்கு தடையாக அமைந்து உள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டம் 435 கீழ் உள்ள உட்பிரிவு 1ஏ-வை நீக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆர்.ஏம்.லோதா தலைமையிலான அமர்வு முன்பு நடைபெற்ற இந்த விசாரணையில், மனுதாரரான நளினி தரப்பில் வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் ஆஜராகி வாதாடினார்.

அப்போது, 'குற்றவாளிகளை விடுவிக்கும் முடிவினை மாநில அரசுகள் எடுப்பதற்கு அவசியமாக மத்திய அரசிடம் கருத்து கேட்கக் கூறும் சட்டப்பிரிவை நீக்க வலியுறுத்தினார்.

மேலும் மத்திய புலனாய்வுத் துறை எனப்படும் சிபிஐ விசாரணை மேற்கொண்ட வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களை மட்டும் தனியாக பிரித்து பார்ப்பது என்பது ஜனநாயகத்துக்கு எதிரான செயல் என்றும் வாதாடினார்.

இதனைத்தொடர்ந்து இந்த மனு தொடர்பாக மத்திய உள்துறை செயலாளர் பதில் அளிக்க வேண்டும் என்று அந்த அமர்வு உத்தரவிட்டது.

இந்த விவகாரம் தொடர்பான முக்கிய வழக்கின் விசாரணை கடந்த 9ஆம் திகதி இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆர்.எம்.லோதா தலைமையிலான அரசியல் சாசன அமர்வு முன்பு தொடங்கியது.

தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின் போது, ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை விடுவிக்கும் உரிமை மாநில அரசுகளுக்கு உள்ளதா என்பது குறித்து, இந்தியா வில் உள்ள அனைத்து மாநில அரசுகளும் ஜூலை 18ஆம் திகதிக்குள் பதிலளிக்க அந்த அமர்வு கோரியது. இந்த சமயத்தில் இந்த வழக்கில் ஒரு குற்றவாளியான நளினி, தற்போது இவ்வாறு மனு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மோடியின் இணையத்தளம் ஆரம்பம்;

## பொதுமக்கள் கருத்துகள் பதிவு நடைமுறை

மத்தியில் பா.ஜ.க ஆட்சி பொறுப்பேற்று 60 நாட்கள் கடந்துள்ள நிலையில் எனது அரசாங்கம் (www.mygov.nic.in) என்ற இணையதளத்தை பிரதமர் மோடி ஆரம்பித்து வைத்தார்.

இந்த இணையதளத்தில் நாட்டின் வளர்ச்சிக்கான ஆலோசனைகளை அனைத்து மக்களும், வல்லுநர்களும் பதிவுசெய்யலாம்.

பிரத மர் மோடியின் மிகச்சிறந்த திட்டமான கங்கை நதி சுத்தப்படுத்துதல் குறித்தும், பெண் கல்வி குறித்தும், வேலை வாய்ப்பு குறித்தும் தங்கள் எண்ணங்களையும், கருத்துக்களையும் பதிவு செய்யலாம்.

நாட்டில் மக்களின் பங்களிப்பில் மதிப்புமிக்க மாற்றங்களை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் மக்களுக்கும் அரசுக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைக்கும் வகையிலும் இந்த இணையதளம் உருவாக்கபட்டுள்ளது.

பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற இந்த 60 நாட்களில் பெருமளவிலான மக்கள் நாட்டை கட்டுமானம் செய்வதில் தங்களது நேரத்தையும், சக்தியையும் செலவிட முன் வந்துள்ளதை கருத்தில் கொண்டே இந்த இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### சென்னை ஐ கோர்ட்டுக்கு புதிய தலைமை நீதிபதி நியமனம்

பஞ்சாப் அரியானா ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக பணியாற்றி வந்த சஞ்சய்கிஷன் கவுல் சென்னை ஐகோர்ட்டு புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இதற்கமைய நேற்று சனிக்கிழமை கலனா மாளிகையில் பதவி ஏற்றுள்ளார்.

கவர்னர்ரோசய்யா புதிய தலைமை நீதிபதிக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். விழாவில் முதல் அமைச்சர் ஜெயலலிதா கலந்து கொண்டார்.

கவர்னர் ரோசய்யாவும், முதல் அமைச்சர் ஜெயலலிதாவும் சஞ்சய் கிஷன் கவுலுக்கு மலர் கொத்து கொடுத்து வாழ்த்தினர். (6)




தமிழின வரலாற்றில் ஆறாத ரணமாகிப் போன கறுப்பு ஜூலையின் 31 ஆவது வருட நினைவு நாளாக கடந்த புதன்கிழமை இலங்கை அரசின் அராஜகத்தை எதிர்க்கும் வகையில் பிரித்தானியத் தமிழர் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்ட கவனயீர்ப்பு போராட்டமானது எழுச்சியுடன் நடைபெற்ற போது....

# ஜூலை கலவரத்தில் உயிர் நீத்தவர்களை எதிர்க்கட்சித் தலைவர் நினைவு கூர்ந்தார்

கறுப்பு ஜூலை கலவரத்தில் உயிர் நீத்தவர்களை பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் இட் மில்லிபான்ட் நினைவு கூர்ந்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற வன்முறைகளில் ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவிக்க நேரிட்டதாகத் தெரிவித் துள்ளார்.

ஜூலை கலவரம் தொடர்பில் வெளியிட்ட விசேட அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வருந்தத்தக்க வன்முறைகளில் உயிரிழந்த தமிழ் ஆண், பெண் மற்றும் இடம்பெயர்ந்தவர்கள் பற்றி நினைவு கூர வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகளில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பது பற்றிய துல்லியமான புள்ளி விபரங்கள் கிடையாது என அவா தெரிவித்துள்ளார்.

வன்முறைகளை எம்மால் இன்றும் மறக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடைபெறுவதனை உறுதி செய்யுமாறு பிரதமர் டேவிட் கமரூனிடம் கோருவதாகத் தெரிவித்துள்ளார்.

நிரந்தர அரசியல் தீர்வுத் திட்டமொன்றை எட்டுவதற்கான முதல் கட்ட நடவடிக்கையாக சர்வதேச விசாரணைகளை கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களை மன்னிக்கவும்

(கொழும்பு)

ரஜரட்ட மாணவர்களுக்கு மன்னிப்பளித்து பல்கலைக்கழகத்தை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.

அநுராதபுர மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட பல்கலைக்கழக உப-வேந்தர் பேராசிரியர் ரஞ்சித் விஜய வர்தனவுக்கே ஜனாதிபதி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கண்டவாறு பணித்துள்ளார்.

உப-வேந்தர் உள்ளிட்ட விரிவுரையாளர்களை, பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த வாரம் ஒரு நாள் முழுவதும் சிறைப்பிடித்து வைத்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தை மூடியமையால் 95 சதவீதமான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தை கையிலெடுப்பதற்கு மாணவர்களுக்கு அனுமதியளிக்க முடியாது. அவர்கள் கற்க வேண்டும.

தவறிழைப்பது மனிதனின் இயல்பு, மன்னிப்பது தெய்வத்தின் செயல். ஆகையினால் அந்த மாணவர்களுக்கு மன்னிப்பளித்து பல்கலைக்கழகத்தை விரைவாக திறக்கவும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் தவறிழைத்த சுமார் 200 மாணவர்களுக்கு ஜயவர்தனபுர பல்கலைக்கழக உப-வேந்தர் மன்னிப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (6)

# இந்தியாவில் ஹெலி விபத்து; ஏழு பேர் ஸ்தலத்தில் பலி!

இந்தியாவின் உத்தர பிரதேசத்தின், லக்னோவிலிருந்து 90 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சீதாபூரில் உள்ள அதாரியா எனும் பகுதியில் இந்திய விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில பயணம் செய்த 7 பேரும் பலியாகியுள்ளனர்.

பரெய்லியிலிருந்து அலஹதாபாத் நோக்கி சென்று கொண்டிருந்த குறித்த ஹெலிகொப்டர், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விவசாய நிலப்பகுதி ஒன்றில் வைத்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த ஹெலிகொப்டர், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதியுயர் தொழில்நுட்ப ஹெலிகொப்டராகும்.

இந்த ஹெலி விபத்தில் உயிரிழந்த 7 பேரில் மூவர் இலங்கைப் பிரஜைகள் என முதற்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இருப்பினும் இவர்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. (6)

# கட்டடத் திறப்பு விழா

பண்டத்தரிப்பு பிரதேச கிராமிய அபிவிருத்திச் செயற்பாட்டின் மைல்கல்லாக அமைகின்றதான காலைப்படி மறுமலர்ச்சி மன்றத்தின் சமூக அபிவிருத்திக்கான பன்முக கட்டுமானத் தொகுதியின் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மறுமலர்ச்சி மன்றத்தின் புதிய உள்ளக கலை அரங்கில் இடம்பெறவுள்ளது.

மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவர் சு.யாதவனின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சபாபதி அழகரத்தினம், திருமதி தியாகராசா இராசதங்கம் கலந்து கொள்வதுடன் வாழ்த்துரைகளை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், பொறியியலாளர் மா.இராமதாசன், குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் பிரதான வைபவமாக மறுமலர்ச்சி மன்றத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சமூக அபிவிருத்திக்கான பன்முக கட்டுமானங்களான நவீன வசதிகளுடன் கூடிய உள்ளக கலை அரங்கம், திறந்த வெளி அரங்கம், சர்வதேச தரம் வாய்ந்த பாலர் பாடசாலை, சிறுவர் விளையாட்டுத்திடல், விளையாட்டு மைதானம், நீர்த்தாங்கி என்பன விருந்தினர்களால் திறந்து வைக்கப்படவுள்ளன.

தொடர்ந்து இளவாலை எழுச்சியக மாணவர்கள், யா/பண்டதரிப்பு இந்துக் கல்லூரி மாணவர்கள், யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை மாணவர்கள், யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலை மாணவர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் டினேஸ் வாத்திய விருந்தும் சிறப்பு கலை நிகழ்வாக வடமாகாண முதலமைச்சர் விருதை வென்ற மறுமலர்ச்சி மன்றத்தின் காத்தவராயன் சிந்து நடைக் கூத்தும் இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6)

# தேவாலய பொறுப்பாளருக்கு மறியல்

கொழும்பு, கொட்டாஞ்சேனை ஆட்டுப்பட்டி தெருவிலுள்ள ஒல்லாந்தர் தேவாலயத்தின் பொறுப்பாளரை, ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் திலின கமகே நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

தேவாலயத்தில் இருக்கின்ற இடிதாங்கியின் அடிப்பகுதி புதைக்கப்பட்டிருக்கின்ற இடத்தை தோண்டுவதற்கு உதவியளித்ததாக அவருக்கு எதிராக பொலிஸாரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

விலை மதிக்க முடியாத பொருளொன்றையே குறித்த நபர் தேடியுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். (6)

# பிரிவுத்துயர் பகிர்வு



## கந்தையா அருந்தவநாதன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருந்தவநாதன் முன்னாள் C.T.B சாரதி கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரின் மைத்துனர் தில்லைநாதனின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## வேலுப்பிள்ளை சகாதேவன்

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சகாதேவன் கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு நீர்வேலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நீர்வேலி தெற்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## லயன் ஆறுமுகம் சாந்தலிங்கம்

4 ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி சாவகச்சேரியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட லயன் ஆறுமுகம் சாந்தலிங்கம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## திருமதி சுந்தரலிங்கம் கமலாம்பிகை

தொல்புரம் கிழக்கு,சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் கமலாம்பிகை கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## மொறின் கொலின்ஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மொறின் கொலின்ஸ் கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருக்கும்ப மாகாண இல்லத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



## திருமதி வேலாயுதம் வள்ளியம்மை

புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் வள்ளியம்மை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ராஜபவனம் புத்தூர் மேற்கு,புத்தூர் இல் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.



## கந்தையா தேவராசா

தூதாவளை கரணவாய் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தேவராசா கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வெல்லன்கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## செல்லையா கதிர்காமத்தம்பி

திருகோணமலை மூதூரைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கதிர்காமத்தம்பி(இளைப்பாறிய அதிபர்-சேனையூர் மகா வித்தியாலயம்,மூதூர்) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை நடைபெற்று பின்னர் பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## திருமதி நிமல்குமார் மகேஸ்வரி

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நிமல்குமார் மகேஸ்வரி நேற்று சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு No.09,St.Sebastian Road என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நீர்கொழும்பு பொது இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## திருமதி கணேசலிங்கம் கலாதேவி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் கலாதேவி கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் உருத்திரபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய போட்டி

அமெரிக்க பயிற்றுனர் குழாம் மற்றும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாடடில் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் ஒழுங்கமைப்புடன் நடைபெறும் உதைபந்தாட்ட பயிற்சி பாசறை நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வில் உதைபந்தாட்டப் போட்டியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப் போட்டியில் டயமன்ட்ஸ் அணியை எதிர்த்து இலங்கை ராணுவ தேசிய அணி மோதும் காட்சி போட்டி இன்று ஞாயிற்றுகிழமை மாலை 4 மணிக்கு மாலு சந்தி மைக்கல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

---


யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கம் யாழ்ப்பாண இலங்கை வங்கி , யாழ்ப்பாண வர்த்தக வங்கி, யாழ்ப்பாண மக்கள் வங்கி ஆகியவற்றின்அனுசரணையுடன்2014 ஆம் ஆண்டுக்கான மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைதடி விநாயகர் விளையாட் டுக் கழக மைதானத்தில் ஆரம் பமாகியது.

நேற்று முன்தினம் முதல் எதிர் வரும் 31 ஆம் திகதி வரை இப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இன்று பிற்பகல் 6.30 மணிக்கு இடம்பெறவுள்ள போட்டியில்கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மற வன் புலோ அம்பிகை விளையாட் டுக் கழ கத்தை எதிர்த்து சுன் னாகம் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# இந்தியா- இங்கிலாந்து டெஸ்ட்

## இன்று ஆரம்பம்



தோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 5 டெஸ்ட் போட்டித் தொடரில் நாட்டிங்காமில் நடந்த முதல் டெஸ்ட் 'டிரா' ஆனது. லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 2 ஆவது டெஸ்டில் இந்திய அணி 95 ரண்ணில் அபார வெற்றி பெற்று வரலாற்று சாதனை படைத்தது.

இந்தியா- இங்கிலாந்து அணிகள் மோதும் 3 ஆவது டெஸ்ட்போட்டி சவுத்தம்டனில் இன்று (ஞாயிற்றுக் கிழமை) தொடங்குகிறது.

லார்ட்ஸ் டெஸ்டில் வெற்றி பெற்றதை போல இந்திய அணி இந்த டெஸ்டிலும் வெற்றி பெற்று 2:0 என்ற முன்னிலை பெறுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.


கடந்த டெஸ்டில் இந்தியாவின் வெற்றிக்கு இஷாந்த் சர்மா, புவனேஸ்வர் குமார், ரகானே, முரளி விஜய், ரவிந்திர ஜடேஜா ஆகியோர் முக்கிய பங்கு வகித்தார்கள். இதனால் அவர்கள் மீதான எதிர்பார்ப்பு இந்த டெஸ்டிலும் அதிகமாக இருக்கிறது.

இன்றைய போட்டிக்கான இந்திய அணியில் மாற்றம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்டூவர்ட் பின்னி இடத்தில் ரோகித் சர்மா இடம் பெறலாம். கடந்த 2 டெஸ்டிலும் ஸ்டூவர்ட் பின்னி 20 ஓவர்களே வீசினார். இதனால் கூடுதல் பேட்ஸ்மேன் என்ற முறையில் ரோகித்தை களம் இறக்கலாம் என்ற யோசனை இருக்கிறது.

அதே நேரத்தில் முதல் டெஸ்டில் அணியை காப்பாற்றியவர் என்ற பெருமை ஸ்டூவர்ட் பின்னிக்கு இருக்கிறது. ஆடுகளத்தின் தன்மையை பொறுத்து அணி மாற்றம் இருக்கும். காம்பீர், அஸ்வினுக்கு வாய்ப்பு கிடைப்பது கடினம்.

முன்னணி பேட்ஸ்மேன்களில் ஒருவரான விராட் கோலி ரண் குவிக்க முடியாமல் நெருக்கடியில் உள்ளார். கடந்த 2 டெஸ்டில் 4 இன்னிங்சில் விளையாடி 34 ரண்களே எடுத்துள்ளார். இதனால் அவர் ரண் குவிக்க வேண்டிய நிலை உள்ளது. இதே போல ஷிகார் தவானின் பேட்டிங்கும் கவலை அளிக்கும் வகையில் இருக்கிறது.

முரளிவிஜய், கேப்டன் டோனி, புஜாரா ஆகியோர் பேட்டிங்கில் நல்ல நிலையில் உள்ளனர். பந்து வீச்சில் இஷாந்த் சர்மா, புவனேஸ்வர் குமார் சிறப்பாக உள்ளனர்.



இங்கிலாந்து அணி இந்த டெஸ்டில் சென்று தொடரை சமன் செய்ய போராடும். அந்த அணியில் மாற்றங்கள் இருக்கும். கேப்டன் குக் பேட்டிங் தொடர்ந்து கவலை அளிக்கும் வகையில் உள்ளது.

இரு அணிகளும் இன்று மோதுவது 110 ஆவது டெஸ்ட் போட்டியாகும். இதுவரை நடந்த 109 டெஸ்டில் இந்தியா 21 போட்டியிலும், இங்கிலாந்து 40 போட்டியிலும் வெற்றி பெற்றன. 48 டெஸ்ட் 'டிரா' ஆனது.

இன்றையய டெஸ்ட் இந்திய நேரப்படி பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்குகிறது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## உதைபந்தாட்டப் போட்டிக்கு விண்ணப்பிக்குக

உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழகம் சின்னத்தம்பி மகாலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக வட மாகாண ரீதியாக 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஒன்றை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை நடத்தவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்கு பற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தின் தலைவர், செயலாளர்ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## முன்பள்ளியின் விளையாட்டு விழா

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கி ழமை பிற்பகல் 2 மணியளவில் நிலையத் தலைவர் தலைமையில் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வ குமாரி நேசரட்ணம், வலிகாம உதவிக் கல்விப் பணிப்பாளர் றூபா உதயரட்ணம், சிறுவர் மேம்பாட்டு அலுவலர் எம்.பத்மராஜ், பிரதேச சபை உறுப்பினர் அ.ஜெபநேசன் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளன. (க-23)

# குருநகர் பாடும் மீன் சம்பியன்

இளவாலை ஹென்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்திய கழகங்களுக்கிடையிலான காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் குருநகர் பாடும் மீன் அணி சம்பியனாகியது.

யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த கழ்கங்களின் காற்பந்தாட்ட அணிகள் பங்குபற்றிய இந்தக் காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு மின்னொளியில் இடம்பெற்றது.

இதில் குருநகர் பாடும் மீன் அணியினை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிஸ் அணி மோதியது,

ஆட்டநேரத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறவில்லை. இதனைத் தொடர்ந்து வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது.

அதில் பாடும் மீன் அணி 3:0 என்ற கோல்க் கணக்கில் வென்று சம்பியனாகியது. (க)

# பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட பெருவிளையாட்டு

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெருவிளையாட்டுக்கள் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட போட்டிகள் செப்டெம்பர் மாதம் 5,6,7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் நீச்சல் போட்டி கொழும்பிலும் கபடிப் போட்டிகள் டி. எஸ். சேனநாயக்கா கல்லூரி அம்பாறையிலும் உடற்பயிற்சி போட்டிகள் வியாங்கொடையிலும் கராத்தே போட்டிகள் கிரிபத்கொடையிலும் சதுரங்கப் போட்டிகள் கண்டியிலும் எல்லே போட்டிகள் அநுராதபுரத்திலும் பளுதூக்கல் போட்டிகள் அராநாயக்காவிலும் நடைபெறவுள்ளன.

இரண்டாம் கட்டப் போட்டிகள் செப்டெம்பர் மாதம் 14, 15, 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இதல் ஹொக்கிப் போட்டிகள் சாளிகா ஸ்ரேடியத்திலும் ஜிம்னாஸ்ரிக் போட்டிகள் சுகததாச உள்ளரங்கிலும் கரம் போட்டிகள் யாழ்ப்பாணத்திலும் கிரிக்கெட் போட்டிகள் யாழ்ப்பாணத்திலும் ரெனிஸ் போட்டிகள் கொழும்பிலும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் வியாங்கொடையிலும் நடைபெறவுள்ளன.

மூன்றாம் கட்டப் போட்டிகள் செப்டெம்பர் மாதம் 19,20,21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இதில் உதைபந்தாட்டப் போட்டிகள் கொழும்பிலும் குத்துச்சண்டை சுகததாச உள்ளரங்கிலும் எறிபந்துப் போட்டிகள் கொழும்பிலும் மேசைப்பந்தாட்டம்கல்கிசை சென். தோமஸ் கல்லூரியிலும் பூப்பந்தாட்டப் போட்டிகள் கல்கிசை சென்.தோமஸ் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி, சென். பீற்றர்ஸ் கல்லூரியிலும் கூடைப் பந்தாட்டப் போட்டிகள் ஆண்களுக்கு கொழும்பு றோயல் கல்லூரி, சென்.பீற்றர்ஸ் கல்லூரியிலும் பெண்களுக்கு நுகேகொட சென்.யோசப் ஆண்கள், பெண்கள் கல்லூரியிலும் கரப்பந்தாட்டப் போட்டிகள் திஸ்ஸமகரமேயிலும் நடைபெறவுள்ளன.

தடகளப் போட்டிகள் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி வரை சுகததாச விளையாட்ட ரங்கிலும் நடைபெறவுள்ளன. (க)



திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் முன்பள்ளி மழலைகளின் மகிழ்வூட்டல் அரங்கு அண்மையில் OLD Park இல் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவர் திருமதி திருமகள் சிவசங்கர் கலந்து கொண்டார். இந்நிகழ்வின் படங்களை காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத்தன்மையை நம்புகின்றவன், மனித குலத்தின்பால் மாறாத அன்பு செலுத்துபவனே பெருமைக்குரிய தலைவன். – பிளிட்ஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பொருத்தமான வேட்பாளர்களை இப்போதே தெரிவு செய்யுங்கள்

பொதுத் தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கான ஆயத்தங்களை அரசியல் கட்சிகள் மறைமுகமாக ஆரம்பித்துவிட்டன.

தேர்தல் முடிந்த கையோடு சுற்றுலாச்சென்ற பாராளுமன்றப் பறவைகள் தங்கள் தொகுதிகளுக்கு – மாவட்டங்களுக்கு பறந்துவந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் போது,

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கூடுகட்டி அடைகாத்து ஆசனம் பெறும் காலம் வந்துவிட்டது என்பது புரிகிறது. அதிலும் பொதுத் தேர்தல் என்றால் வடக்கு மாகாணத்தில் தேர்தல் பிரசாரம் மட்டுமன்றி மக்களை உணர்வுபூர்வமாக்கி தங்களின் இலக்கினை அடையும் மாயாஜாலங்களும் நடந்தேறும்.

எனினும் கடந்த பொதுத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றில் கூறிய உத்தரவாதங்கள், ஆவேசப் பேச்சுக்கள் பலவற்றை தமிழ் மக்கள் மறக்காமல் வைத்திருப்பதன் காரணமாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் வழமையான பிரசாரங்களை மாற்றியமைக்க வேண்டிய தேவை உண்டு.

இது குறித்த ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் சட்டப்படி செய்து முடிக்கும் என்பதால் அதைப் பற்றி நாம் கருத்துக்கூற வேண்டிய தேவையில்லை.

இங்கு நாம் கூறுவதெல்லாம் நடைபெறப் போகும் பாராளுமன்றத் தேர்தலால் தமிழ் மக்களுக்கு ஏதேனும் நன்மை கிடைக்க வேண்டுமாயின் பொருத்தமும் சேவை மனப்பாங்கும் விலைபோகாத தமிழ் வீரமும் இனப்பற்றுதலும் கொண்டவர்களை வேட்பாளர்களாக நிறுத்துங்கள் என்பதேயாகும்.

இன்று இருக்கக் கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் பலவாறான கருத்துக்கள் நிலவுகின்றன.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு அரசுடன் நல்ல உறவு உண்டு என்று மக்கள் பரவலாகப் பேசிக்கொள்கின்றனர். இவ்வாறு மக்கள் பேசிக்கொள்வது உண்மையில்லை என்பதை நிரூபிக்க வேண்டுமாயின் அந்தப் பொறுப்பு சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே உரியது.

எதுவாயினும் தமிழ் மக்களுக்காக பேசுகின்ற – சேவை செய்கின்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை மக்கள் இனங்கண்டு வைத்துள்ளனர். இத்தகையவர்களையே மக்கள் விரும்புகின்றனர்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை செய்ய வேண்டியது, பொருத்தமான வேட்பாளர்களை பொதுத் தேர்தலில் நிறுத்துவதாகும். இதை நாம் கூறும் போது தலைமையிலேயே சந்தேகம் என்று முணுமுணுப்பவர்களும் இருக்கவே செய்வர்.

எப்படியாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறிதரன், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மற்றும் பெயர் குறிப்பிடப்படாத கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் பற்றுள்ள உறுப்பினர்கள் அனைவரும் உயர்ந்த நோக்குடன் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை சிறப்படுத்துவதுடன் பொருத்தமான வேட்பாளர்களைத் தேர்தல் களத்தில் நிறுத்த இப்போதே வியூகம் அமைக்க வேண்டும்.

தேர்தலில் போட்டியிடுவது பெரிதான விடயம் அல்ல. மாறாக யாரை வேட்பாளராக்குவது என்பதே இங்கு முக்கியமானது.

முகம்பார்த்து – செல்வாக்குப் பார்த்து – வசதி பார்த்து வேட்பாளர்களைத் தெரிவுசெய்தால் தமிழினம் மீண்டும் துன்பப்படுமே அன்றி அதற்கு விடிவு கிடைக்காது. ஆக, வேட்பாளர் தெரிவில் மிகவும் நிதானமாகச் செயற்படுவதிலேயே தமிழினத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது என்பதை ஒரு போதும் மறந்து விடாதீர்கள்.

# காரைநகர் சிறுமி துஷ்பிரயோகம்; புதுக்கதை விடும் பிரதமர் ஜயரட்ன

## சர்வதேச மயப்படுத்த கூட்டமைப்பு முயற்சிப்பதாகவும் குற்றச்சாட்டு





இந்தியா உட்பட உலக நாடுகளில்காரைநகர் சம்பவங்களை போன்று எத்தனையோ சம்பவங்கள் நடை பெறுகின்றன. ஆனால், இந்தச் சம்பவம் தொடர்பில் இங்கு சட்டம ஒழுங்கு நிலை நாட்டப்பட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்னை சர்வதேச மயப்படுத்த முயற்சிக்கின்றது என்று நேற்று முன்தினம் சபையில் குற்றம் சாட்டிய பிரதமர் டி.எம்.ஜயரத்ன, காரைநகரில் புலிகளின் சீருடை அணிந்த நபரொருவரே சிறுமியை காட்டுக்குள் தூக்கிச் சென்றார் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், காரைநகரில் கடற்படையினரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட இரு சிறுமிகள் தொடர்பாக விடுத்த விசேட கூற்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு பிரதமர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் பிரதமர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், காரைநகர் ஊரிப் பகுதியில் கடந்த 15ஆம் திகதி காலை 7.00 மணியளவில் பாடசாலைக்கு நடந்து சென்ற சிறுமியொருவரை முருகன் கோவிலுக்கருகில் வைத்து புலிகளின் சீருடை அணிந்த நபர் ஒருவர் அருகிலுள்ள காட்டுக்குள் தூக்கிச் சென்றுள்ளார். இதன் போது, அங்கு வந்த கடற்படை வீரர் இதனை கண்டு விட்டு விசாரிக்க முற்பட்ட போது அந்நபர் சிறுமியை கைவிட்டு தப்பிச் சென்று விட்டார். இதன் பின்னர் சிறுமி வீட்டுக்கு வந்த போது தாயார் மகள் நேரகாலத்துடன் பாடசாலை விட்டு வந்தது தொடர்பில் அவரிடம் விசாரித்துள்ளதுடன் தினமும் தன் மகள் அப்படி வருவதாக கூறியுள்ளார்.

ஆனால், அச்சிறுமி பாட சாலைக்கு தினமும் வருவதில்லையென்ற தகவலை அதிபர் தெரிவித்துள்ளார். இதன் பின்னரே அச்சிறுமி மருத்துவ பரிசோ தனைக்காக யாழ். வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் குறித்த சிறுமி வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டது தெரியவந்தது. இது தொடர்பில் யாழ். வைத்தியசாலை பொலிஸார் ஊர்காவற் றுறை பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். இதன் பின்னர் 9 கடற்படை வீரர்கள் அடையாள அணி வகுப்பிற்கு உட்படுத்தப்படவிருந்தனர். இதில் இருவர் விடுமுறையில் இருந்த தால் 7 பேர் அடையாள அணிவகுப்பில் உட்படுத்தப்பட்டனர்.


ஆனால், இவ் அடையாள அணி வகுப்பில் சாட்சிகள் எவரையும் அடையாளம் காட்டவில்லை. இதனை யடுத்து அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால், பிணை செலுத்தப்படாததால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணைப் பண்மும் ஆட்பிணையும் செலுத்தப்பட்டதையடுத்து விடுவிக்கப்பட்டனர். இது அனைத்தும் நீதிமன்றத்தின் உத்தரவுப்படியே இடம்பெற்றது. இவ் விடயம் நீதியின் பிரகாரமே இடம்பெற்றது.

இவ்வாறான சம்பவங்கள் இந்தியா உட்பட உலகில் பல நாடுகளில் தினமும் இடம்பெறுகின்றன. ஆனால் காரைநகரில் இடம்பெற்ற இச் சம்பவத்தை மிகைப்படுத்தி இங்கு ஒரு மோசமான நிலை இருப்பதாக காட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது என்று பிரதமர் கூறியுள்ளார். (6)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எங்கள் குருநாதன்



தேகம் நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்ற னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தை கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள் குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்

# "இயேசுவிற்காக நம்முடைய எல்லாவற்றையும் இழக்க நாம் தயாரா?"

இன்று எமக்குத்தரப்படும் பைபிள் பகுதியில் இயேசு நம்முடன் பேசி கடவுளைப் பற்றி அறிய முடியாத மறை உண்மைகளை நமக்கு உவமைகள் வழியாக தருகிறார். உண்மைகளை உவமைக் கதைகள் வழியாக மக்க ளுக்கு உணர்த துவதே இலகுவான சிறந்த வழி என்பதை அவர் அறிவார்.

கடவுளின் ஆட்சி இவ்வுலகில் வந்து கொண்டிருக்கிறது என்னும் நல்ல செய்தியை பல உவமை கதைகள் வழியாக இயேசு மக்களுக்கு அறிவித்திருக்கிறார். குறிப்பாக, தம் மோடு நெருங்கிப் பழகி தம் போதனைகளை அருகிலிருந்து கேட்டு, தாம் புரிந்த அரும் செயல்களை நேரடியாகக் கண்டு அறிந்த தம் சீடர்களுக்கு இயேசு தம் உவமை கதைகளின் உட்பொருளையும் விளக்கிக் கூறினார். ஆனால் உண்மையில் அவர்கள் இயேசுவைப் புரிந்துகொள்ள மிகவும் சிரமப்பட்டார்கள். பல தடவைகளில் இயேசு

### பரமபிதா காட்டிய பாதை

வின் போதனை அவர்கள் காதுகளில் விழுந்தும் அவர்கள் அப்போதனையை உள்வாங்கித் தம் நடத்தையில் காண்பிக்க தயங்கிய அல்லது தவறிய போதெல்லாம் கேள்வி மேல் கேள்விகள் கேட்டு அவர்களுக்கு தெளிவை ஏற்படுத்தினார்.

இயேசு நம்மையும் பார்த்து அதே கேள்வியைக் கேட்கின்றார்: இவற்றையெல்லாம் புரிந்துகொண்டீர்களா? இயேசு தாம் யார் எனவும் அவர் நமக்கு வழங்கும் செய்தி என்ன என்பதையும் நாம் உண்மையிலேயே புரிந்துகொள்ள வேண்டும் என்றால் நாம் திறந்த மனத்தோடு அவரை அணுக வேண்டும். அவரிடத்தில் நாம் முழுமையாக நம்பிக்கை கொள்ள வேண்டும். நம் இதயத்தைத் திறந்து வைத்து, அங்கே நம்மோடு பேசுகின்ற கடவுளின் குரலுக்கு நாம் கவனமாகச் செவிமடுத்தால் இயேசுவின் போதனை களை நாம் அறிவளவில் மட்டுமன்றி, நம் இதய ஆழத்திலும் உணர்ந்து புரிந்து கொள்வோம். அப்போது அப்புரிதல் நம் வாழ்வில் ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தும். இவ்வாறு நாம் மனம் மாறி உண்மை மனித நேயம் கொண்ட மனிதராக வாழ வேண்டும் என்பதே இயேசுவின் போதனையின் நோக்கமாகும்.

பயங்கர குற்றவாளிகளும் கொலையாளிகளுங்கூட சிறைகளிலிருந்த படி வேதாகம உவமைகளைப் படித்ததால் மனம் திருந்திய வரலாறுகள் பல உண்டு.

ஒருவனது அயலான் யார் என் பதை விளக்கும் உவமைக் கதை ஆல்பர்ட் ஸ்வைட்சர் போன்ற மிகச் சிறந்த மருத்துவர்களை ஆபிரிக்க மக்களுக்குச் சேவை செய்யத் தூண்டியது. எனவே உவமைக் கதைகள் நம்மை கவர்ந்து இழுக்கும் உண்மைத் தன்மையுடை யவை. மனத்தில் ஆழமான சித்திரம் ஒன்றை தீட்டி விடுவதால் நம்மை நல்வழிப்படுத்துவதுடன் மற்றவர்களுக்கும் அவை போதனை செய்வ தற்கு ஏற்ற ஊடகமாக உள்ளன. அந்த உவமைக் கதைகள் பொதுவான வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதோடு வாழ்க்கையின் யதார்த்தத்தையும் பிரதிபலிக்கின்றன. அதன் விளைவாக அவை மிக ஆழமான தாக்கத்தை வாழ்வில் ஏற்படுத்துகின்றன.

ஒருவர் நிலத்தில் புதைந்திருந்த புதையல் ஒன்றைக் கண்டுபிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்து விட்டு மகிழ்ச்சியுடன் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அந்த் நிலத்தை வாங்கிக் கொள்கிறார். விண்ணரசு இப் புதையலுக்கு ஒப்பாகும். ஒருவருக்குக் கிடைக்கும் மிகப் பெரிய புதையல் கிறிஸ்துவின் உறவும் நட்புமாகும். நற்செய்தி விலை மதிப்பில்லாப் புதையல். கிறிஸ்துவின் அன்பு



நம்மை கிறிஸ்துவாகவே மாற்றும் சக்தி கொண்டது. தமது உடைமைகளையெல்லாம விற்று விட்டு புதையல் மறைந்திருக்கும் நிலத்தை வாங்குவது போல, ஒருவர் கிறிஸ்துவுக்காக தம்முடைய எல்லாவற் றையும் இழக்க நேரிடலாம். இருப்பினும் இயேசுவையே பெரும் செல்வமாகப் பெற்ற மகிழ்ச்சியில் நாம் இழப்பது ஒரு சிறு துரும்பேயாகும்.

கிறிஸ்துவுக்கும் நம்மைச் சீடர்களாகப் பெறுவதில் மகிழ்ச்சிதான். கிறிஸ்துவுக்காக நான் அனைத் தையும் குப்பை எனக் கருதுகிறேன் என மகிழ்ச்சியோடு முழங்குகிறார் தூய பவுல். நான் வாழ்ந்தால் கிறிஸ்துவுக்காக, நான் இறப்பதும் எனக்கு ஆதாயமே. புதையலைப் பார்த்தவன் சென்றான், தனக்கு உள்ளவற்றையெல்லாம் விற்று வந்தான், நிலத்தை வாங்கித் தனதாக்கினான். இறை அரசும் அவ்விதம் ஒப்புவமையில்லாததும் விலை மதிப்பில்லாததுமான புதையல் என்பதை இந்த உவமை காட்டுகிறது.

உயர்ந்த குறிக்கோளுக்காக நாம் எதையும் தியாகம் செய்யத் தயங்கக் கூடாது. நாம் அனை வருமே வாழ்வில் புதையல் தேடும் ஒருவரைப் போல முழுமையான உறுதியோடு செயற்படவேண்டும்.

நாம் நாளும் உயர்ந்த மனிதர்களாக வாழ முயன்று வெற்றி பெற்றால் அது வாழ்க்கையில் நாம் பெறும் மாபெரும் வெற்றி யேயாகும்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

துரோகப் புரட்சி
நாளுக்கு நாள்
நகர்த்தப்படும்
துரோகப்புரட்சிக்கு
நாதியற்ற
விதியின் வாழ்க்கை
அடித்தளமிடுகிறது
காட்டிக் கொடுப்புக்காக
நடத்திய கைம்மாறுகள்
வெளியில் கேட்காத
வேட்டுக்களாய்
சுட்டுவிடப்பட்ட
சுயநலக் குண்டுகளாய்
சுற்றித் திரியும்...
அறிந்து பார்
"அ" கரம் தொடக்கம்
உன்னறிவின்
அனுபவம் வரைக்கும்
புறந்தள்ளப்பட்ட
அலைகள் இவை
நீயும் மாறியிருப்பாய்
நினைவுகளை
புரட்டிப்பார்...
எந்தப் புரட்சிக்கு
எழுத்தாணியாய் இருக்கிறாய்
என்று....

பருத்திதாசன்

வாழ்க்கை இப்படித்தான்
கண்கள் விழியோரமாய்
கசியும்
கண்ணீர்த்துளி
இதயத்தின் அடியில்
இல்லாத சோககீதம்
தினம் தினம்
வந்து போகும்
வாழ்க்கைப் பாதையிலே
வற்றா ஜீவநதி துன்பம்தான்
விதியை வெல்லும் மதி
இருந்தால் போதும்
உலகம் எம் கையில்
வீழும் எம் காலடியில்
கடல் எனும் வாழ்க்கையில்
மிதக்கிறோம்
இன்னலும் துன்பமும்
இடைவிடாது தொடரும்
கரை சேர்வதும்
மூழ்கி மடிவதும்
அவரவர் கையில்

பு.பிரசாந், அல்லைப்பிட்டி

எனது விதி
பேசாததென்றல்
ஊமையான கடலலை
சிந்து போன மேற்கு வானம்
இருண்டு போன மனம்
பார்த்த கண்களில் தூசி
பாதைகளில் முட்கள்
நடக்க முடியாத உணர்வுகள்
கலங்கிய உள்ளம்
வாலில்லாத பட்டம்
வான் வீதியில் குத்துக்கரணம்
அறுந்து போன நூல்
அடங்கிப் போன இதயம்
உனக்காக என்று சொன்னவன்
என்- தோழியிடம் கொடுத்தான்
நான்- நம்பியிருந்த இதயத்தை
மாறிவிட்டான்- என்னை
ஏமாற்றி விட்டான்
காற்றோட்டம் இல்லாத
நாலுபக்க சுவருக்குள்
கண்களை மூட -நாட்கள்
எண்ணுகிறேன்- இது
எனது விதி-!

வீ.அருள்ராஜா, பாலிநகர்
வவுனிக்குளம்

## இமயம் தொட...

புரிந்துணர்வுகளை
உன்னுள் முடுக்கிவிடு
தொடரும் என்பதற்கு
முற்றுப்புள்ளியிட்டு
முடிவுகளை கையில் எடு
உன் முடிவுகளை
மூத்தோரிடம் முன்மொழி
அவர் அறிவுரைதனை அறி
வேகத்திலும்
விவேகம் வேகமானது

மாவை. நா. கஜேந்திரன்

பாசப்பிணைப்பு
சுகங்கள் சுமையாகி
இன்பங்கள் துன்பமாகி
பாசம் வேசமாகி
நான் தவளும் வேளைதனில்
எந்தனை ஆதரிக்கும்
தெய்வமே நீங்கள்
மரணத்தை நோக்கி- என்மனம்
செல்லும் போதெல்லாம்
அதை மாற்றி வைத்தாய்
என் வாழ்வின் துணை நீரே
நம் பாசத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க
காலத்தால் முடியுமாயின்
எம்மோடு கை குலுக்கிக் கொள்ளட்டும்
இல்லையேல்- எம்மை
கடைசிவரை காலமேனும்
கை கோர்க்கச் செய்யட்டும்.

ஜெ.கிருத்திக், மாவை.

# மௌனத்தின் தேடல்-214



இழி நிலை வேண்டாம்
பிராணம் உள்ளவரை
தேசம் நேசித்த ஜீவன்களுக்கு
செலுத்தும் மரியாதை
தடுக்கும் இழி நிலை
இனியும் வேண்டாம்
எம் தேசத்திற்கு

சோ.சிவகுமாரன்

நீயல்லவோ உழைப்பாளி
கலியுக அற்புதனே...
உடல் ஊனத்தால்
தாழ்ந்து நின்றாலும்
உன்னத உழைப்பால்
உயர்ந்து நிற்கிறாய்
உழைப்பில் ஊனமாகியுள்ள
எம்மவர் மத்தியில்....!!!

த.மோகனரூபன்,
(யா.விக்ரோறியா கல்லூரி)

மறவாதே
காலம் மாறிப்
போனாலும்
கால்கள் மறைந்து
போனாலும்
காயம் கடந்து...
கடமையால் உயர்ந்த
உங்களை ஒரு போதும்
மறவாதே எங்கள்
நெஞ்சம்

பு.பிரதீபா.

உரிமைக் குரல்
கேட்டுப் பார்த்தோம் கிடைக்கவில்லை
அடித்துப் பார்த்தோம் கொடுக்கவில்லை
ஆதலால் மரியாதை செய்கின்றோம்
எம் உரிமையை வென்றெடுப்பதற்காய்

நடுப்பக்க நித்தி.

ஊன்று கோல்
மாறாத
மரியாதைகளுடன்
மறக்க முடியாத
போரின் வடுக்கள்
ஊனம் மட்டுமே இறுதியில்
ஊன்று கோலாக...!

இராசி, தாவடி.

புதிய மனிதன்
விதியின் சதியை எண்ணி
கதிகலங்கி நிற்காமல்
பாதி உடலோடும்
பதவியில் அமர்ந்தோ
அதி செல்வத்தால் உயர்ந்தோ
சாதித்த இந்த மனிதன்
மதிப்பிற்குரியவர் மட்டுமல்ல
பதிப்பில் வெளிவந்து
மதியால் வெல்லும் விதியை
உணர வைக்கின்றார்.

க.அபர்ணா, வட்டுக்கோட்டை.

மரியாதை
வன்முறை தீதென் றுணர்ந்த
வல்ல ஜனநாயக படையினரே
சமநீதி சமத்துவமுணர்ந்த
சிந்தனை மிகு தலைவனுக்கும்
ஆயுத மோதலே
அழிவாகும் என்போர்க்கும்
அன்புக் கரமுயர்த்தி
மரியாதை செய்யுங்கள்.

வீ.விினிஸ்,பண்டத்தரிப்பு

மாற்றம் பெரிது
கடமை செய்தே
கால் தேய்ந்த பின்னும்
உடல் சோர்ந்து ஓடிவிடாமல்
மனம் தேற்றி தலை தூக்க
கண்நோக்கி
நாற்தலையும்
தலைவணங்கும்
தோற்றம் ஒன்று தேற்றமல்ல
என்றே...

பு.பிரசாந்,
அல்லைப்பிட்டி.

இயல்பு நிலை
ஒரு மனிதனின் முகத்திற்கு
முன்னால் முகஸ்துதி
செய்வதும்
அவர் போனபின்பு அவரின்
முதுகிற்கு பின்னால் வசை
பாடுவதும் இன்றைய
மனிதர்களின்
இயல்பாக போய்விட்டது.

யோ.காண்டீபன்,
மானிப்பாய்.

விஸ்வரூபம்
அங்கம் இழந்து
துன்புற்று துவண்டழும்
மனிதரிடையே
வியப்பளிக்கும்
விஸ்வரூபம்தான்
இந்த மனிதன்

வே.வே.தரணிகா,
மருதங்கேணியூர்

வீரம்
பயிற்சிகள் எடுத்து-பல
பதக்கங்கள் குவித்து-பல
பதவிகள் வகித்தாலும்
உண்மையாக வீரனின்
வீரமென்பது
அவன் மனத்துணிவு
மட்டும் தான்
தலைவணங்குவோம்....!

உதயரூபன், நயினை.

# மௌனத்தின் தேடல் -215



அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 30.07.2014 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடனடியான வேலைவாய்ப்பு

வேலையில்லாப் பிரச்சினையா? உங்கள் எதிர்காலம் சந்தோசமாக அமைய உங்களுக்கு ஓர் அரியவாய்ப்பு உடனே அழையுங்கள். உடனடியான வேலை பெறலாம். கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள நவீன தொழிற்சாலைகளில் ஜேம்/கோடியல்/பிஸ்கட்/பால்மா/கிளவுஸ்/ஆடை/சொலட்/புத்தகம் (மற்றும் பல) போன்றவற்றுக்கு ➢ உற்பத்தி ➢ லேபல் ➢ பொதியிடல் ➢ தரம்பிரித்தல் பிரிவுக்கு 18-50 ஆண் - பெண் தேவை. உணவு தங்குமிடம் சகாய விலைகளில் நண்பர்/குழுக்கள்/தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில் (சிங்களம் அவசியமில்லை) சம்பளம் 18000/-, 25000/-, 36000/- வருகை அன்றே வேலைக்கு செல்லலாம்.

077 111 6770 (C-7998)

## குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply

(C-8055)

**ஹேலீஸ் ட்ரவல்ஸ் & டூர்ஸ்**

*உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!*

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818

Skyline

## WALK IN INTERVIEW

Bright Inn
A/C & Non A/C Rooms Available

கொழும்பில் இயங்கும் Tourist Board Approved Hotel ஒன்றிக்கு பணியாளர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

Cashier (Male)
Receptionist (Male)
Store Keeper
Drivers
Cleaners
Wash up
Stewards
Plumper & Electrician
Kitchen Supervisior

(C-800)

ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் ஏதாவது ஒரு முகவரிக்கு இம் மாதம் 28-ம் திகதி முதல் ஆகஸ்ட் 01-ம் திகதி வரை காலை 9.30 மணி தொடக்கம் பி.ப. 1.00 மணிவரை இடம்பெறவுள்ள நேர்முக தேர்விற்கு தயாராக வரவும்.

Bright Inn
No.51, Sivan Road,
Thirunelveli, Jaffna.
021 222 1889, 0777 983933

No.214/2 Messenger
Street, Colombo - 12
Tel - 011 232 9664,
011 724 2233

சூரிய மின்கலத்துடன் மின்குமிழ், மின்கலம் மற்றும் தேவையான உதிரிகளுடன் ரூ.9000.00 கைத் தொலைபேசிகளிற்கான மின்னேற்றியுடன் ரூ 9,500.00
**Solar panel, battery and light.** (10 w panel, 7 A UPS battery, Charge controller, 9W LED bulb)
**Rs 9000.00 With Mobile phone charger Rs 9500.00**

| | |
|---|---|
| 50W solar panel | Rs. 10,000 |
| 10 A Charge controller | Rs. 2500.00 |
| 9W LED bulb 12 V DC | Rs. 1100.00 |

தொடர்புகளிற்கு : யாழ்ப்பாணம் 0779655381


மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். தேவையான தொழில்நுட்ப பயிற்சிகளும் வழங்கப்படும்.

0779688330

DATA ACQUISITION DESIGN
14, Ebenezer Place, Dehiwela
Telephone : 0112 734743
For PLCs, AC motor inverters (VFD), industrial sensors, all kind of electrical panel meters and all industrial controllers.

(7128)


# எஸ்.எஸ்.சி டெஸ்ட் : இலங்கை அணி வலுவான நிலையில்



தென்னாபிரிக்க அணியுடனான 2-வது டெஸ்டின் 3-ம் நாள் நிறைவில் இலங்கை அணி வெற்றியை பெறுவதற்கான வலுவான நிலையில் உள்ளது.

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையேயான 2-வது டெஸ்ட் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

முதல் இன்னிங்சில் இலங்கை அணி ஜெயவர்த்தனவின் சதத்தின் உதவியுடன் 421 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் 2-வது நாள் ஆட்டநேர முடிவில் 3 விககெட்டுக்கள் இழப்பிற்கு 98 ஓட்டங்களை எடுத திருந்தது. அம்லா 46, டி வில்லியர்ஸ் 11 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று 3-வது நாள் ஆட்டம் நடந்தது. டி வில்லியர்ஸ் 37 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலை யில் பெரேரா பந்தில் ஆட்டம் இழந்தார். அதன்பின் வந்த வீரர்கள் விரைவாக ஆட்டமிழந்தாலும் மறுமுனையில் தென்னாபிரிக்க அணித் தலைவர் அம்லா நிலைத்து நன்று விளையாடி சதம் அடித்தார.

இதனால் தென்னாபிரிக்க அணி பொலோ ஒனை தவிர்த்தது. தென்னாபிரிக்க அணி தமது முதல இன்னிங்சுக்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 282 ஓட்டங்களை எடுத்தது.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ஹசிம் அம்லா 139 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழககாமல் இருந்தார். பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் பெரேரா 5, ஹேரத் 4 விக் கெட்டுக்களை கைப்பற்றினர்.

150 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி நேற்றைய 3-ம் நாள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 11 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன்மூலம் 10 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் 161 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

## புலிகள் போர்...

பட்டிருந்தது.

இந்நிலையில், இத்தகவலை நிராகரித்துள்ள சேர் டெஸ்மன் டி சில்வா, இக்கருத்தரங்கில் தான் பங்கேற்றதாக கூறப்படுவது முற்றிலும் தவறு என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தக் கருத்தரங்கில் பங்கேற்று தான் உரையாற்றியதாக கூறப்படும் அனைத்துமே தவறான தகவல்கள் என்றும், இக் கருத்தரங்கில் பங்கேற்க தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (எ-6)

## பொலிஸ்...

தீவுப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வெடிப்புக்கான காரணம் இது வரை தெரியவில்லை என்றும் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என றும் தெரிவிக்கப்பட்டது. (எ-6,267)

## அரசியல் தீர்வைப்...

குழுவின் அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் இடம்பெற்ற போரின போது இருதரப்பாலும் மேற்கொளளபபட்ட சர்வதேச மனிதவுரிமை மற்றும் மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணையை தொழிற்கட்சி வரவேற கின்றது.

இந்த விசாரணைகள் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு பிரித்தானியப் பிரதமருக்கும், அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கும் தொழிற்கட்சி தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுக்கும்.

இலங்கையை முன்னேற்றகரமான பாதையில் கட்டி எழுப்புவதற்கு முன் நிபந்தனையான இருதரப்பும் ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையான அரசியல் தீர்வைக் காண்பதற்கு ஐ.நா மனிதவுரிமைகள ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி நடத்தப்படும் சர்வதேச விசாரணை ஒரு முதல் நகர்வாக அமையும் என்று இவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொறுப்புக் கூறலை உறுதிப்படுததவும், நல்லிணக்கத்துக்கான அடிப்படைகளை உருவாக்கவும் இலங்கை மீதான சுயாதீனமான சர்வதேச விசாரணை அவசியம் என கடந்த சித்திரைத் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு பிரித்தானிய தொழிற் கட்சித் தலைவர் எட் மிலிபான்ட் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித வுரிமை சட்டமீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என விடுக்கப்பட்ட அழைப்புகளுக்கு பிரித்தானிய தொழிற்கட்சி ஆதரவு வழங்கி வருகின்றது.

இந்தப் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரித்தானிய தொழிற்கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## பொது வேட்...

பண்டாரநாயக்க கருதப்படுகின்றார்.

குற்றப் பிரேரணை மூலம் பதவி கவிழ்க்கப்பட்டது முதல் இதுவரையில் ஷிராணி எந்தவொரு அரசியல் கூட்டத்திலும் பங்கேற்றதில்லை என்பது குறிப்பிடத்கத்கது.

எவ்வாறெனினும், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் யார் என்பது குறித்த இறுதித் தீர்மானங்கள் எதுவும் இதுவரையில் எடுக்கப்பட வில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன சேகா உள்ளிட்டவர்களின் பெயர்களும் பொது வேட்பாளருக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (எ-6)


## தேவை

கட்டிடநிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவரா? இதே அரியசந்தர்ப்பம் மேசன்/பெயின்டர்/தச்சு/கம்பிபாஸ்/செடலின்பாஸ் (1200/-, 1500/-) கையுதவியாளர் (900/-, 1100) உணவு + தங்குமிடம் வழங்கப்படும். தொடர்பு :-
(C-7997) 077 556 1883

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை தும்பளை றோட்டில் பன்னையம்பதியில் நி.பர. ஒன்று குளி 04 விஸ்தீரணமான வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்கு உண்டு (மிகவும் மலிவு விலையில்)
தொடர்புகளுக்கு :-
077 436 6704
(C-7994)

## தவறிவிட்டது

கட்டுடை மானிப்பாயினை சேர்ந்த திருமதி கல்பனா நதிரன் என்பவரின் 887672024V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் பளை புகையிரத நிலையத்திற்கும் யாழ் மாவட்ட செயலகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு :-
(7123) 071 075 7214, 077 104 1455

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
(C-7993)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

பேராசிரியர் மா.சின்னத்தம்பி எழுதிய
**புதிதாக சிந்திப்போம் - சமுதாயத்திற்கான கல்வி**



*என்னும் நூல் விற்பனைக்குண்டு.*
2013 இல் வலம்புரி நாளிதழில் தொடர்ச்சியாக பேராசிரியர் எழுதிய 30 கட்டுரைகளை இந்த நூல் உள்ளடக்கியுள்ளது.
*இப்புத்தகத்தினை வலம்புரிக் காரியாலயத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.*

இல.3, சம்பியன் லேன், (K.K.S வீதிக்கருகில்) கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(6885)
தொடர்புகள்: பேராசிரியர் மா.சின்னத்தம்பி தொ.பேசி.0750714841


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கந்தர்மடத்தில் பலாலி வீதிக்கு அருகாமையில் 10 பரப்பு காணி ஒன்றாகவோ அல்லது பகுதி பகுதியாகவோ விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0758496213

(7092)

## SUN TRAVELS

online indian visa (விசா விண்ணப்பம்) விசா ஏற்பாடுகள் விமான நிலைய போக்குவரத்து சேவை

கைலாசபிள்ளையார் கோவிலடி,
கோவில் வீதி, யாழ்ப்பாணம். 0772259030

(7130)


# கடமை...

களுக்கு தாம் அஞ்சப் போவதில்லை. எவ்வாறெனினும் திடீரென பாராளுமன்றத் தேர்தல்களை நடத்தினால் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறெனினும் ஜனாதிபதி அல்லது பாராளுமன்ற தேர்தல்கள் எப்போது நடத்தப்படும் என்ற திகதிகளை ஜனாதிபதி வெளியிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. சில அமைச்சர்கள் ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (எ-6)


## நிரந்தர தொழில்வாய்ப்பு

இன்றே அழையுங்கள் நிரந்தர தொழில் ஒன்றை பெறலாம். 18-50 வயது ஆண்-பெண் இருபாலாருக்கும் கல்வி/ சிங்களம்/ அனுபவம் எதுவும் அவசியமில்லை. சம்பளம் 18,000/=,25,000/=,32,000/= தொழில் அடிப்படையில் பெறலாம். உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளுடன் வசதி செய்து தரப்படும். கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/கோடியல்/பிஸ்கட்/கிளவுஸ்/ இறைச்சி/டயில்/டயர்/ ஆடை/பால்மா/TipTip போன்ற தயாரிப்புகளுக்கு +உற்பத்தி +லேபல் +பொதியிடல் பிரிவுக்கு உடனடியாக ஆட்கள் தேவை. வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு தொடர்பு:-0775561883

(சி-7996)


# அரசியல்...

முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் இடம்பெறும் தாக்குதலால் குழந்தைகளும் பெண்களும் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நிலைமை தற்போது உக்கிரமடைந்து வருகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் காத்திரமான நடவடிக்கைகளைஐ.நா. முன்னெடுக்க வேண்டும்.

சமாதானம், நாடுகளுக்கிடையிலான ஒற்றுமை ஆகியவற்றை கட்டிக் காக்க வேண்டியதே ஐ.நாவின் பிரதான கொள்கையாகும். எனினும், ஐ.நா. தற்போது அரசியல் மயமாகியுள்ளது. பலஸ்தீன விவகாரத்தில் அதன் அணுகுமுறையும் அவ்வாறே அமைந்துள்ளது. மனித உரிமை விவகாரம் கூட அரசியல் ஆயுதமாக பயன்படுத்தப் படுகின்றது. எனவே, ஐ.நாவின் முறைமை அரசியல் நோக்கம் கொண்டதா என்ற கேள்வி எழுகிறது.

30 வருடங்களாக தொடர்ந்த யுத்தம் முடிவடைந்த பின்பும் நாம் தொடர்ச்சியாகக் கண் காணிக் கப்படுகின்றோம். எமக்கு கால அவகாசம் தேவைப்படுகின்றது என்று அமைச்சர் பீரிஸ் கூறினார். என்றார். (எ-6)


## விற்பனையாகின்றது!

LOGIC

மாணவர்களுக்கான 'விஞ்ஞான முறை'

ஆசிரியர் எஸ்.எஸ்.மனோகரன்

கிடைக்குமிடங்கள்:-
- ✦ BEACON கல்வி நிலையம் வெலிங்டன் சந்தியடி, யாழ்ப்பாணம்.
- ✦ வினைல்ஸ் கல்வி நிலையம் சுன்னாகம்
- ✦ உடுவில்

(C-7984)

## SHADONI COURIER SERVICE

SCS




SHADONI பொதிகள் சேவை

அழையுங்கள் 021 222 8591 077 266 6429

விரைவானதும் நம்பிக்கையானதுமான சேவைக்கு.....

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட அனைத்து நாடுகளுக்கும் 10kg இற்கு மேல் பொதிகள் அனுப்புபவர்களுக்கு விசேட விலைக்கழிவும் அதற்குக் குறைந்த நிறைகளில் அனுப்புபவர்களுக்கு விலைக்கழிவும் வழங்கப்படும்.




எதிர் வரும் 31.07.2014 வரை எமது நிறுவனத்துக்கு வருகை தரும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவும் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்படும்

SHADONI COURIER SERVICE
272, K.K.S Road - Jaffna

(C-7989)

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

- ✱ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- ✱ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- ✱ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- ✱ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

Vivekananda Academy அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 ,0212220393

(C-7986)

## மாபெரும் ஆடித் தள்ளுபடி

யாழ். நகரில் முதன் முறையாக ஒரே கூரையின் கீழ் அனைத்து கம்பனிகளினதும் பொருட்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள ஒரே இடம்....




அலுவலக தரமான அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்குத்தேவையான மர, இரும்பு, அலுமினிய, பிளாஸ்ரிக் தளபாடங்களை எங்குமில்லாதவாறு வியக்கத்தக்க விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்

அழையுங்கள் 077 358 3879 077 831 4201

PABCO Nilkamal ARPICO Piyestra DAMRO

இல: 15, சிவப்பிரகாசம் வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-7990)

## சிங்கர் தரும் இரட்டைச் சலுகைகள்

- ✱ விலைக்கழிவு
- ✱ வட்டியின்றிய இலகுதவணைக் கொடுப்பனவு



35,999/= (Fully Automatic - 7 kg)

- ✱ பழைய ஒன்றுக்கு 10,000 ரூபா அல்லது 8,000 ரூபா விலைக்கழிவு
- ✱ வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

21,249/= (Semi Automatic - 6 kg)

- ✱ 3,750 ரூபா விலைக்கழிவு
- ✱ வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

அனைத்து சலவை இயந்திரங்களுக்கும் 4 வருட உத்தரவாதம்

SAMSUNG சலவை இயந்திரங்களுக்கு 25000/= வரை மாற்று முறை விலைக்கழிவு

lenovo



lenovo LEN - NB - - i3 - 4G
Intel Core i3 (4th Gen)
15.6"HD Display, 4 GB, 500 GB
DVD RW, Webcam, Wifi, B.T
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
ரூ. 88,899/=
காசுக் கொள்வனவுக்கு ரூ. 8,890/= விலைக்கழிவு

LEN - NB -i5 (4th Gen)
Intel Core i5 (4th Gen)
15.6"HD Display,
4 GB, 500 GB
DVD RW, Webcam, Wifi, B.T
3 வருட உத்தரவாதம் இலவசம்
~~ரூ. 99,799/=~~
ரூ. 89,819/=



SINX - 243AT
Intel celeron Dual Core
14" Display, 2 GB, 320 GB
DVD RW, Wifi, Webcam,
3 வருட உத்தரவாதம் இலவசம்
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு ரூ. 4,000/= விலைக்கழிவு
ரூ. 49,999/=

HP- i3-14NB
Intel Core i3 (4th Gen)
14"HD LED Display, 2 GB,
500 GB HDD, DVD RW,
Wifi, Webcam,
ரூ. 64,999/=



HP- i3-15NB
Intel Core i3 (4th Gen)
14"HD LED Display, 2 GB,
500 GB HDD, DVD RW,
Wifi, Webcam, ரூ. 93,399/=
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு ரூ. 13,400/= விலைக்கழிவு

கடனட்டைகளுக்கு 24 மாத வட்டியின்றிய கொடுப்பனவு வசதி (நிபந்தனைக்குட்பட்டது)

(C-7962)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | சுன்னாகம். | மானிப்பாய். | சங்கானை | சாவகச்சேரி | கொடிகாமம் | நெல்லியடி. | பருத்தித்துறை | கிளிநொச்சி | முல்லைத்தீவு |
| 021 222 5408 | 021 224 0555 | 021 225 5343 | 021 225 1100 | 021 227 0197 | 0776433888 | 021 226 4937 | 021 226 3411 | 021 228 0199 | 021 229 0180 |

www.singers.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.